9 சிறுகதைகள்

# சிறுகதை மஞ்சரி

மாதஇதழ்

ISSUE NO 8- MAR 2021 - £4



வளர்ந்த, வளரும் படைப்பாளர்களுக்கான களம்

# பங்காளர்கள

சிறுகதை மஞ்சரி



பேராசிரியர்
மௌனகுரு
பக்கம் 4



செ. கதிர்காமநாதன்
பக்கம் 6



ச. ஜெயந்தினி
பக்கம் 11



சமரபாகு
சீனா உதயகுமார்
பக்கம் 13



குரு.
சதாசிவம்
பக்கம் 18



ரஞ்சிதா
பக்கம் 23



கர்ணன்
சின்னத்தம்பி
பக்கம் 26



சூசை
எட்வேட்
பக்கம் 28



கவின்மகள்
பக்கம் 32



திருமலை
சுந்தா
பக்கம் 34



உரும்பிராய்
எம். ரி. செல்வராசா
பக்கம் 35



நந்தினி
சேவியர்
பக்கம் 40

# ஒரு நிமிடம் நில்லுங்கள்....



சிறுகதை மஞ்சரியின் எட்டாவது இதழ் புதுப் பொலிவுடன் உங்கள் முன் வருகிறது. ஏற்கனவே அறிவித்தபடி மஞ்சரி மாத இதழாக மாறிவிட்டது. பல சிறுகதைகள் வருகின்றன.
எல்லாவற்றையும் வாசிக்கவேண்டும். செய்ய வேண்டிய திருத்தங்களைச் செய்யவேண்டும். தமிழ் வசனங்களைச் சரியாக எழுதுங்கள். எழுத்துப் பிழை இல்லாமல் அனுப்புங்கள். மக்களின் பிரச்சினைகளைச் சிந்தனையோடு அணுகுங்கள். ஒரு சிறுகதை மனித மனங்களில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது. ஆகவே எழுதும்போது அவதானம் வேண்டும். எழுதியதை அனுப்பமுன் பல முறை படித்துப்பாருங்கள். உங்களுக்குத் திருப்தி வந்த பின் அனுப்புங்கள். எல்லாருக்கும் இடம் கொடுப்போம். அமைதியோடு காத்திருங்கள். உங்களுக்காகத்தானே மாத இதழாக மாற்றியுள்ளேன்.
வைரசின் தாக்கம் மக்களை நிலைகுலைய வைத்துள்ளது. மரணம் வெகு அருகில் நின்று நகைத்துக் கொண்டிருக்கிறது. எதையும் தீர்மானிக்க முடியாதபடி மனித இனம் கலங்கிக் கொண்டிருக்கிறது. அரசியல்வாதிகள் பொறுப்பின்றி இந்த நேரத்திலும் பதவிக்காக அலைந்து கொண்டிருக்கிறார்கள். இனவாதமும் மதவாதமும் மக்களை விழுங்கிக் கொண்டிருக்கின்றன.
ஆலயங்களின் கதவுகள் பூட்டியபடியே ஆராதனைகள் நடைபெறுகின்றன. கடவுளைப்பற்றி ஆயிரம் கேள்விகள் எழுகின்றன. பதில் கிடைப்பதில்லை.
கோயிலுக்குப் போகாமலே வீட்டுத் தோட்டத்தில் நின்றபடி மக்கள் அரோகராச் சொல்கிறார்கள். கடவுள் எங்கும் எதிலும் இருப்பார் என்பதை மக்கள் புரிந்து கொண்டது போல் தெரிகிறது.
உலகம் புதியதொரு திட்டமிடலின் வழியே நகர வேண்டிய கட்டாய தேவை உருவாகியுள்ளது. இது தவிர்க்க முடியாததும் கூட.
இலக்கியங்களும் மாற்றமடைய வேண்டிய தேவை உருவாகி உள்ளது. உள்ளடக்கத்தில் அமைப்பில் அளவில் மாற்றம் தேவை என்பது காலத்தின் கட்டாயம்.
என்ன மாற்றம் என்பதை அறிய வேண்டியதுதான் இப்போ எம்முன் உள்ள பணி.
மக்களோடு சேர்ந்து பயணிப்போம். சேர்ந்து சிந்திப்போம். மனிதாபிமானத்தை எமக்குள் வளர்ப்போம்.
எதையும் ஆழமாகச் சிந்தித்துச் செயற்படுத்துவோம்.
போய்வாருங்கள்.
மீண்டும் ஒன்பதாவது மஞ்சரியோடு சந்திப்போம்.

மு. தயாளன்

**சிறுகதை மஞ்சரி 7 இன் சிறந்த மூன்று சிறுகதைகள்**

1. கலைந்தும் கலையாத - விமல் பரம்
2. தண்ணீர்க் கிட்டங்கி - கிருத்திகா ஐயப்பன்
3. முரண்பாடு - குணறுபேஸ்


**நன்றிகள்..**

பங்காளர்களுக்கும் இச் சிறுகதை மஞ்சிரியை ஒப்பு நோக்கித் தந்த திருமதி ஆர்த்தி துவாரகனுக்கும் அட்டையை வடிவமைத்த என் மகன் ரமணனுக்கும் சித்திரங்களை அழகுற வரைந்த கைலாசநாதருக்கும் அட்டைக்கான படத்தைத் தந்துதவிய குலசேகரன் வசீகரனுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.


**1000 பேரை இணைப்போம்......**

தாய்மண்ணில் உள்ள பாடசாலைகளுக்கு மஞ்சரியை அனுப்புவதற்கு புலம்பெயர் மண்ணிலுள்ளவர்கள் பங்கு பெறலாம்.
லண்டன்: ஒரு பாடசாலை ஒருவருடம் **£5.00**
ஐரோப்பா: ஒரு பாடசாலை ஒரு வருடம் **6 Euro**
மற்றைய நாடுகள்: ஒரு பாடசாலை ஒரு வருடம் **$10**


அட்டை வடிவமைப்பு: ரமணன்
அட்டைப்படம் : குலசிங்கம் வசீகரன்

**பிரதம ஆசிரியர்** : மு. தயாளன்
**உதவி ஆசிரியர்கள்:** செல்வி த. சரண்யா, மைக்கேல் கொலின்
**ஆலோசகர்கள்** : Dr P. இராசையா , பேராசிரியர் செ. யோகராசா



**தொடர்பு முகவரி:**
**Sirukathai manjari, 14 Brands Road, Berkshire SL3 8QP,UK**
sirukathai1@gmail.com, +447505455811
**Sirukathaimanjari 91, barathi street, Trincomalee, Srilanka**
sirukathai1@gmail.com, +94765554649



**சந்தா விபரம்:**
**Srilanka:** 800Rs/Year
Bank detail : Mrs Thanabalasingam, Commercial bank, Trinco branch, 8370042817
**England** £20/Year **Europe:** 50 Euro/ year
**Other countries:** $50/year
Bank details: M. Natkunathayalan, Barclays,
Sort code 20-37-15, A/C Number 60389307
IBAN : GB11BUKB20371560389307
SWIFTBIC BUKBGB22

**விநியோகம்:**
யாழ்ப்பாணம்: குலசிங்கம் வசீகரன் , +94 773788795
மட்டக்களப்பு: மைக்கல் கொலின் +94 774338878
திருகோணமலை: த. சரண்யா, +94765554649

# உள்ளடக்கம்...

**1** **ஒரு நிமிடம் நில்லுங்கள்..**
**மு. தயாளன்**

**2** **உள்ளடக்கம்**

**3** **வாசிப்பனுபவம் 5**
**மு.தயாளன்**
இம்முறை புலோலியூர் ஆ. இரத்தினவேலோன் எழுதிய நிலாக்காலம் சிறுகதைத் தொகுப்பிலிருந்து வேட்டை கதை.

**4** **டொமினிக் ஜீவா**
**பேராசிரியர் சி. மௌனகுரு**
காலமான எழுத்தாளர் டொமினிக் ஜீவாபற்றி உணர்வுபூர்வமாக எழுதப்பட்ட கட்டுரை.

**6** **வெறும் சோற்றுக்கே வந்தது**
**சிறப்புச் சிறுகதை – செ. கதிர்காமநாதன்**
ஒரு வேலைக்காரச் சிறுமியின் மன உணர்வுகளை மிக அழகாகப் படம் பிடித்துள்ளார்.

**11** **அப்பாவின் சைக்கிள்**
**ச. ஜெயந்தினி**
ஒரு பழைய சைக்கிளின் முக்கியத்துவத்தை அதன் பயன் பாட்டை மிக அழகாக வாழ்க்கையோடு இணைத்துள்ளார்.

**13** **கரிகாலன்**
**சமரபாகு சீனா உதயகுமார்**
தலைமைத்துவப் பண்பை நடைமுறை உதாரணத்தோடு விளக்கும் கதை.

**18** **சுமைதாங்கி**
**குரு. சதாசிவம்**
ஒரு பெண்ணின் வாழ்க்கை சாதகத்தால் படும் துயரத் தையும் பெற்றாரின் கடைசிக்காலத்தில் பிள்ளைகளின் தடுமாற்றத்தையும் அழகாகத் தந்துள்ளார்.

**23** **பசுமையைத்தேடி**
**ரஞ்சிதா**
ஒரு ஆசிரியரின் சுற்றாடல் சம்பந்தமான கரிசனையை தெளிவாகக் கொண்டு வரப்பட்ட கதை

**26** **சம்பரி அப்பா**
**கர்ணன் சின்னத்தம்பி**
மனைவி இறந்தபின் ஓர் ஆணின் நிர்கதியான நிலை உள வியல் ரீதியாகப் பார்க்கும் கதை

**28** **கொடுத்தார்க்குக் குறைவில்லை**
**சூசை எட்வேட்**
இனமத வேறுபாடின்றி ஒருவருக்கொருவர் கொடுத்துவாழ்தல் சிறப்பெனக் கூறி நிற்கிறது.

**32** **பெண்ணாகவே..**
**கவின்மகள்**
ஒரு தாயின் ஏக்கமும் பிள்ளைகளின் உதாசீனமும் அதன்பின் இறந்தபின் மீண்டும் பெண்ணாகவே வருதலையும் உள வியல் கண்கொண் கொண்டு பார்த்துள்ளார்.

**35** **சுயநலம்**
**உரும்பிராய் எம்.ரி. செல்வராசா**
வயது போனபின் தமது சுதந்தரததை இழக்கும் பெற்றாரின் மனநிலையைப் படம் பிடித்துள்ளார்.

**40** **எழுத்தின் அனுபவம்....**
**நந்தினி சேவியர்**
50 வருட கால எழுத்துலக அனுபவங்கள்

**எழுத்தாளர் கவனத்திற்கு.......**
உங்களிடமிருந்து ஆக்கங்களை எதிர் பார்க்கிறோம். வாழ்க்கையோட்டத்தில் எதிர்ப்படும் பிரச்சினைகளை அழகு சேர்த்துக் கதைகளாக்கி அனுப்புங்கள். கதைகளை அனுப்பும்போது உங்கள் தபால் முகவரி வங்கிக் கணக்கு விபரம் ஆகியவைகளை அனுப்பி வையுங்கள்.
மு. தயாளன்

# வாசிப்பனுபவம் 5

**தொகுப்பு: நிலாக்காலம்**

**ஆசிரியர்: புலோலியூர் ஆ. இரத்தினவேலோன்**

**கதை: வேட்டை**

,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,

**மு.தயாளன்**

...................................

இன்று இரத்தினவேலோன் அவர்களின் வேட்டை சிறுகதையைப் படித்தேன்.
மண்வாசனை நிறைந்த அழகான கதை. ஒரு கதை சிறப்படைவது அது சொல்லப்படும் முறையில்தான். எந்த ஒரு கதையிலும் இயங்கு நிலைப் பாத்திரங்களும் உறைநிலைப் பாத்திரங்களும் கதையை வழிநடத்திச் செல்கின்றன. இயங்கு நிலைப் பாத்திரங்கள் கதையின் உயிர்நாடியான கருவை வழிநடத்திச் செல்கின்றன. இப்படி வழி நடத்திச் செல்லும்போது ஒரே பாத்திரமாக இருந்தால் முழுக்கதையையும் அந்தப் பாத்திரம் அணைத்துக் கொள்கிறது. சிலவேளைகளில் ஒன்றுக்கு மேற்பட்ட பாத்திரங்களாயின் அவை கதையைப் பல பிரிவுகளாகப் பிரித்து கதையைத் தாங்கிச் செல்கின்றன.உறைநிலைப் பாத்திரங்கள் கதையைத் தொய்ய விடாமல் ஆங்காங்கே முட்டுக் கொடுத்து நகர்கின்றன. சிறுகதைகளைப் பொறுத்தவரை ஒன்று அல்லது இரண்டு இயங்குநிலைப் பாத்திரங்களும் மூன்று நான்கு உறைநிலைப் பாத்திரங்களும் அக் கதையைச் சரியான பாதையில் நகரச் செய்கின்றன. கதை எவ்வித தங்கு தடங்கலுமில்லாமல் அழகாக நகர்கிறது. தேவையான இடங்களில் கதைக்குரிய அழகுணர்வு தெளிக்கப்பட்டுள்ளது.
வேட்டை எனும் இக்கதை பலவிடயங்களைத் தொட்டு நிற்கிறது. இக் கதையில் பகவதியும் அவரின் மகளான மனோன்மணியும் இயங்கு நிலைப் பாத்திரங்களாக உள்ளனர். கதையின் தலைப்பகுதியை பகவதியும் வால்பகுதியை மனோன்மணியும் தாங்கியுள்ளனர்.
பகவதியின் மூலமாகக் கிராமத்தவர்களின் வாழ்க்கை முறைமையையும் திருவிழாக்களையும் அழகாகக் காட்டியுள்ளார். இங்கு உறைநிலைப் பாத்திரமாகவரும் பகவதியின் கணவனது மரணம் இனமுரண்பாட்டின் காரணமாகக் காடையர்கள் மூலமாக நடைபெறுவதைக் காட்டுவதின் மூலம் சூழ்நிலையின் தார்ப்பரியம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. கதை நடைபெறும் காலம் நாட்டின் நிலைமை இப் பாத்திரத்தினால் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. கணவனின் மரணத்திற்குப் பின் தனி ஒருவளாக நின்று தன் மகளை வளர்த்து ஆளாக்கி வெளிநாட்டு மாப்பிள்ளைக்குக் கட்டிக் கொடுப்பதின் மூலம் இன்னொரு செய்தி சொல்லப்படுகிறது. வெளிநாட்டிலிருந்து வரும் இளைஞர்களைத் திருமணம் புரிவதால் தங்களது பிள்ளைகள் வாழ்வார்களென்ற நம்மவரின் மனோபாவம் மனோன்மணியை சுவிஸ் மாப்பிள்ளைக்குக் கட்டிக் கொடுப்பதன் மூலம் ஒரு செய்தியாக ஆசிரியர் தந்துள்ளார். இந்த மனோபாவம் எப்போதும் நித்தியமானதல்ல என்பதை உணர்த்துவதற்காக மனோன்மணியின் வாழ்க்கை முறிவடைவதன் மூலமாக எதிர்மறையான செய்-தியை வழங்கியுள்ளார். மணவினைப் பிரிவினையை மனோன்மணியே முடிவு செய்வதாகக் காட்டுவதன் மூலம் பெண்ணின் எழுச்சியைக் காட்ட முனைகிறார். கணவனே கண் கண்ட தெய்வம் என்பதுபோன்ற கருத்துணர்வுகள் மனோன்மணியால் தூக்கி எறியப்படுவது போன்று காட்டுவதால் பெண்ணின் இன்னொரு வடிவத்தைக் காட்டுவதற்காக அம்மனின் வடிவத்தை முன்னிறுத்திக் கதையை முடித்தமை பாராட்டுக்குரியதே.
இப்படிப் பல செய்திகளைக் கொண்டு அழகான சிறுகதையைப் பின்னிய இரத்தினவடிவேலனை எப்படிப் பாராட்டினாலும் தகுமே. தெளிவத்தை யோசப் அவர்கள் முன்னுரையில் கூறியதைப் போல உலகத்தரத்தின் உச்சத்தைத் தொட்ட இவரின் படைப்புகளில் இதுவும் ஒன்றே. மேலும் மேலும் பல படைப்புகளை இவர் இலக்கிய உலகுக்குத் தரவேண்டும். காத்திருக்கும் வாசகர்களை ஏமாற்றமாட்டார் என்றே நினைக்கிறேன்.

**வாசிப்பதனால் மனிதன் பூரண மனிதனாகிறான்**

டொமினிக் ஜீவா

# ஓங்கி ஒலித்த உணர்ச்சிக்குரல் ஓய்ந்து போனது

-பேராசிரியர் மௌனகுரு-



தன் நினைவுகள் இழக்கும் வரை சமத்துவம், மானுடம் சாதிபேத எதிர்ப்பு என ஓங்கி ஒலித்த ஒரு பெரும் குரல் இன்று ஓய்ந்து விட்டது. ஓயும் போது அக் குரலுக்கு 93 வயது அக்குரலின் உரிமையாளார் மல்லிகை ஜீவா அவரது உடலும் உளமும் இயங்க இடம் கொடுத்த காலம் வரை அவரது உரத்த அந்தக் குரல் இலக் கிய கூட்டங்களில் ஓங்கி ஒலித்துக் கொண்டேயிருந்தது. அது பிற்காலத்தில் தனித்துக்கேட்டவலிமை மிகுந்த ஒற்றைக் குரல். தூக்கி எறியப்படமுடியாத உணர்ச்சிக்குரல் நீண்ட இரு கரங்களையும் மூடிக்கிடக்கும் அந்த வெள்ளை ஜிப்பா கைகளை மடித்து விட்டு அவர் பேசத் தொடங்குவார், மேடையில் தோன்றும் அவர் சபையோரை ஒருமுறை பார்ப்பார். அப்போது வெள்ளை உடை அணிந்த அமைதியான ஓர் மனிதராகத் தோன்றுவார்.

மென்மையாகத் தாழ்ந்த குரலில் அப்பேச்சு தொடங்கும். பேச்சின் இடையில் தான் எதிர்கொண்ட அனுபவங்களில் ஓரிரண்டை காட்சிகளாக விவரிப்பார்

பின்னர் நிறுத்தி நிறுத்தி சிலவற்றை அழுத்திக் கூறுவார்

அவரது முகம் பேசும்
கண்கள் பேசும்
கைகள் பேசும்
குரல் பேசும்
புருவங்கள் பேசும்
நெற்றிப்பொட்டிலும் கழுத்திலும்
நரம்புகள் புடைத்து மினுங்கும்

பேச்சை மெதுவாகத்தான் ஆரம்பிப்பார், ஆனால் அதன் விசை மெல்ல மெல்லக் கூடும். குரல் உயர்ந்து உயர்ந்து சென்று உச்சக்கட்டத்தை அடையும்.

பேச்சின் முடிவில்இடி இடித்து ஒரு பெரும் மழை பெய்து முடிந்தது போல இருக்கும். கேட்போருக்கு அது ஓர் உணர்ச்சிகரமான பேச்சாக இருக்கும்

“நான் பாசாணத்தில் புழுத்த புழு. எல்லாக் கொடுமைகளையும் எதிர்கொண்டு வளர்ந்தவர்கள் நாம் எதுவும் எவரும் எங்களை ஒரு போதும் வீழ்த்திவிட முடியாது”

எனும் இக்கருத்தை அவர் பலர் கூடியுள்ள பெரும் சபை யில் அஞ்சாது எப்போதும் கூறுவார். தான் இளம் வயதில் அனுபவித்த சமூகக் கொடுமைகளை சாதி அடக்கு முறைகளைக் கதைகள் ரூபமாகக் காட்சி ரூபமாக விலாவாரியாக விவரிப்பார்

அன்றைய இளம் தலைமுறை அனுபவித்த இவற்றை இன்றைய இளம் தலை முறை அறியார்.

முதன் முதல் அந்தப் பேச்சைகேட்போருக்கு ஓர் உணர்ச்சி பிழம்பான மனிதராக ஜீவா தோன்றுவார்

அந்தக் குரலுக்கு அஞ்சிய பல “பெரியவர்” களையும் அறிவாளிகளையும் சங்கடத்தோடு உடலை நெளித்து கொண்டிருந்த சனாதனிகளையும் கண்டிருக்கிறேன்

எல்லோர் மத்தியிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்திலும் சிறப்பாகப் பின்னாளில் கொழும்பிலும் இப்பேச்சு பிரசித்தம் சபை நாகரிகம் இவருக்கு தெரியவில்லையே எனச் சிலர் கூறுவதனையும் கேட்டுள்ளேன். திருப்பித் திருப்பி இதனையே பேசுகிறாரே எனச் சலிபடைந்தோரையும் அவதானித்துள்ளேன் ஆனால் ஜீவா யாருக்காகவும் தனது அந்த குரலை தனது அக்கருத்துகளை, தனது அந்த உணர்ச்சிக் கோலத்தை மாற்றிக்கொண்டதில்லை.

இலக்கியவாதி ஜீவா என்பதும் அவர் மல்லிகையை 40 வரு டங்கள் நடத்தினார் என்பதும் சிறுகதைகள் எழுதினார் என்பதும் முதன் முதல் தண்ணீரும் கண்ணீரும் என்ற தனது

சிறுகதை நூலுக்குச் சாஹித்ய மண்டலபரிசும் பின்னால் தேசநேத்ரு சாஹித்ய ரத்னா போன்ற பெரும் அரச

கௌரவ விருதுகளும் பெற்றார் என்பதும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவருக்கு இலக்கிய கலாநிதிப்பட்டம் கொடுக்கத் தயங்கியது என்பதும் அவர் , உலக நாடுகளை வலம் வந்தார் என்பதும் நாம் அறிவோம்.
அந்தப் பாசாணப்புழு, பின்னால் படம் எடுக்கும் பெரும் சர்ப்பமாகிய கதை அது.
இவை எல்லாவற்றிற்கும் மேலால் என் மனதில் உறைவது இந்த உணர்ச்சிகரமான பேச்சும் அதனைப் பேசும் ஜீவாவின் அந்தக் குரலும் முகமும்தான்
முதன் முதல் அவரது இந்த உணர்ச்சிகரமான இந்தப் பேச்சை நான் 1961 இல் யாழ்ப்பாணத்தில் நகரசபை மண்டபத்தில் கேட்டேன்.
அது முற்போக்கு எழுத்தாளர் சங்க மகாநாடு
தனது நீண்ட ஜிப்பாவின் கையை மடித்துக் கொண்டு முற்போக்கு எழுத்தாளர் சங்க விழாவில் கைகளை அசைத்துகொண்டு வெகு உணர்ச்சிகரமாக அவர் பேசினார் அக்கூட்டத்தில் இளைஞர்களான கைலாசபதி சிவத்தம்பி, வித்தியானந்தன், டானியல், முகம்மது சமீம், சுபைர் இளங்கீரன் , கணேசலிங்கம், சில்லையூர் செல்வராஜன். நந்தி, சோமகாந்தன் ஆகியோர் இருந்தமையும் ஞாபகம் வருகிறது.
அப்போது அவருக்கு வயது 34.
இறுதியாக ஜீவாவின் பேச்சை கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் கேட்டேன்.
அப்போது அவருக்கு வயது 85 இருக்குமென நினைக்கிறேன். ஏறத்தாள 50 வருடங்களின் பின்னரும்
அதே உணர்ச்சி
அதே வேகம்
அதே உறுமல்
அதே தொனி
என்னை விட அவர் 15 வயது மூத்தவர்.
அவருக்கும் எனக்குமான உறவும் தொடர்பும் ஒரு தனிக்கதை அது மட்டக்களப்பில் ஆரம்பித்து யாழ்பாணத்தில் தொடர்ந்து கொழும்புவரை சென்றது. அதனை நான் தனியாக எழுதவுள்ளேன்.
நினைவுகளும் உடலும் தேயும் வரை அதே உணர்வோடும் வேகத்தோடும் உழைத்த ஒருவர் நம்மை விட்டுசெல்கிறார். எனது ஆழ்ந்த அஞ்சலிகள்.
(நன்றி : முகநூல்)

# எங்கட புத்தகமும் சிறுகதை மஞ்சரியும் இணைந்து நடாத்திய சிறுகதைப் போட்டியின் முடிவுகள்.

முதலாவது பரிசுக்கேற்றதாய் கதைகள் எதுவும் இருக்கவில்லை என்ற நடுவர்களின் முடிவுக்கமைய ஐந்து ஆறுதற் பரிசுகள் வழங்கப்படுகின்றன.


1. கரவை ரமேஸ்
2. கந்தசாமி நடேசன்
3. சம்பூர் சமரன்
4. கண்ணதாஸ்
5. சி. ரஞ்சிதா

**நடுவர்களாகச் செயற்பட்டவர்கள்:**

1. நந்தினி சேவியர்
2. பேராசிரியர் யோகராசா
3. மைக்கேல் கொலின்

இவர்களுக்கான பரிசுகள் காலக்கிரமத்தில் அனுப்பி வைக்கப்படும்.

## ஜெயகாந்தன் .......



ரயிலில் டிக்கெட் இல்லாத பயணியாகப் புறப்பட்டு வந்த ஜெயகாந்தன் பார்த்த உத்தியோகங்கள்... மளிகைக் கடைப் பையன், டாக்டரிடம் பை தூக்கும் வேலை, மாவு மெசின் கூலி, தியேட்டரில் பாட்டுப் புத்தகம் விற்றது, டிரெடில் மேன், அச்சுக் கோப்பாளர், பவுண்டரியில் இன்ஜின் கரி அள்ளிப்போட்டது, இங்க் ஃபேக்டரியில் கை வண்டி இழுத்தது, ஜட்கா வண்டிக்காரரிடம் உதவியாளர், பத்திரிகை புரூஃப் ரீடர், உதவி ஆசிரியர். பின் முழு நேர எழுத்தாளர்!

# வெறும் சோற்றுக்கே வந்தது

**செ. கதிர்காமநாதன்**



யன்னல்களைத் திறந்து விட்டால் வெளியே ரோட்டுத் தெரிகிறது. நீண்ட, அகலமான தார் ஊற்றப்பட்டு ஒப்பரவு செய்யப்பட்ட நேர்த்தியான ரோட்டு அது. எந்த நேரமும் அந்த ரோட்டு சுறுசுறுப்பாகக் காணப்படுகிறது. அடிக்கடி பஸ்களும், கார்களும் அங்குமிங்குமாக அலையெறிந்து கொண்டிருந்தது. மனித வெள்ளமுமாக அது நிரம்பி வழிந்து கொண்டிருக்கிறது.

**சிறப்புச் சிறுகதை**

**செ. கதிர்காமநாதன்,**

**(1942.03.08 - 1972.09.01)**

யாழ்ப்பாணம், கரவெட்டியைச் சேர்ந்த எழுத்தாளர். 1966 இலிருந்து 6 வருடங்கள் வீரகேசரி, மித்திரன் ஆகிய பத்திரிகையில் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார்.

இவரது முதற் சிறுகதைத் தொகுதி **"கொட்டும்பனி"** 1968 இல் வெளிவந்தது. அவ்வாண்டுக்கான இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசு இத் தொகுதிக்குக் கிடைத்தது. 1942 ஆம் ஆண்டில் வங்காளத்தில் நிலவிய கொடிய பஞ்சத்தின் பின்னணியாகக் கொண்டு கிருஸ்ணசந்தரால் எழுதப்பட்ட உருது மொழி நாவலை கதிர்காமநாதன் **"நான் சாகமாட்டேன்"** என்ற தலைப்பில் தமிழில் மொழிபெயர்த்தார். இது தமிழில் வீரகேசரி பிரசுரமாக வெளியிடப்பட்டது.

**மூவர் கதைகள்** என்ற நூலையும் இவர் வெளியிட்டுள்ளார். இந்த மூவர் கதைகள் என்ற தொகுப்பில் உள்ள சிறுகதைதான் **வெறும் சோற்றுக்கே வந்தது.** இக் கதை இங்கு சிறப்புச் சிறுகதையாக வருகிறது.

ஆ-ர்

ஒரு நாள் பூராகக் கண்ணாடி யன்னல்களைத் திறந்து வைத்து விட்டு அவளது பார்வைக்கு எட்டக்கூடிய தூரத்திலேயுள்ள அந்த ரோட்டிலே என்ன நடந்து கொண்டிருக்கிறதென்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது வள்ளிக்குப் பழக்கப்பட்டுவிட்டது. இதற்கு முன்பெல்லாம் அவளுக்கு இத்தகைய பரபரப்பான மஹேந்திர ஜாலங்கள் நிறைந்த ரோட்டுக்களைத் தெரியாது. அவள் கண்டதெல்லாம் வெறும் புழுதி ரோட்டுக்களும், காட்டுமரஞ் செடிகளும், காய்ந்து கறுத்த சில மனிதர்களும், டிராக்டர்களும் மட்டுமே. கிளிநொச்சி வட்டாரமொன்றைச் சேர்ந்த குடியேற்ற நிலப்பகுதி யொன்றில் ஏழு குழந்தைகளுக்கு ஒரு அக்காவாக ஒரு சிறிய குடிசையொன்றுக்குள் பசியும் பட்டினியும் அழுகையும் அச்சமுமாக வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருந்த வேளையில் தான் அவளை அதிர்ஷ்டம் வந்து அணைத்து விட்டதாகப் பொற்றோர் சொன்னார்கள்.

அவளுக்கு அது எப்படியான அதிர்ஷ்டம் என்பது தெரியாது. தாயைக் கேட்டாள். அவளுக்கு மூன்று நேரமும் வேளா வேளைக்கு இறைச்சி, மீன், முட்டையோடு சாப்பாடு கிடைக்கப்போகிறதென்றும் விதம் விதமான சட்டைகளை அவள் அணியலாமென்றும் வசதியும் காற்றோட்டமும் நிறைந்த பெரியதொரு வீட்டிலே பொழுது கழியப்போகிறதென்றும் மகிழ்ச்சி நிரம்பிய முகத்தோடு தாய் கூறினாள். இறைச்சி, மீன், முட்டையென்றதும் முதலில் வள்ளிக்குத் தலை கால் புரியவில்லை. இத்தகைய சாப்பாடுகளை அவளது சொந்த வீட்டிலே எங்கே காண முடிகிறது? சாம்பல், மொந்தன் வாழைக்காய்களை வெட்டி நறுக்கி பூசனிக்காய்களைப் பிளந்து துண்டுகளாக்கி தினம் தினம் சமையல் நடக்கிறது. சாப்பிட்டு நாவுக்கும் சலிப்புத் தட்டிவிட்டது. பூசனிக்காயையும் வாழைக்காயையும் கண்ட வள்ளிக்கும் ஒருவித வெறுப்பு வந்து விட்டது.

வள்ளிக்குக் கொழும்பிலே ஒரு வீட்டில் வேலை கிடைத்திருக்கின்ற செய்தி மற்றக் குழந்தைகளுக்குள் பரவியது. இறைச்சி, மீன், முட்டை இந்தச் சொல் லேசாக ஒரு பொறாமையையும் அவர்களுக்குள் கிளறிவிட்டது. வள்ளிக்கு நேரே இளையவளான காந்தி தாயின்

சேலைத் தொங்கலைப் பலாத்காரமாகப் பற்றி இழுத்துத் தன்னையும் வேலைக்கு அனுப்பும் படி கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள். அவளின் கெஞ்சல் தாயின் கண்ணீர் துளிர்த்துவிட்டது. அவளது ஆய்க்கினையால் சினமுற்றுத் தாய் கைகளை ஓங்கியபோது காந்தியின் உள்ளம் ஆவேசமடைந்து விம்மலுக்கிடையே புலம்பினாள்.

''அவவுக்கு நெடுக வாரப்பாடு தன்ரை மூத்த மேளிலைதான்! எங்களிலை எப்பெனும் பாசமில்லை.... அவளுக்கு இறைச்சி, மீன், முட்டையோடு சாப்பாடு போட்டுக்கொழுக்க வைக்க வேணுமெண்டு அனுப்ப நினைக்கிறா. எங்களைப் பற்றி எள்ளளவும் நினைக்கிறா இல்லை. அவளைவிட நான்தானே ஒல்லி? எனக்குத்தானே கைகாலெல்லாம் எலும்பு தெரியுது... நான்தானே பேத்தைச்சி மாதிரி இருக்கிறேன்? என்னை அனுப்பினால் கொழுத்து வந்திடுவேன் எண்டு அவவுக்குப் பொறாமையா இருக்கு.... ஒரு வாழைக்காயையும் கோதம்பைப் புட்டையும் காய்ச்சிக் காய்ச்சித் தந்துட்டு வேலை மட்டும் மாடு மாதிரி வாங்கிப் போடுவா. பாப்பம்... பாப்பம்.. இனிப் பாப்பம் பிள்ளை எண்டு கெஞ்சிக்கொண்டு வேலை செய்விக்க வா, காட்டித்தாறன்.

தாயும் தந்தையும் கம்பீரமான தமது உடலைக் கோணிக்குறுக்கலாக்கி முகம் விகசிக்க ஐம்பது ரூபாயைப் பெற்றுக்கொண்டு அவளை யாரோ ஒரு அந்நியனுடன் வழியனுப்பி வைத்தபொழுது காந்தி சொன்னது போல அவளுக்கு இனிக் கோதுமைப்புட்டும், வாழைக் காய்க்கறியும், சம்பலும் நித்திய சாப்பாடாகாது என்ற எண்ணமே பிரிவுத் துயரைப் போக்கடித்திருந்தது. இறைச்சி....! மீன்....! முட்டை! அவற்றை அவளால் கற்பனை செய்யமுடியவில்லை. அவளது வீட்டிலே நிற்கும் நாலைந்து கோழிகள் ஒன்று மாறி ஒன்று இட்டுத் தள்ளும் முட்டைகளை ஸ்கூல் மாஸ்டர் வீட்டுக்கும் சனிற்றறி வீட்டுக்கும் எடுத்துச்சென்று காசாக்கி மீண்டதையே அவள் தனது வாழ்க்கையில் கண்டிருக்கிறாள். அந்த முட்டைகள் அவளது வீட்டில் கோதம்பைமா வாங்கு வதற்காகவும், மண்ணெண்ணெய் வாங்குவதற்காகவும், கறி மிளகாய் வாங்குவதற்காகவும், காசுக்குப் பதிலாகப் பயன் படுத்தப்படுகின்ற ஒரு பண்டமாகிவிட்டது. கோழிகள் அடை கிடந்துவிட்டால் போதும் மண்ணெண்ணையோ, கோதம்பை மாவோ வாங்க முடியாமல் அந்த வீடு தவியாய்த் தவித்துவிடும். அடைகிடக்கின்ற கோழிகளைப் பார்த்து ''படுவான் அடிச்சதுகள்'' என்று அவளது தாய் திட்டித்தீர்ப்பதையே இப்படியான சந்தர்ப்பங்களில் கேட்கலாம். ஒருவிதத்தில் அது கோழிகளுக்கே உரித்தான வசவுகளல்ல. மறைமுகமாக அது அவளது கணவ னையும் சாடுகிறது. வயிறுமுட்ட எங்கோ சென்று கள்ளை நிரப்பிவிட்டு வந்து பிதற்றலும் அதட்டலும் அட்டகாசமுமாகக் கொட்டிலுக்குள் முடங்கிக் கிடக்கும் அவளது கணவனை கோழியைச் சாட்டி, ஆட்டைச் சாட்டி, குழந்தைகளைச் சாட்டி தனது வயிற்றெரிச்சலையெல்லாம் அவள் கொட்டிக் கொண்டி ருப்பாள். நேரடியாக அவனைத் தாக்கினாலும் அவன் கொடுக்கும் அடிகளையும் உதைகளையும் வாங்கிக் கட்ட முடியாது. உடலில் எள்ளளவும் இடமில்லை. முன்பெல்லாம் வாங்கிக் கட்டியாகிவிட்டது. வள்ளி தலைச்சன் குழந்தையாக வயிற்றிலே இருந்த காலத்தில் கணவன் என்ற அந்த முரட்டு ஆத்மா பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியைத் தூக்கிவந்து பார்த்துப்பாராமல் முதுகிலே இரண்டு குறிகளைக் கதறக் கதற வைத்திருக்கிறது. அவை இன்னும் பெரிய தழும்புகளாக சட்டையை அகற்றிவிட்டுப் பார்த்தால் முதுகிலே தெரிகின்றன. வீட்டின் சூழ்நிலையிலிருந்து விடுபட்டு பெரிய வீதிகளை யெல்லாம் பிரமிப்போடு கடந்து வந்து கடைசியில் பெரியதொரு பங்களாவின் வாசலில் வந்து நின்ற பொழுது வள்ளிக்கு உடலெல்லாம் புல்லரித்தது. அது சொர்க்கத்தின் வாசல்போன்ற உணர்வு பரவியது. முற்றத்துக்கு வெளியே பூத்துக் குலுங்கிய சிகப்பு, மஞ்சள், வெள்ளை, றோஸ் நிற ரோஜா மலர்கள் அவளது இதயத்திலே கற்பனைத் தந்தியை மீட்டின. அந்த வண்ண வண்ணப் பூக்களை அவள் முன்பு கண்டதில்லை. அவற்றைப் பிடுங்கி சிறு வயதிலேயே அடர்த்தியும் நீளமுமாக வளர்ந்திருக்கும் தனது கருநிறக் கூந்தலில் பிறகு சூட்டிப் பார்த்துக் கொள்ளலாம் என எண்ணிக் கொண்டாள். கூந்தலிலே மலர்களைச் சூட்டிப் பார்ப்பது அவளுக்குப் பிடித்தமான ஒன்று. குடியேற்றப் பகுதியிலுள்ள காட்டு ஓரங்களில் ஓங்கி நிற்கும் கொன்றை மரங்களிலும் பிச்சி மரங்களிலும் அலரி மரங்களிலும் ஏறி மலர்களைப் பிடுங்கி மலர்களை மாலை கோர்த்துத் தனக்கும் தனது தங்கைகளுக்கும் சூடி அழகு பார்த்தது அவள் மகிழ்ந்ததைப் போலவே இந்த மலர்களையும் பறித்து இங்கு சில விளையாட்டுத் தோழிகளையும் சேர்த்துக் கொண்டு அவள் துள்ளித்திரியலாம்.

இறைச்சி, மீன், முட்டை இந்த இனிய கனவுகளுடன் மகிழ்ச்சியும் அச்சமுமாக அந்த வீட்டுக்குள் அடியெடுத்து வைத்த வள்ளிக்கு அதிர்ஷ்டம் வந்து அணைத்து விட்டதாகப் பொற்றோர்கள் சொன்னதன் பொருள் அப்பொழுதுதான் புரிந்தது. காந்தி அழுது புலம்பியபோது தன்மீது அவளுக்கு ஏற்பட்டுவிட்ட பொறாமை குறித்து ஆத்திரப்பட்டது தவறு என்று மனம் வேதனைப்பட்டது. அவளுக்கும் எங்காவது ஒரு பங்களாவில் வேலை கிடைத்து தன்னைப் போல இறைச்சி, மீன், முட்டைகளை யெல்லாம் சாப்பிடக் கூடிய அதிர்ஷ்டம் அரவணைத்துக் கொள்ள வேண்டுமென அவள் உள்ளம் பிரார்த்தித்தது.

அவள் வேலைக்காரியாகப் பொறுப்பு ஏற்க வேண்டி யிருந்த அந்த வீட்டிலே இரண்டே இரண்டு நபர்கள் மட்டும்தான் இருந்தார்கள். அவர்கள் கணவனும் மனைவியும் காலையிலே இருவரும் எங்கோ ஒரு பெரிய கந்தோருக்கு மிக நேர்த்தியாகப் புறப்பட்டுச் செல்வார்கள். பின்னேரம் திரும்பி வருவார்கள். இது ஒன்றும் அவளுக்குப் புதிதல்ல. அவளது தாயும் தந்தையும் கூலிகள்! காலையிலே புறப்பட்டுச் சென்றால் பின்னேரம் சூரியன் மறைந்துவிட்ட பிறகுதான் அவர்களும் வீட்டுக்கு வருவார்கள். ஒரு நாள் பூராவும் அவளும் அவளது சகோதரர்களும் வீட்டு வளவுக்குள்ளும் காட்டு நிலங்களிலும் அயல் அட்டைகளிலும் விளையாடிக் கொண்டிருப்பார்கள். அவர்களுக்குக் கூட்டாக அவர்களைப்போன்றே வீட்டில் தனிமைப் படுத்தப்பட்டிருக்கும் அயல் வீட்டுச் சிறுசுகளான நந்தன், லச்சுமி, நாகன், மாணிக்கம் எல்லோருமாகக் கூட்டுச் சேர்ந்து விடுவார்கள். பற்றைகளிலே படர்ந்து வளர்ந்திருக்கும் குன்று மணிச்செடிகளைத் தேடிப்பிடித்து இளம்பருவத்திலிருக்கும்

குன்றுமணிக் காய்க்கொத்துகளைப் பறித்து அதற்குள் மெல்லிள றோஸ் நிறத்திலிருக்கும் மணிகளை மாலையாக கோர்ப்பது அவர்களுக்குப் பிரீதியைத்தருகிறது. அல்லது குறிஞ்சாக் கொடியின் கீழ் முற்றிய காய்கள் வெடித்துப் பிளந்து பஞ்சாய்ப் பறந்து உதிர்ந்து கிடக்கும் கோதுகளைப் பொறுக்குவார்கள். அது பாம்பின் தலையைப் போன்ற வடிவமுள்ளது. படமெடுத்தாடும் பாம்பைப் போன்றிருக்கும் அந்தக் கோதில் இரு சிறு துவாரமிட்டு குன்று மணிகளை கருமை நிறம் தெரியத்தக்கதாகச் சொருகிவிட்டால் அப்புறம் பேசவே வேண்டியதில்லை நிஜமான பாம்பேதான். அது படமெடுத்து ஆடி அசைந்து சீறிச் சினந்து ஆடவேண்டாமா?அதை ஆட வைக்கிற இரகசியம் அவர்களுக்குத் தெரியும். நீண்ட கூந்தல் மயிரைக் கோதின் முனையில் துளை இட்டு முடிந்து இவ் இரண்டையும் தென்னை ஈர்க்கில் தொடுத்துவிட்டபின் பார்க்க வேண்டும்! பாம்பு துள்ளித் துள்ளி ஆடும்! பாய்ந்து பாய்ந்து கொத்தும்! இதைக் கண்டு குழந்தைகளெல்லாம் ஆரவாரமாகக் கூச்சல் போடுவார்கள்! சிரிப்பார்கள்! அந்தப் பாம்பைத் தாங்களும் ஆட்டுவதற்குத் தரும்படி கெஞ்சுவார்கள். அழுவார்கள். அல்லது குரும்பட்டைத்தேர் கட்டி விளையாடிக் கொண்டிருப்பார்கள். இந்த விளையாட்டுகளால் நெடு நேரமாகப் பசி மறந்து போயிருக்கும்.

அந்த வீட்டுக்கு வந்த இரண்டு மூன்று நாட்களுக்குள் அவளுக்குப் பல உண்மைகள் தெரிந்து விட்டன. பதினொரு வயதுச் சிறுமியாக இருந்த போதிலும் எதையும் அவளால் சிந்திக்க முடியும். அந்தச் சுற்று வட்டாரத்திலே அவளுக்கு எந்த ஒரு விளையாட்டுத் தோழிகளுக்கும் இடமில்லை! மிக நேர்த்தியான விலை உயர்ந்த உடைகள் அணிந்து அவர்கள் வண்ணப் பூச்சிகள் போலத் திரியும் சிறுமிகள்! அவர்கள் முகம்கொடுத்து அவளோடு பேச வேண்டுமே! ஊஹூம்! அவர்களது முகத்தில்தான் என்ன இளக்காரம் அவளை ஏற இறங்க வைத்துப் பார்க்கிற பொழுதுதான் எத்துணை இளக்காரம் தெரிகிறது. யன்னலுக் கூடாக முகம் புதைத்துக் கைகளை அசைத்து அவர்களைக் கூப்பிடவே அவளுக்கு அச்சமாக இருக்கிறது. நடுக்கமாக இருக்கிறது. துணிச்சலை வரவழைத்துக் கொண்டு அவள் நிற்கும் யன்னல் ஓரமாகக் கடந்து சென்ற சிறுமி ஒருத்தியை அவள் கூப்பிட்டபொழுது ''முடியாது'' என் எவ்வளவு வேகமாக அந்தச் சிறுமி தன் தலையை ஆட்டிவிட்டு ஓடிவிட்டது! அவள் ஓடியாடிய அவளது சொந்தப் புழுதி மண்ணில் ''நந்தா'' என்று அவள் கூப்பாடு போட்டால் போதுமே ஒரு பரிவாரமே அவளைத் தேடி ஓடிவந்து விடும்.

இறைச்சி... மீன்... முட்டை இந்த இனிய கனவுகளுடன் அடியெடுத்து வைத்த அவளுக்கு இறைச்சி, மீன், முட்டை இவைகளைக்காண நித்திய வாய்ப்பு இருக்கத்தான் செய்தது. ஆனால்... ஆனால்... வீட்டிலே ஆரவாரமாகச் சத்தமிட்டு தாயிடம் உரிமையோடு கேட்டு விரும்பியவாறு வாய் நிறையச் சாப்பிடுகிற அந்த உரிமையையே அவள் இழந்துவிட்ட பின் இறைச்சி, மீன், முட்டை என்ற அந்த உணவு வகைகளே அவளுக்குச் சங்கடத்தை ஊட்டின. மௌனமாக ஆசைகளை அடக்கிக் கொண்டு ''பசிக்கிறதே'' யென முரண்டு பிடிக்க முடியாமல் எஜமானும் சீமாட்டியும் சாப்பிடும் வரை காலம் தாழ்த்தி எஞ்சியவற்றை சாப்பிடுகின்ற சிறகொடிந்த, வாயிழந்த, அந்த நிலைதான் அவளுக்குக் கிடைத்த அதிர்ஷ்டமா? அன்றொரு நாள் ஏதோ ஒரு கதையில் அவளைப் பார்த்து வீட்டு எஜமானி சொன்னாள்.

''டியோய் வள்ளி இப்படியெல்லாம் உன்ரை வீட்டிலே சாப்பிட உனக்குக் கிடைச்சிருக்காடி? வரையிக்கை பயித்தங்காய் மாதிரி பேத்தைபத்தி வந்தாய். இப்ப என்னடா என்றால் ஆனைமாதிரிக் கொழுத்திட்டாய்! இந்தச் சொகுசெல்லாம் உனக்குத் தொடர்ந்து வேணுமெண்டால் நல்ல பிள்ளையாக எங்களோடை நெடுக இருக்க வேணும். இல்லையோ பேந்தும் போய் உங்கடை குச்சி வீட்டுக்குள்ளை நாய், பண்டி வாழ்க்கை தான் நீ வாழுவாய்! அங்கையென்ன உனக்கு கோதம்பை றொட்டியும், அரை குறைச் சோறும், சம்பலும் தானே உன்ரை கொப்பன் கோத்தை சமைத்துப் போடுவினம் உன்ரை அதிர்ஷ்டமடி நீ எங்கடை வீட்டுக்கு வேலைக்காரியாக வந்தது. நீ ஊருக்குப் போகயிக்கை அதிசயிக்கப் போறாங்கள். நீதான் அங்கை பெரிய இடத்துப் பெட்டை போல இருக்கப் போகிறாய்!''

எஜமானி இப்படிச் சொல்வதை ஆரம்பத்தில் கேட்ட பொழுது அவளுக்கும் பெருமையாகத்தான் இருந்தது. எஜமானியும் அடிக்கடி இப்படிச் சொல்லிக் கொண்டுதான் வருகிறாள். அவள் ரொம்பப் பெரிய அதிர்ஷ்டசாலியாம்.

அந்த வீட்டிலேயுள்ள பெரிய பெரிய நாற்காலிகளையும் சோபாக்களையும் தளபாடங்களையும் கண்ணாடிப் பொருட்களையும் அலங்காரங்களையும் மேலெழுந்த வாரியாகப் பார்த்து பணக்கார வீடொன்றில் வேலைக்காரியாக இருக்கின்றாள் எனத் திருப்பதிப்படுவதாக இருந்தால் வள்ளிக்கு அந்த வீடு பெரிய அதிர்ஷ்டமாகத்தான் இருக்க வேண்டும். அப்படியே அந்த வீடு தனது அதிர்ஷ்டத்தின் விளைவு என அவளும் கொண்டவள் தான். ஆனால் அவளது பிஞ்சு உள்ளம் துடிக்கக்கூடிய முறையில் அவளை ஒரு தீண்டத் தகாதவள் போல அவர்கள் கருத்திற்கொண்ட பொழுதுதான் அவளுக்கென்று ஒரு ''புதிய விதியை'' அந்தப் பணக்காரக் குடும்பம் சிருஷ்டிக்க முயல்வதை அவள் கண்டாள்.

வள்ளிக்கென்று ஒரு பழைய தட்டத்தைக் கொடுத்து தரையிலே உட்கார்ந்து சாப்பிட வேண்டுமென்று ஒரு பாயைக் கொடுத்து சமயலறையின் ஒரு மூலையிலே விரித்துப் படுக்குமாறும் அவர்கள் கூறியபொழுது அவர்களது அந்த விதிக்குப் பணிந்தவளாக அவள் தன்னைக் காட்டிக்கொண்ட போதிலும் ஒரு கேள்வி அவளுக்குள்ளேயே பிறந்தது. ஒரு குரல் ஆவேசமாகக்கிளர்ந்தது. அவள் பிறந்து வளர்ந்த இந்த உலகத்தில் அவளுக்கு முதன் முதலாகத் தெரிய வந்த ஏற்றத்தாழ்வு, சாதி அமைப்பு ஒன்றேதான். அதன்படி பார்த்தால் அவள் ஒரு வேளாளப்பெண் தாழ்த்தப்பட்டவர்களை வீட்டுக்கு வெளியே நிறுத்தி அவர்களது கை மண்டையிலே செம்பு ஒட்டிக்கொள்ளாமல் குபுகுபுவென்று தண்ணீர் ஊற்றிய ஒரு உயர்சாதிப் பெண்ணாகக் கிளிநொச்சியிலே உலாவி வந்த ஒருத்திக்கு அதே விதிமுறைகளை இதோ இவர்களும் சிருஷ்டிக்கிறார்கள். அவளுக்கென்று ஒரு தட்டம்! அவளுக்கென்று ஒரு கிளாஸ்! அவளுக்கென்று ஒதுக்கப்பட்ட

ஒரு இடம்! அவள் தரையில்தான் உட்காரலாம். நாற்காலியில் உட்கார முடியாது! வீட்டைப் போல சகஜமாக தாராளமாக சுதந்திரமாக எந்த ஒரு பொருளையும் தீண்ட முடியாது.

எஜமானனையும் எஜமானியையும் தேடி வரும் நண்பர்களுக்கும் சினேகிதைகளுக்கும் இன்ன கிளாஸில்தான் தேநீர் வழங்கப்பட வேண்டுமென்றோ இன்ன கோப்பையில்தான் உணவு பரிமாறலாமென்றோ எந்த ஒரு நியதியும் கிடையாது. ஆனால் அவர்களோடு தப்பித் தவறி ஒரு வேலைக்காரி வந்து விட்டால் வள்ளியின் கிளாசில்தான் மரியாதைக்குப் பயந்து தேநீர் வழங்க உத்தரவாகிறதே!

ஆனால் எஜமானி சொல்லுகிறாள் ‘‘உன்ரை வீட்டிலே அரையும் குறையுமாகச் சாப்பிடக்கூட வழியில்லாமல் கிடந்து சாக இருந்த நீ உன்ரை நல்ல காலத்துக்குத் தான் இங்கே வந்திருக்கிறாய். இப்படியான ஒரு சொகுசான அறை கூட உனக்குப் படுக்கக் கிடைச்சிருக்காது! என்னடி சொல்லுகிறாய்...? காற்றோட்டமும் வெளிச்சமும் வசதிகளும் நிறைந்த வீடாக இது இருக்கலாம்.... அவள் இருந்தது பலரும் ஒன்றாக அடைந்து கிடக்கும் ஒரு சிறு குடிசை என்பதும் உண்மையே. அதன் ஒரு மூலையில் இருக்கும் சாக்குக் கட்டிலில் அவள் விரும்பியது போல ஏறிப்படுக்க முடிகிறது. இங்கே எத்தனை கட்டில்கள்! குளிரெடுத்தாலும் முடிகிறதா என்ன? உறைகளைத் தேய்க்கவும் படுக்கை விரிப்புகளை அலம்பவும் மடித்து வைக்கவும் மட்டுமே முடிகிறது.

‘‘உன்ரை அதிர்ஷ்டம் தானடி எங்களட்டை வந்திருக் கிறாய்.’’ ஒரு நாள் இப்படி எஜமானி கூறிய சமயம் ஏதோ ஒரு துணிச்சலில் வள்ளி சொன்னாள். ‘‘எங்கடை வீட்டிலே இருக்கிற சொகுசை உங்களுக்கு என்னம்மா தெரியப்போகிறது?’’ இந்தப் பதிலைக் கேட்டதும் அம்மாவும் ஐயாவும் ஒரு கணம் வெலவெலத்துப் போய்விட்டார்கள்! ஏதோ ஒரு போர்க் கோலத்தைக் கண்டு அஞ்சியவர்களைப் போல ‘‘என்னடி சொன்னாய்’’ என அதட்டினார்கள். அம்மாவிடம் செல்லம் கொடுத்துவிட்டாய். என ஆங்கிலத்தில் ஐயா சொன்னதும் அது தன்னைப் பற்றியது என அவளுக்குப் புரிந்தது.

அன்று வழக்கத்துக்கு மாறாக அன்பு ததும்ப வள்ளியை அழைத்த வீட்டு எஜமானி அவளுக்கு இரண்டு மூன்று ரூபாய் பெறுமதியில்லாத இரு தோடுகளை அன்ப ளிப்பாக வழங்கிவிட்டு அவளது அழகைப் பார்த்து ரசிக்க விரும்புகிறவள் போல வள்ளியிடம் சொன்னாள்.

‘‘எங்கேடி சுரையைக் கழற்றித் தோட்டைக் காதிலை போட்டுக் கொண்டு வா... ஓட்டை குத்திவிட்ட கொப்பனுக்கு பாவம் இவ்வளவு நாளும் ஒரு தோடு போட்டு உன்னை அழகு பார்க்கத்தானும் வழியில்லாமை இருந்திருக்கடி! உன்ரை நல்லவிதிக்கு எங்களட்டை வந்திருக்கிறாய். போ... போ... போட்டுக் கொண்டு வா!

அவை வெள்ளித் தோடுகள். அவை கிடைத்தது கூட பேரதிர்ஷ்டம் போல எஜமானி அபிநயத்துச் சொன்ன பொழுது வள்ளிக்கு முகமெல்லாம் விகசித்தது. பெண்களுக்கே உரித்தான நாணத்துடன் அவற்றை வாங்கி கண்களில் நன்றியுணர்ச்சி பொங்க அவள் தனது காதுகளில் அவற்றைப் பூட்டிக் கொண்டிருந்த சமயம் எஜமானி தனது கணவனைப் பார்த்து ஆங்கிலத்தில் சொன்னாள்.

‘‘இது என்ன இந்தப் புதிய ஏற்பாடு என்று யோசிக் கிறீர்களா?’’ இப்பொழுதெல்லாம் வேலைக்காரர்களைப் பிடிப்பதென்றால் எவ்வளவு ரொம்பப் பெரிய கஷ்டம் சொல் லுங்கள். போனமுறை பொங்கல் தினத்துக்கு ராணி வீட்டிலே நின்ற இரு வேலைக்காரிகளும் புதுச் சட்டை நகை என்றெல்லாம் வாங்கிக் கொண்டு பிறகு வருவதாகப் போனவர்கள் தான் திரும்பி வரவேயில்லை. ஏன் இறைவரிமதிப்பாளர் இராகவன் வீட்டை எடுத்துப் பாருங்களேன். அங்கே நிண்ட வேலைக்காரப் பெட்டை களவெடுத்து நல்லாச் சாப்பிடுமாம். ஒரு நாள் தேத்தண்ணி போட்டு தன்ரையெண்ணத்துக்கு குடித்துக் கொண்டிருந்ததைக் கண்டுவிட்டு மிஸ்ஸிஸ் ராகவனுக்குக் கோபம் வந்துட்டுது. நல்லா அடிச்சுப் போட்டா அந்தக் கழிசறை அதுடைய பிச்சக்காறப் புத்தி திண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யிற நாய் பொலிசிட்டைப் போய்ச் சொல்லி மானக் கேடாப்போச்சு. நல்ல காலத்துக்குப் பொலிஸ் ராக வனுக்குப் பழக்கமா இருந்ததாலை மேலுக்குப் போகவிடாமை உள்ளுக்கேயே சடைஞ்சாச்சு. இதை நான் ஏன் சொல்லுற னெண்டால் இந்தப் பெட்டையை நாங்கள் இரண்டு மூன்று நாளைக்குப் பேய்க்காட்ட வேண்டியிருக்கு. அவளுடைய தகப்பன் வாறான். பிள்ளையைப் பார்க்கப்போறானாம். கடிதம் போட்டிருக்கிறான்.

வள்ளியோடு முகம் கொடுத்துக் கதைக்காத ஐயா மனைவியின் ஆங்கில ‘‘லெக்ஸரைக்’’ கேட்டதும் சொன்னார்.

‘‘டியேய் வள்ளி! வேறு வீடுகளில் எண்டால் வேலைக் காரிகளுக்குச் சாப்பிடக்கூடக் குடாதுகள்! உனக்கு வேலையும் குறைவு. அம்மா உனக்குச் செல்லமும் தாறா! ஏதோ நல்ல விதியிருந்து எங்களட்டை வந்திருக்கிறாய்.

வண்ணமலரச் செடிகள் மிகுதியாக வளர்ந்து நிற்கும் அந்த வீட்டுக்குள் நுழைந்த வள்ளியின் தந்தை கந்தனுக்கு அப்படிப்பட்ட ஒரு வீட்டை ஏழு தலைமுறை சென்றாலும் தனது சந்ததியால் கட்டிமுடிக்க இயலாதென்ற திடமான நம்பிக்கை அதைப் பார்த்ததும் ஏற்பட்டது. அங்குள்ள சுவர்கள், அங்குள்ள விறாந்தைத் தரைகள், அங்குள்ள மின்விளக்கு அலங்காரங்கள், அங்குள்ள மீன்தொட்டிகள் யாவுமே அவனைப் பிரமிப்பிலாழ்த்தின. உண்மையிலேயே வள்ளி அதிர்ஷ்டக் காரிதான். அவள் பிறந்த நட்சத்திரத்தை அவன் நினைத்துப் பார்த்தான். திருவோணம். ராணியாட்டம் வாழுவாள் என்று சோதிடர் சொல்லி இருக்கிறார்.

ஒரு பக்கத்தில் ஒதுங்கி கைகட்டி எஜமானனுக்கும் அவரது மனைவிக்கும் பதில் சொல்லிக் கொண்டிருந்த அவனுக்கு வள்ளிக்கென்று பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டிருந்த கிளாசில் தேநீர் வந்தது. புனிதமான கோயிலொன்றுக்குள் பிரவேசித்து தேவி சமேதராய் எழுந்தருளியிருக்கிற ஆண்டவன் முன்னால் பக்தி பரவசமாக நிற்கும் ஒரு பக்தனைப் போல அவன் குரல் தளதளத்தது.

‘‘எனது தெய்வங்களே! இதெல்லாம் என்னத்துக்கு? மூன்று நேரம் சாப்பாடு குறையாமல், வள்ளியை உங்களது சொந்தப் பிள்ளைபோலப் பாக்கிறியள். அதுக்கே நாங்கள் சாகுமட்டும் ஊழியம் செய்யவேணும்... அவள் அதிஸ்டம்

செய்துதான் இங்கை வந்தவள். அவளை ஒருக்கா அவளது தாய் பார்க்க வேணும், கூட்டிக் கொண்டு வா எண்டு சொல்லி ஆசைப்பட்டவள்தான், ஆனா தாய்க்குத் தாயாய் என்ரை அம்மா கவனிக்கையிக்கை அவளை என்னத்துக்குக் கூட்டிக் கொண்டு போய்க் காட்டவேணும்...? அவளின்ரை சம்பளத்தைத் தந்தால் போதும்... பிறகு ஆறுதலாகத் தாய் பார்க்கட்டும்.''

சுவரின் ஒரு மூலையில் சாய்ந்து நின்ற வள்ளியின் குரல் திடீரெனத் தந்தையை நோக்கி எழுந்தது.

''ஏலாது! நான் வரப்போறன். இங்கே நிக்க மாட்டன்.''

''ஏன்டி... அங்கை வந்து வயிறு காய்ஞ்சு சாகப் போறியா? தெய்வம் மாதிரி இந்த அம்மாவையும் ஐயாவையும் விட்டு விட்டு வாறனெண்டு சொல்ல உனக்கு என்ன பைத்தியமே?''

''முடியாது, நான் வரப்போறன்... காய்ஞ்சு செத்தாலும் சரி, வருவேன்.''


''நில்லடி... என்ரை குணம் தெரியுமே?''

''நான் மாட்டன்! வரத்தான் போறன்.''

மகளை விலக்கி வெளியே செல்ல முற்பட்ட, அவனை அவள் பின் தொடர்ந்தாள். அய்யாவும் அம்மாவும் செயலற்று நின்றனர். அவள் குரல் சீற்றமாக ஓங்கி ஒலித்தது.

''நான் மாட்டன், வரத்தான் போறன்!''


## மாக்சிம் கார்க்கி



எந்நேரமும் குறிப்பேடு வைத்திருப்பார். தனக்குத் தோன்றுவதை அதில் எழுதுவார். 1892-ல் இவரது முதல் சிறுகதையான **மகர் சுத்ரா** (Makar Chudra) வெளிவந்தது. மாக்சிம் கார்க்கி என்ற பெயரில் தொடர்ந்து எழுதி வந்தார். கார்க்கி என்ற சொல்லுக்கு கசப்பு என்பது பொருள். 1898-ல் **ஸ்கெட்சஸ் அண்ட் ஸ்டோரீஸ்** வெளிவந்தது. 1899-ல் முதல் நாவலும், 1902-ல் **தி லோயர் டெப்த்ஸ்** என்ற நாடகமும் வெளிவந்தன. இவரது உலகப் புகழ்பெற்ற **மதர் (தாய்)** புதினம் 1906-ல் வெளிவந்தது. 1906ஆம் ஆண்டு டிசம்பரில் நியூயார்க்கிலிருந்து வெளியாகும் **ஆப்பிள்டன்** இதழில் தாய் முதற்பகுதியின் முன்பாகமும் 1907ஆம் ஆண்டு தாய் முழுவதும் வெளிவந்தன.

இந்நூல் முதலில் வெளிவந்தது அமெரிக்காவில்தான். கொடுங்கோல் ஆட்சிக்கு எதிராக மக்களைக் கிளர்ந்தெழச் செய்வது, அதிகார வர்க்கத்துக்கு எச்சரிக்கை விடுப்பது, வீரம் ஆகியவை இவரது எழுத்துகளின் அடிநாதமாகத் திகழ்ந்தன. இதனால் அரசின் கோபத்துக்கு ஆளானார். பலமுறை கைது செய்யப்பட்டார். இவரது படைப்புகள் கடும் தணிக்கையை எதிர்கொண்டன. பாட்டாளி வர்க்க இலக்கியத்தின் பிதாமகர் என்று போற்றப்பட்டார். இவர் படைத்த தாய் (புதினம்) இன்றுவரை புரட்சிகரத் தொழிலாளி வர்க்கத்துக்கு ஊக்கமும் உற்சாகமும் தந்து வீரத்தை ஊட்டிவருகிறது. இது 200 முறைக்கு மேல் மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது. உலகின் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

# புதுமைப் பித்தனின் உலகம்



புதுமைப்பித்தனின் முதல் படைப்பான குலோப்ஜான் காதல் காந்தி இதழில் 1933-இல் வெளிவந்தது. 1934-இலிருந்து மணிக் கொடியில் இவரது படைப்புகள் பிரசுரமாகத் துவங்கின. மணிக்கொடியில் வெளிவந்த இவரின் முதல் சிறுகதை ஆத்தங்கரைப் பிள்ளையார். 1940ல் புதுமைப்பித்தனின் கதைகள் என்ற அவரது சிறுகதைத் தொகுப்பு வெளியானது. புதுமைப்பித்தன் எழுத்துப்பணியில் முழுவீச்சில் ஈடுபட்டது 15 ஆண்டுகளுக்கும் குறைவான காலம் தான். அக்குறுகிய கால அளவிலேயே அவர் நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகள், கிட்டத்தட்ட அதே எண்ணிக் கையுள்ள கட்டுரைகள், 15 கவிதைகள், சில நாடகங்கள், புத்தக விமர்சனங்கள் என எழுதிக் குவித்தார். அவரது எழுத்துக்கள் அவரைப் புரட்சி எழுத்தாளராக அடையாளம் காட்டின. அவர் கையாண்ட விடயங்களும் கதாபாத்திரங்களும் தமிழ்ப் புனைவு உலகுக்குப் புதியதாய் அமைந்தன. தமிழ் இலக்கிய உலகம் சில எழுதப்படாத விதிகளால் முடக்கப்பட்டிருப்பதாக அவர் கருதினார். புதுமைப்பித்தன் கதைகள் பல்வேறு பதிப்புகளில் வெளிவந்துள்ளன

புதுமைப்பித்தனின் சிறுகதைகள் தான் அவருக்கு எழுத்துலகில் தனி இடத்தை அளித்தன. அவர் எழுதியதாகக் கணிக்கப்படும் 108 சிறுகதைகளில் 48 மட்டுமே அவர் காலத்திலேயே வெளியாகின. மற்றவை அவர் மறைவுக்குப் பின்னர் வெவ்வேறு காலங்களில் பிரசுரமாயின. கடைசித் தொகுப்பு 2000ல் வெளியானது. புதுமைப்பித்தன் 50க்கும் மேற்பட்ட சிறுகதைகளைப் பிற மொழிகளிலிருந்து மொழிபெயர்த்துள்ளார். அவருக்கு மொழிபெயர்ப்புகள், தழுவல்கள் குறித்துத் தெளிவான கருத்து இருந்தது. தழுவல்கள் இலக்கியத் திருட்டுக்குச் சமம் என்றும் பிறமொழி படைப்புகளைத் தமிழுக்குக் கொண்டுவர மொழிபெயர்ப்பே சிறந்த வழியெனவும் கருதினார். 1937ல் மொழிபெயர்ப்பா, தழுவலா என்ற பிரச்சனையில் அவருக்கும் கல்கி கிருஸ்ணமூர்த்திக்கும் இடையே காட்டமான இலக்கியச் சண்டையொன்று நிகழ்ந்தது. புதுமைப்பித்தன் 15 கவிதைகள் எழுதியுள்ளார். அவரது முதல் கவிதையான திரு ஆங்கில அரசாங்க தொண்டரடிப்பொடியாழ்வார் வைபவம், 1934ல் வெளிவந்தது. அவரது கவிதைகள் பெரும்பாலும் அவரது நண்பர் தொ. மு. சிதம்பர ரகுநாதனுக்கு வெண்பா வடிவில் எழுதப்பட்ட கடிதங்களாக அமைந்திருந்தன. அவரது 15 கவிதைகளும் அவர் இறந்த பின்பு தான் பிரசுரமாயின. அவரது சிறுகதைகளைப்போலவே அவரது கவிதைகளும் நையாண்டியும், நக்கலுமாக இருந்தன

# அப்பாவின் சைக்கிள்

**ச. ஜெயந்தினி**



அது ஒரு ஞாயிற்றுக்கிழமை. காலை நேரம் 10 மணி ஆகியும் ஜானு எழுந்திருக்கவில்லை. அலாரம் வைத்தது போல் 6 மணிக்கு எழுப்பும் அம்மா ராணியும், ஜானு பல்கலைக்கழகத்தில் இருந்து வந்த, நீண்ட தூர பயணத்தின் அசதியில் தூங்கியதால் எழுப்பவில்லை. இருந்தாலும் சூரியனுக்கு என்ன கோபமோ தெரியவில்லை. எட்டா தூரத்தில் இருந்து, ஜன்னல் வழி தன் கதிர்களை ஊடுருவ விட்டு அவள் கால்களை சுட்டெரித்துக் கொண்டிருந்தான். மார்கழி மாத மழை கடந்து வந்த வெயிலின் சூட்டில் தூக்கம் கலைந்து சின்ன சினுங்கலுடன் எழுந்தாள் ஜானு.

''மழை திரும்ப வர முன்னம் வெளி வேலைகளைப் பார்த்திடு ஜானு'' என்று அம்மாவின் சத்தம் வர எழுந்து வெளியில் போனாள். வெளி வராந்தாக்கு வந்தவள் ''அப்பா'' என்று சத்தமிட்டுக் கோபத்துடன் கூப்பிட்டாள். காரணம் இரவு பெய்த மழையில் நனைந்த, அப்பா சண்முகத்தின் பழைய சைக்கிள் சில்லின் சேறு வராந்தாவில் இருந்து மட்டுமல்ல, ஜானு ஆசையுடன் வளர்த்த ரோஜா செடி சாடியை அப்பாவின் சைக்கிள் தட்டி விழுத்தி உடைத்து விட்டதும் தான்.

ஜானுவின் சத்தத்தைக் கேட்டு ஓடி வந்த அப்பா ''என்னம்மா ஏன் இப்படி கத்திறாய்'' என்று கேட்டார். உச்சக் கட்ட கோபத்துடன் பார்த்த ஜானு ''இப்ப இந்த பழைய ஓட்டை சைக்கிள் நனையுதுன்னு யாரு அழுதது?, என்ர ரோஜா சாடியும் உடைச்சிட்டு. எனக்கு வாற கோபத்துக்கு இந்த சைக்கிள இரும்பு வாங்கிறவங்க வந்தால் குடுத்து விட்டிடுவன்'' என்று கோபத்தில் பேசிவிட்டு தன் ரோஜா செடியை கவனமாக எடுத்து வேறு சாடிக்கு மாற்றிக் கொண்டிருந்தாள்.

ஜானுவின் அப்பா சண்முகம் மிகவும் அமைதியும், பொறுமையுமானவர். சண்முகத்துக்குச் சைக்கிளை விட வேறு எந்த வாகனமும் ஓட்டத் தெரியாது. ஆம் அது பழைய ஓட்டை சைக்கிள் தான். 1990 ல வாங்கிய லுமாலா டைனமோ சைக்கிள். இன்னமும் சண்முகம் தன் சைக்கிளை ஒரு பிள்ளை போலக் கவனமாகத் தான் பார்த்து வருகிறார். அவர் அமைதியாகத் தன் சைக்கிளை உருட்டிக் கொண்டு வந்து வெளித் தாவாரத்தில் விட்டார். மழையில் நனைந்த பழைய சைக்கிள் தானே. உருட்டும் போதே 'டாங் டீக்' என சத்தம் போடத் தான் செய்தது. அந்தச் சத்தம் ஜானுவின் கோபத்தை இன்னமும் அதிகரிக்க, வாய்க்குள் ''ஓட்டை சைக்கிளும் இவரும் '' என்று முணுமுணுத்துக்கொண்டாள். இத்தனைக்கும் ஜானுவின் அம்மா அமைதியாக எதையுமே காதில் வாங்காதது போல் சமையல் வேலைகளைக் கவனித்துக்கொண்டிருந்தாள். ஒருவாறு அன்றைய நாள் அப்பாவுக்கும் மகளுக்கும் இடையில் அமைதியாக நகர்ந்து இரவு எட்டு மணியை அண்மித்தது. ஜானுவின் பக்கத்து வீட்டு அக்காவின் மகன் கவின் , ஜானு விடுமுறையில் வீட்டுக்கு வரும்போதெல்லாம் வந்துவிடுவான். ஆறு வயது நிரம்பிய கவினின் சுட்டித்தனமும் மழலைக் கதையும் ஜானுவுக்குக் கவினில் அளவு கடந்த அன்பை ஏற்படுத்தியது. விடுமுறை காலத்தில் ஜானுவின் நாட்கள் கவின் இல்லாது நகருவதில்லை.

அன்று இரவும் கவினும் ஜானுவும் குறும்பாக விளையாடிக்கொண்டிருந்தார்கள். அப்போது திடீரென மின் துண்டிப்பு ஏற்பட்டு விட்டது. ஆம். மார்கழி மாதத்தில் இப்படி அறிவிப்பு இன்றி மின்துண்டிப்பு நிகழ்வது புதிதில்லையே.

மின்துண்டிப்பு ஏற்பட உடனே ராணி 'சார்ஜர்' விளக்கைப் போட்டுப் பாதி இடத்திற்கு ஒளி கொடுத்தாள். முன்னைய நாட்களில் மின்துண்டிப்பு ஏற்பட்ட உடனே சண்முகம் தன் டைனமோ சைக்கிளை ஓட்டி வெளிச்சம் கொடுப்பார். ஆனால் இன்று ஜானுவின் வார்த்தைகளால் மனங்குழம்பி வாய் திறக்காமல் அமைதியாக இருந்தார்.

அப்போது கவின், ''தாத்தா, நான் உங்கட சைக்கிள சுத்த போறேன்" என்று கூறி அடம்பிடித்துக் கொண்டிருந்தான். ''இங்க வா கவின், இந்த வெளிச்சம் போதும். கொஞ்ச நேரத்தில கரண்ட் வந்திடும்" என்று கூறிக் கவினை அமைதிப்படுத்த முயன்றாள் ஜானு. ஆனாலும் கவின் விடுவதாக இல்லை.

உடனே ராணி ''கவின் செல்லம் கொஞ்ச நேரத்துக்கு நீ போய் சைக்கிளைச் சுத்தி விளையாடுப்பா "என்று கூறினாள். அத்தோடு நிறுத்தி விடாமல் ராணி ஜானுவிடம்

''ஜானும்மா நீ விடியக் கதைச்சது பிழை. உனக்கு ஒரு விசயம் தெரியுமா? உங்கட அப்பான்ர அந்த பழைய ஓட்டை சைக்கிள் இல்லை என்றாள் இன்றைக்கு நானுமில்லை நீயுமில்லை"

அன்றைக்கு 96 ஆனி 3ம் திகதி விடியக் காலமை 2.30 க்கு எனக்கு வயித்துக்குத்துத் தொடங்கிட்டு. அண்டைக்குக் குத்தில சுழன்று கதறிட்டு இருந்தன். உங்க பெரியப்பான்ர கார் வீட்டு வாசலல நிண்டது. பெரியமாமான்ர மோட்ட சைக்கிளும் முன்னுக்கே தான் நிண்டது. ஆனால் ஒருத்தர் கூட ஆஸ்பத்திரி போக முன் வரேல்ல. நான் அவங்கள குறையா சொல்ல வரல ஜானு. அண்டைக்கு நாடு முழுக்க ஊரடங்கு சட்டம். யாருமே வெளியில போகேலாது. அதனால தான் அவங்க யாருமே என்னை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போக முன் வரேல்ல. அந்த நேரம் உடனே உன்ர சின்ன மாமா அம்மம்மாவை தன்ர சைக்கிள்ளை ஏத்திட்டு முன்னுக்கு போக பின்னுக்கு உன்ர அப்பா என்னை ஏத்திட்டு ஆஸ்பத்திரிக்கு போனாங்க. ஆஸ்பத்திரிக்கு போய் சரியா 12 நிமிசத்தில நீ பிறந்திட்டாம்மா. அண்டைக்கு உங்கட அப்பாட்ட பெரிய வாகனம் இல்லை எண்டத நினைச்சு சந்தோசப்பட்டன். இந்த சைக்கிள் இல்லை எண்டால் இண்டைக்கு நானும் நீயும் இல்லை. அது மட்டுமில்ல 2006 பிரச்சினை நேரத்தில் இடம் பெயர்ந்து போனதும் இதே சைக்கிள்ள தான். ஏன் நீ மறந்திட்டியா ஜானு, சின்னனில நீயும் தம்பியும் சந்நிதி, வல்லிபுரகோயில் எல்லாம் அப்பான்ர சைக்கிள்ள தானே போய் வாறனீங்கள். நீ ஒன்பதாந்தரம் படிக்கேக்க ஒரு நாள் இப்படி தான் கரண்ட் நிண்டது. அடுத்த நாள் உனக்குப் பரீட்சை இருந்தது. அப்ப நீ கை விளக்கில படிக்கேக்க உன்ர தலை முடி எரிஞ்சிட்டு எண்டு நான் உன்னைப் பேசி படிச்சது காணும், எண்டு விளக்கை அணைச்சிட்டேன். அண்டைக்கு நீ அடுத்த நாள் பரீட்சை எண்டு சொல்லி அழுதிட்டிருந்தாய். அந்த நேரத்தில உங்கட அப்பா தன்ர இந்த சைக்கிள்ளை சுத்தி டைனமோ விளக்கு எரிய வைத்துத் தானே நீ படிச்சனிம்மா. ஞாபகம் இல்லையா உனக்கு ?" என்று ராணி ஒவ்வொரு சம்வத்தினையும் நினைவுபடுத்தும் போது ஜானுவின் கண்களில் வழிந்தோடிய கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

ஓடிப்போய் வெளியில் கவினுக்கு சைக்கிள் சுற்றிக் காட்டிக் கொண்டிருந்த சண்முகத்தைக் கட்டி அணைத்து விக்கி விக்கி அழுதாள். அவளால் அழுகையை அடக்க முடியவில்லை. ''என்னை மன்னிச்சிடுங்க அப்பா, நான் அப்பிடிக் கதைச்சிருக்கக் கூடாது. என்னை மன்னிச்சிடுங்க அப்பா" என்று அழுதபடியே இருந்தாள் ஜானு. ''சரிம்மா அழாதம்மா தங்கம். அத விடும்மா" என்று சொல்லி ஜானுவை சமாதானப்படுத்த முயன்றார் சண்முகம். ஆனாலும் ஜானு சமாதானம் ஆகுவதாக இல்லை.

நீண்ட அழுகைக்குப் பிறகு ஒருவாறு சமாதானமாகிக் கொண்டாள். இத்தனைக்கும் சைக்கிள் சுத்தி விளையாடிட்டிருந்த கவின் விளையாடுவதை விட்டு விட்டு, ஜானு அக்கா ஏன் அழுகிறாள் என்று தெரியாமல் தானும் அழ தொடங்கி விட்டான்.

ராணி, கவினைச் சமாதானப்படுத்தி அவன் அழுகையை நிறுத்தினாள். உடனே நிறுத்தி வைத்திருந்த அப்பாவின் சைக்கிளில் ஏறி கவினை முன்னுக்கு ஏற்றி சைக்கிள் மிதியைச் சுற்றி டைனமோ விளக்கை எரியச் செய்து தனக்குத் தானே சிரித்துக்கொண்டாள் ஜானு.

அந்த ஒரு கணத்தில் கவின் உட்பட எல்லோர் முகத்திலும் சந்தோசம் தவழ்ந்து விளையாடியது. அப்படியே இருக்கக் கரண்டும் வந்து விட்டது. எல்லோரும் வீட்டுக்குள் சென்றதும் ஜானு, அப்பாவின் சைக்கிளை உருட்டி கொண்டு வந்து உள் வராந்தாவில் விட்டு மெழுகு போர்வையால் மூடிக் கொண்டிருக்கையில் அப்பா சண்முகம் ''என்னம்மா செய்யிறாய்? வா, தூக்கம் வரலையா?" என்று கேட்ட போது ஜானு, சண்முகத்தைக் கட்டி அணைத்துக் கொண்டு ''அப்பா இனி உங்கட சைக்கிள் மழையில நனையாது, ரொம்ப மிஸ் யூப்பா" என்று சொல்லி விட்டுப் போய் நிம்மதியாகத் தூங்கினாள்



"இலக்கியத்தில் இன்னதுதான் சொல்ல வேண்டும், இன்னது சொல்லக்கூடாது என ஒரு தத்துவம் இருப்பதாகவும், அதை ஆதரித்துப் பேசுவதாகவும் மனப்பால் குடித்துக்கொண்டிருக்கலாம். உண்மை அதுவல்ல சுமார் இருநூறு வருடங்களாக ஒருவிதமான சீலைப்பேன் வாழ்வு நடத்திவிட்டோம். சில விடயங்களை நேர் நோக்கிப் பாக்கவும் கூசுகிறோம். அதனால் தான் இப்படிச் சக்கரவட்டமாகச் சுற்றி வளைத்துச் சப்பைக்கட்டு கட்டுகிறோம். குரூரமே அவதாரமான ராவணனையும், ரத்தக்களறியையும், மனக் குரூபங்களையும்,விகற்பங்ளையும் உண்டாக்க இடம் இருக்குமேயானால், ஏழை விபச்சாரியின் ஜீவனோபாயத்தை வர்ணிப்பதாலா சமூகத்தின் தெம்பு இற்றுப்போய் விடப்போகிறது? இற்றுப்போனது எப்படிப் பாதுகாத்தாலும் நிற்கப்போகிறதா?மேலும் இலக்கியம் என்பது மன அவசத்தின் எழுச்சிதானே? நாலு திசையிலும் ஸ்டோர் குமாஸ்தா ராமன், ஸினிமா நடிகை சீத்தம்மாள், பேரம் பேசும் பிரமநாயகம் - இத்யாதி நபர்களை நாள் தவறாமல் பார்த்துக்கொண்டிருந்து விட்டு, இவர்களது வாழ்வுக்கு இடமளிக்காமல், காதல் கத்தரிக்காய் பண்ணிக்கொண்டிருப்பது போன்ற அனுபவத்துக்கு நேர் முரணான விவகாரம் வேறு ஒன்றும் இல்லை. நடைமுறை விவகாரங்களைப் பற்றி எழுதுவதில் கௌரவக் குறைச்சல் எதுவும் இல்லை."

**புதுமைப்பித்தன்.**



# கரிகாலன்

**- சமரபாகு சீனா உதயகுமார்**

அன்று கவிஞர் மிதிலாவின் கவிதைநூல் வெளியீட்டு விழா முடிந்திருந்த தருணம். சற்று நேரத்தின் பிறகு அங்கு வந்தவர்களில் பலர் நட்புநிலை கொண்டாடினர். ஒருவருக்கொருவர் கைலாகு கொடுத்து உரையாடி மகிழ்ந்தனர். விழா மண்டபத்திலிருந்து வெளியேறிச் செல்லுபவர்களுக்கு முகமன் செய்து, நன்றி சொல்லி வழி அனுப்பிக் கொண்டிருந்தாள், மிதிலா. அப்படி அவள் வழியனுப்பும்போது முகம்மெல்லாம் பல்லாக ஜொலித்தாள்.

இதற்கிடையிலே, கவிஞர் திலீபனைச் சுற்றி ஒரு கூட்டம் சூழ்ந்து கொண்டது. அவர்கள் அனைவரும் கைலாகு செய்து திலீபனுக்குப் பாராட்டுதல் சொல்லிக்கொண்டனர். திலீபனின் பேச்சில் இருந்த உணர்வுகளைச் சொல்லி நெகிழ்ந்தனர். அப்படி அவர்கள் திலீபனிடம் சொல்லும் போது அவர்களுக்குள் இருந்த மன விகசிப்பை திலீபன் உணரலானான்.

அவன் ஒரு ஆங்கிலபாட ஆசிரியனாக இருக்கும்போது எத்தனை மகிழ்ச்சி பெற்றிருப்பானோ, அதைவிடப் பலமடங்கு சந்தோசம், இலக்கியக்காரனாக வந்தபோதுதான் கிடைத்திருந்தது. அங்கு வந்தவர்கள் பலரும் திலீபனின் ஆக்கங்களை வாசித்தவர்களாகவும், வானொலியில் அவன் வாசித்த கவிதையினைக் கேட்டவர்களாகவும் சொல்லுகின்றனர். எல்லோரையும் சந்தித்துப் பேசியதில் மகிழ்ச்சியடைந்த திலீபன் யாழ்ப்பாண பஸ்சில் ஏறிப் பயணிக்கத் தொடங்கினான். இப்ப திலீபனின் எண்ண ஓட்டத்திற்குள் கலந்துவிட்ட ஒரு சம்பவம் ஓடத் தொடங்கியது.

திலீபனும் அவனது நண்பர்களும் யாழ்ப்பாணம் பெரியாஸ்ப் பத்திரிக்கு சென்றபோது நடந்த ஒரு சம்பவம், இது. திலீபனுடன் படிப்பிக்கின்ற ஆசிரியரின் மனைவிக்கு வருத்தம் கடுமை என்றும் இன்றைக்கு அல்லது நாளைக்கு அவர் இறந்துவிடுவார் என்ற செய்தியும் அறிந்தனர். அதுதான் அவர்கள் அங்கே போயிருந்தனர்.

அதிதீவிர சிகிச்சைப்பிரிவு வாசல் முன்னாலே வந்து குமிந்தனர். எல்லோருடைய முகங்களிலும் சோகம் அப்பியிருந்தது. அந்தக்கூட்டத்தில் திலீபனும் அவன் நண்பர்களும் ஒரு பக்கமாக நின்று கொண்டனர். தற்போதுள்ள உடல் உபாதைகளுக்கும், உளச் சோர்வுக்கும் இன்றைய உணவுப்பழக்க முறையும் காரணம் என்கிற சம்பாசணை தான் முதலிடம் பிடித்திருந்தது.

அந்தக்காலத்தில் சிவப்புப் பச்சை அரிசியைத் தண்ணியில ஊற விட்டு அதை உரலில்போட்டு உலக்கையால் குத்தியிடிப்பார்கள். இது

பின்னேரப்பொழுதில்தான் இடம்பெறும். அயல்வீட்டுப் பெண்களும் சேர்ந்துகொள்வர். அரிசியைக் குத்தியிடித்து மாவாக்கும் சம்பவம் அற்புதமாகும். உடல் அலுப்புத் தெரியாமலிருக்க ஊர்க் கதைகள் சொல்லி அரிசி குத்தி இடிப்பார்கள். இரண்டு அல்லது மூன்று பெண்கள் போட்டிபோட்டு அரிசி இடிப்பர். தங்கள் கைகளை மாற்றிமாற்றி, கைவீசி அரிசியிடிக்கும் பெண்களின் அழகினைச் சொல்ல வார்த்தைகள் போதாது. இது ஊர்ப் பெண்களிடம் உள்ள சிறந்த கொடையாகும். உரலின் மையத்திலே விழும் உலக்கையால் உயரப்பாங்கிற்கு குழியொன்று தோன்றும். அதைச் சுற்றி இடிபட்ட அரிசி எம்பி வந்து மீண்டும் குழிக்குள் விழும். அரிசி இடிவாங்கித் துளான அரிசியைப் பின்னறையில் போட்டு அரித்து மாவாக எடுப்பார்கள்.

ஒவ்வொரு உலக்கையும் சரிந்து அசைந்து துள்ளும் அழகும் பார்ப்பவருக்குக் கண்கொள்ளாக் காட்சியாகும்.

இப்படிக் குத்தியெடுத்த அரிசிமாவில் ஆக்கிய பிட்டுக்குள் தேங்காய்ப்பூவும் சீனியும் சேர்ப்பார்கள். அல்லது போனால் தேங்காய்ப்பூவும் சர்க்கரையும் சேர்த்துக் குழைத்துச் சாப்பிடக் கொடுப்பார்கள். சுடச்சுடத் தருகிற பிட்டை அள்ளித் தின்பார்கள். ஆவி பறந்து கொண்டிருக்கும். சுவை மிகுந்த அரிசிமா பிட்டுடன் வாழைப்பழம், மாம்பழம் பிசைந்து தின்றால் அதுவுமொரு தனிச்சுவைதான். அந்த அரிசிமாவிலே பாலப்பம் சுடுவார்கள். அவிந்த பாலின்மேல் சீனி தூவுவார்கள். கழுவிச் சுத்தமாக்கிய பூவரசம் இலையில் வைத்து பாலப் பத்தைத் தருவார்கள். வரிசையாக இருந்து சிறுவர்களாகிய நாம் சாப்பிடுவோம். அப்பத்தினைச் சாப்பிடும்போது ஒவ்வொரு வருடைய முகபாவமும், அப்பத்தின் ருசியினை எடுத்துக்காட்டும். உது மட்டுமே, ஆச்சி மீன் குழம்பு வைச்சாவெண்டால் அதன் வாசம் அயல் வீட்டுக்கும் வீசும். ஆச்சியின் சமையல் ருசிபற்றி அந்தக்காலத்தாக்கள் இப்பவும் கதைப்பினம்' பாலன் இதைச் சொன்னான்.

'இறைச்சிக்குழம்புக் கறிக்குள்ளே தூள் போடமுதல் பாலவியலில் கொஞ்சத்தைக் கிள்ளி சிரட்டைக்குள்ள விட்டு அம்மா தருவார். அதென்டா ரேஸ்ற்' ஆனந்தன் சொன்னான். 'காலைவேளயில மரவள்ளிக்குழம்புக்கறி காய்ச்சிய சட்டிக்குள்ள அல்லது முருங்கக்காய்க் குழம்புக்கறி காய்ச்சிய சட்டிக்குள்ளே பழம்சோற்றினையும் போட்டு வடிவாக் குழைச்சுப் போட்டு கவளமாக்கி ஒவ்வொருத்தருக்கும் கையிலே மூத்தக்கா தருவார். சா... அதென்ன ருசியெடா' – சிறி சொன்னான்.

'சின்ன வெங்காயம் நிறைய வெட்டிப்போட்டு, வெந்தயத்தில குழம்பு வைச்சு அம்மம்மா தருவார். சாப்பிட்டு முடிந்து கை கழுவினாப்பிறகும் வெந்தயக்குழம்பு வாசம் கமகமவெண்டு கையிலே மணக்கும். டேய் என்னெடா இண்டைக்கு உங்கட வீட்டில வெந்தயக்குழம்புக் கறியோ என்று சினேகிதப் பொடியள் கேப்பாங்கள்' – திலீபனும் தன்ர பங்கிற்கு அந்தக்காலங்களை மீட்டுச் சொன்னான்.

சுவார்சியமான சம்பாசணை போய்க்கொண்டிருக்கும் வேளையில், இடைநடுவிலே ஒருவர் அந்தக் குழுமத்திற்குள் நுழைந்தார். திலீபனுக்குக் கிட்டவாக வந்தார். தானொரு



டொக்டர் என்றும், தனது பெயர் செல்வம் என்றும், திருகோண மலையில் இருப்பதாகவும் தன்னை அறிமுகம் செய்தார்.

'சேர் நீங்கள்தானா எழுத்தாளர் திலீபன்' என்று திலீபனைப் பார்த்துக் கேட்டார்.

'ஆம்' என்றான் திலீபன்.

கணப்பொழுதிலே தன்னருகிலே நின்ற மனைவியின் கையைப் பிடித்து இழுத்து முன்னாலே நிறுத்தினார். 'இவ என்னுடைய மனைவி சிவகாமி. இவ பள்ளிக்கூட அதிபராக இருக்கிறார். உங்கட தீவிர வாசகி. பத்திரிகையில உங்கட கதைகள், கவிதைகள், கட்டுரைகள் வந்தது கண்டால் போதும். அதையெல்லாம் வாசித்த பிறகுதான் மற்றய வேலைகள் பாப்பா.' என்று சொல்லி முடித்தார்.

அந்தநேரத்தில் திலீபனின் முகத்தில் வந்து விழுந்த சந்தோசத்துக்கு அளவேயில்லை. அப்படி மகிழ்ச்சியாகத் தெரிந்தான். தன்னை நினைத்து ஒருகணம் பெருமையடைந்தான். அவனது முகத்தில் அந்தப் பிரகாசிப்பு வடிவாகத் தெரிந்தது. திலீபன் நினைவுகளிலிருந்து மீண்டான்.

இப்ப ஆனையிறவு வெளியிலே பயணித்துக் கொண்டிருந்தான். இதமான காற்று கன்னவோரம் தடவி பின்னே செல்கிறது. அந்தநேரம் இனிய பாடலொன்று அவன் காதுகளை நனைத்து மகிழச்சிப்படுத்துகிறது.

உச்ச மகிழ்ச்சியில் கசிவுற்ற அவன் வீடு வந்து சேர இரவு எட்டு மணியாகிவிட்டது.

-2-

இலக்கிய விழாக்களுக்குச் சென்று சந்தோசங்களைச் சுமந்து வருகிற திலீபனுக்கு, பாடசாலைக்குச் சென்று வந்தால் மட்டும் மகிழ்ச்சி தெரிவதில்லை.

பாடசாலைக்குப் போகும்போது சந்தோசமுடன் போவான். படிப்பிக்கிறதென்றால் தனக்குக் கொள்ளை விருப்பம் என்பான்.

தேவையற்று விடுமுறை எடுக்கமாட்டான். உறவுகளின் திருமணம் வைபவம், சாமத்திய நிகழ்வு, மரண நிகழ்வுக்காக மாத்திரம் விடுமுறை எடுத்திருக்கிறான். மாணவர்களும் திலீபனின் கற்பித்தல் மீதும், கற்பித்தலிடையே சொல்லுகிற நகைச்சுவைக் கதைகளைக் கேட்பதிலும் ஆர்வமாக இருந்தனர். காலை வணக்க முடிவிலே, அவன் சொல்லும் ஒழுக்கவிழுமிய கருத்துகள் வித்தியாசமான சிந்தனைகள் என்று ஒருமுறை சகுந்தலா ரீச்சர் பாராட்டியுள்ளார்.

பாடசாலை வேலி அடைப்பதென்றாலோ அல்லது பாடசாலை வளவினைச் சுத்தம் செய்வதென்றாலோ பெற்றோரும் வந்து நின்று பாடுபடுவர். இது திலீபனின் மேற்பார்வையில்தான் நடக்கும். அதற்கான பொறுப்பினை அதிபர் வழங்கியிருந்தார்.

அதிபர் சொல்லும் பணிகளைச் செவ்வனே செய்து முடிக்கிற திலீபனை அதிபர் பாராட்டுவார். முகமன் சொல்லிச் சிரிப்பார். இவையெல்லாம் மற்றைய ஆசிரியர்களை ஏமாற்றுவதற்கான உத்தியென்பதை உணர்ந்து அவதானமாகச் செயற்பட்டான், திலீபன்.

'முகமன் செய்வதில் ஆள் ரொம்பக் கெட்டிக்காரன் அதிகாரிக்கும் மற்ற ரீச்சர்மாருக்குப் போட்டுக் கொடுப்பதில் ஆளொரு விண்ணன். தனக்குக்கீழ் பணி செய்கிற ஆசிரியர்பற்றி கதை கட்டுவார். உரிய இடங்களுக்கு அனாமதேயக் கடிதம் எழுதிப்போடுவார். இந்த அதிபர் முன்னைய பாடசாலையில் ஆசிரியர்களோடு எப்படியான பழக்கத்தைக் கொண்டிருந்தார். தனக்குப் பிடிக்காதவர்களை எப்படிப் பழிவாங்கினார். இந்த அதிபர் வேண்டாம் இவனொரு விசரன் புட்டிசம் அடிப்பதில் இவனொரு லூசன். அந்தசேர் அந்த ரீச்சரோடு கள்ளத் தொடர்பு இந்தசேர் இந்த ரீச்சரோடு கள்ளத்தொடர்பு என்று ஊர்க்கதைகள் கதைப்பார். இப்படி ஆசிரியர்கள் மேல் பழிவாங்கலைச் செய்து வந்தார்' என்று திலீபனிடம் சகுந்தலா ரீச்சர் சொல்லியிருக்கிறார்.

'ஏன் ரீச்சர், உவருக்கு அந்தப் பள்ளிக்கூடத்திலயிருந்து இந்தப் பள்ளிக்கூடத்துக்கு ரான்சர் வந்ததாம்?' திலீபன் கேட்டான்.

'அந்தப்பாடசாலையில லோகன் ஆசிரியர் தமிழ்ப்பாடம் படிப்பித்தவர். ஏ.எல் வகுப்புக்குத் தமிழ் சொல்லிக் கொடுக் கிறவர். காலையிலும் ரியூசனுக்குப் போய் படிப்பித்துவிட்டு பாடசாலைக்குப் பிந்தி வருவார். இது இந்த அதிபருக்கு எரிச்சலைக் கொடுத்தது. ரண்டு மூண்டு தடவை லோகனிடம் சொல்லிப் பார்த்தார் லோகனை மாணவர்கள் மத்தியில் பேசி அவமானப்படுத்தினார். லோகன், அதிபர் மீது கோபமாக இருந்தார். அதிபரின் வார்த்தைக்கு லோகன் மதிப்புத் தரமாட்டான் என்பதை அதிபர் உணரலானார். இதற்குப் பிறகும் பாடசாலைக்குப் பிந்தி வருவதை லோகன் நிறுத்த வில்லை.' சகுந்தலா ரீச்சர் சொன்னார்.

பள்ளிக்கூட நேரத்தில் ரியூசனில் லோகன் படிப்பித்துக் கொண்டிருந்தான். அதிபர் தனக்குத் தெரிந்த மாணவன் மூலம் போட்டோ பிடித்து வரச்சொன்னார். அவனும் அதைச் செய்து கொடுத்தான். 'ஸ்மாட் போனில்' எடுத்த போட்டோவைக் கழுவிப் பார்த்தார். அதிலே திகதி, நேரம் எல்லாமே அச்சாகப் பதியப்பட்டிருந்தன. அதிலுள்ள நேரம் காலை எட்டுமணி நான்கு நிமிடம் என்றிருந்தது. அந்தச் சூழ்நிலையில் பாடசா லைகள் எட்டு மணிக்கு ஆரம்பமாவது வழமை. அந்தப் போட் டோவையும் தன்னால் வரையப்பட்ட கடிதமொன்றையும், அன்றையதினம் லோகன் பாடசாலைக்கு வந்த நேரத்தைக் காட்டும் கையொப்பத்தைப் போட்டோக்கொப்பி எடுத்து வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்தார், அதிபர்.

இதுக்குப் பிறகு லோகனுக்கு மேலிடத்திலிருந்து அசௌகரியங்கள் பல வரத்தொடங்கின. பலவிதமாக லோகன் அவமானப் படுத்தப்பட்டான். லோகனின் ஆசிரிய வேலை பறிபோக இருப்பதாக பாடசாலை எங்கும் கதை அடிபட்டது. அந்தக்கதை அந்த வலயத்திற்குட்பட்ட எல்லாப் பாடசாலை களிலும் அடிபடத் தொடங்கியது.

அங்கே அதிபருக்கு எதிராகப் பலரும் உருவெடுத்துக் கிளம்பினர். பெற்றோரும் பழைய மாணவர்களும் லோகனுக் காகத் துணை நின்றனர்.

'தலைமைத்துவப் பண்பு என்றால் என்னவென்று தெரியாதவன். இந்த அதிபர் கொஞ்சம்கூட பண்பில்லாதவன் குருடன் பெண்டிலுக்கு அடித்த கதைபோல இவனும் தட்டுத் தடுமாறி அதிபராக வந்திட்டான்' என்று லோகனின் சக ஆசிரியை திட்டினாள்.

அடுத்தடுத்த மாதத்திலே அதிபர் இடமாற்றம் பெற்று அதிகஸ்டப் பிரதேசப் பாடசாலையான இப்பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கேதான் திலீபனும் ஆசிரியராகக் கடமை புரிகின்றான்.

இலக்கியம், பாடசாலை என இரண்டின் மீதும் அதீத விருப்புப் பெற்றிருந்த திலீபனிடம் அது இப்ப தலைகீழாக மாறியிருந்தது. அதற்குக் காரணம் ஜோன்தான். பௌர்ணமியும் அமாவாசையும் மாறி மாறி வருவது போல, இலக்கிய விழாக் களிற்குப் போனால் மகிழ்ச்சியும் பாடசாலைக்கு வந்தால் மனக்கஸ்ரமும் ஊடுலாவித் தனக்குள் பெரும் போராட்டம் ஒன்று நிகழ்ந்து கொண்டிருப்பதை திலீபன் உணர்ந்தான்.

-4-

திலீபனின் பாடசாலை உள்ளடங்கிய வலயக்கல்வி அலுவலகம் முத்தமிழ் விழா ஒன்றை பிரமாண்டமாக ஏற்பாடு செய்திருந்தது. மாகாண ஆளுநர், கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோர் விருந்தினர் பட்டியலாக அழைப்பிதழில் நீண்டிருந்தனர்.

பாடசாலை அதிபர்கள், உதவிக் கல்விப் பணிப் பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், பிரதேச செயலர்கள், கணக்காளர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், பத்திரிகையாளர்கள் என்று மிகப் பெரிய அணி யொன்று அங்கு திரண்டிருந்தது.

கல்வி வலயத்திற்குட்பட்ட உயர்தர வகுப்பு மாணவர்கள் வெள்ளைச் சீருடையில் நீண்ட வரிசையில் இருக்கின்றனர். மேடையில் ஆசிரியர், மாணவர் கலந்த கலை நிகழ்ச்சிகள் போய்க்கொண்டிருந்தன. மிகச் சிறந்த கலை அம்சங்களாலும்



மண்டபம் நிறைந்த சனங்களாலும் விழா சிறப்புக்காட்டி வெளிச்சம் கொட்டியது.

உரைகள் இடையே கவிதை வாசிப்பு, நடனம், நாடகம் என்று நிகழ்ச்சி அமைப்பு இருந்தது. நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குபவர் தமிழ்பாட ஆசிரிய ஆலோசகர், மிதிலா. கவிதை மொழியில் அவரது தொகுப்புரை இருந்தது. வருகை தந்த அனைவரும் மிதிலாவின் தொகுப்புரையினை இரசிக்கின்றனர். அதற்குக்காரணம் கவிதைமொழி மட்டுமல்ல, மிதிலாவின் இனிமையான குரலும் மிதிலாவின் அழகும், அந்த அழகுடலை வரித்துக்கட்டப்பட்ட ஆடையும்தான்.

திலீபன் சிறப்புரைக்காக மேடைக்கு அழைக்கப் படுகிறான். கடந்த இரண்டு வருடங்களாக அரச ஆக்கத்திறன் போட்டியில் கலந்து கொண்டு கவிதை, சிறுகதைக்காக முதல் பரிசினைப் பெற்றவன், அவன். அவனைக் கௌரவப்படுத்தும் ஒரு செயலாக வலயக்கல்வி அலுவலகம் ஒரு சந்தர்ப்பத்தை இப்படி வழங்கியது. இதனால் அவனது பாடசாலை ஆசிரியர்களும், பாடசாலைச் சமூகமும் சந்தோசத்தில் இருந்தனர். இதில் அதிபருக்குக் கொஞ்சம்கூட விருப்பமில்லை.

‘அதிபர் ஒரு நரியன். ஆளொரு நஞ்சன். அவனொரு அழலன். அண்டல்காரன் ஆத்திரக்காரன் பொறாமைக்காரன்’ என்று அவனைச் சகுந்தலா ரீச்சர் சொன்னபோதெல்லாம் திலீபனும் கேட்டிருக்கிறான். ஆனால், அப்படியொரு வார்த்தை திலீபனின் வாயிலிருந்து ஒருபோதும் உதிர்ந்ததில்லை. அவன் அப்படி யாரையும் வசைபாடமாட்டான்.

இப்ப மேடை நோக்கித் திலீபன் வருகிறான். சிறு புன்னகையால் விருந்தினரைக் கடந்து செல்கிறான். சபை அமைதியாகிறது. திலீபனின் உரை கேட்க அவ்வளவு ஆவல். அது சபையோர் முகத்தில் பளிச்சென்று வடிவாகத் தெரிந்தது. சபையைப் பார்த்ததும் திலீபனுக்கும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. தன் மன நிலையினை ஒருமுகப்படுத்திவிட்டு அடுத்த விநாடியிலேயே உரையினை ஆரம்பித்தான்.

‘அவன் கடவுள் மாதிரி இருக்கிறான் என்றாலும் இல்லை என்றாலும் இருந்துகொண்டுதான் இருக்கிறது. அவன் மீதொரு பயமும் பக்தியும்! எங்கள் தமிழ்த் தலைவனுக்கு என் முதல் வணக்கம்!’ என்று அவையின் முதல் வணக்கத்தை அடக்கமுடன் ஆரம்பித்தான்.

சபையிலிருந்து கைதட்டல் பலமாக வந்தது. முன் வரிசை அதிகாரிகள் புன்முறுவல் செய்கின்றனர். மாணவர்கள் ஆர்வமாகக் கை தட்டுகின்றனர். அதிபர் மூஞ்சியை ‘உம்’ என வைத்து ஒரு காய்ச்சல்காரன் போலத் தெரிகிறார். வில்லங்கமாகச் சிரிக்க முயல்கிறார்.

‘தலைமைத்துவம் பற்றிச்சொல்ல இதுவே சரியான தருணம். தலைமைத்துவப் பண்புள்ள அதிகாரிகள் பலர் இங்கு வந்துள்ளீர்கள். மாணவர்களிடமும் இந்தப்பண்பு சென்றடைய வேண்டும் என்பதற்காகவே இந்த விடயத்தை இதில் சொல்ல முனைகிறேன். தவறேதுமிருந்தால் மன்னிக்கவும்’

‘செயலென்று இறங்கிவிட்டால் அதில் வெற்றி பெறுவதற்குச் சரியான எவ்வழியிலும் மூர்க்கமாக முயல்வது கரிகாலனின் இயல்பு, ஆகும்.’

கரிகாலன் யாரென்று புரிந்த மகிழ்ச்சியில் மாணவர்கள் உற்சாகமாகின்றனர். இப்ப மாணவர்களின் கைதட்டல்கள் மண்டபத்தைப் பிளந்து வெளியே பாய்கின்றன. முன்வரிசை அதிகாரிகள் தங்கள் இருக்கைகளில் ஒரு சரிசமன் செய்து நெஞ்சு நிமிர்த்தி அமர்கின்றனர்.

‘முடியாதென்று முடங்கிவிடாமல் சாத்தியமான அனைத்து வழிகளிலும் முயல வேண்டும்’ என்று கரிகாலன் தன் போராளிகளிடம் அடிக்கடி சொல்லி உற்சாகம் செய்வாராம். ‘மிகவும் இறுக்கமானதும், கட்டுக்கோப்பானதுமான இயக்கத்தை வழி நடத்திய பண்பாளன், சாதனையாளன், ஆறுதல் தருவதில் அன்பானவர், பழகுவதற்கு மிகவும் இனிமையானவர் எங்கள் கரிகாலன்’

முத்தமிழ் விழா அரங்கு ஒரே அமைதிநிலை. குண்டூசி விழுந்தால்கூட சத்தம் கேட்கும்.

அந்தப் போர்வீரனின் வீரவரலாற்றிலே நடந்த ஒரு சம்பவத்தை சொல்லலாம் என நான் நினைக்கிறேன். திலீபன் சொல்லத் தொடங்கினான்.

‘2006 ஆம் ஆண்டாக இருக்கலாம். குடாநாட்டிலிருந்து முன்னேறி கரிகாலன் ஆட்சி செய்த பெரு நிலப்பரப்பைச் சுற்றிவளைப்பதாக இராணுவம் ஒரு திட்டம் தீட்டியிருந்தது. இந்த விடயத்தை முன்கூட்டியே கரிகாலன் அறிந்துவிட்டார். இராணுவம் தம்மைத் தாக்குவதற்கு முன்பாக தானும் தன் படையும் முந்திவிட வேண்டுமென எண்ணினார். திட்டமும் தீட்டினார். ஒருநாள் பாரிய அளவில் கரிகாலனின் சேனை

குடாநாடு நோக்கிப் படையெடுத்தது. அதற்குப் பலம் சேர்க்கும் நோக்கில் தன்னால் உருவாக்கப்பட்ட தன் கடல்படையின் அறுபத்தைந்து சண்டைப்படகுகள் அடங்கிய பதின்மூன்று படகுத்தொகுதிகளை குடாநாட்டின் முக்கிய துறைமுகம் நோக்கி அனுப்பி வைத்தார். ஆனால், எதிரியோ முன்னா யத்தமாக இன்னொரு திட்டத்தைத் தீட்டிவைத்திருந்தான். அதன்படி கரிகாலனின் கடற்படையின் அனைத்துப் படகுகளும் எதிரியின் கடற்படைக் கப்பல்களால் ஒரு சக்கரவியூகத்தில் சுற்றி வளைக்கப்பட்டன. சாதாரணமான சுற்றிவளைப்புகள் கரிகாலனின் கடல்படைக்கு சிறுபிள்ளை விளையாட்டாக இருந்துவிடுவது வழமை. அப்படியான சுற்றிவளைப்புகளை எப்படியோ உடைத்துக்கொண்டு வெளியேறி விடுவார்கள். இது எதிரிக்கும் நன்கு தெரியும். ஆனால் இந்தச் சுற்றிவளைப்பை உடைப்பது கடினம் என்பது கரிகாலனின் கடல்படையின் களத்தளபதிக்குத் தெரிகிறது. கரிகாலனின் கடல்படையின் தற்கொலைப்படை முன்னே சென்று எதிரியின் முக்கிய கப்பல்களை உடைத்து, பாதையொன்றை அமைத்து வெளியேறுவதற்கு கரிகாலனின் கடல்படையின் களத்தளபதி தமது சிறப்புத்தளபதியிடம் அனுமதி கேட்கிறார். அவ்வாறு உடைத்து வெளியேறுவது ஆபத்தானது என்பது சிறப்புத்தளபதிக்கும் தெரிகிறது. சிறப்புத் தளபதிக்கு இப்ப என்ன முடிவெடுப்பது என்ற குழப்பம் ஏற்படுகிறது. படை நடவடிக்கையை ஒருங்கிணைப்புச் செய்கிற கரிகாலனின் அடுத்தநிலைத் தளபதி அத்தனை போராளிகளின் ஆபத்தான நிலைமையைத் தெரிந்தவுடன், இவ்விடயத்தைக் கரிகாலனுக்குத் தெரியப்படுத்துகிறார்.'

இப்ப மண்டபம் எங்கும் பேரமைதி நிலவியது. சபையை இடையிடையே உற்றுப் பார்த்து அவர்களின் முக அசைவுகளைக் கொண்டுதான் தன் பேச்சின் தொடர்ச்சியைத் தொடங்குவது திலீபனின் பேச்சுத்திறன் உத்தி. கணநேரத்திற்குள் இந்த அவதானம் இடம்பெற்றுவிடும். ஆனாலும், பேச்சின் தொடர்ச்சியில் எந்தவொரு தொய்வும் இருக்கமாட்டாது. அடுத்து என்ன என்பதில் எல்லோரும் கதிரை விளிம்பிற்கு வந்தவர் களாகத் தெரிந்தனர். திலீபன் தொடர்ந்து பேசலானான்.

'நேரடியாகவே கட்டளை நிலையத்திற்கு மின்னல் வேகத்தில் கரிகாலன் வந்து சேர்கிறார். அங்கே பொருத்தப் பட்டிருந்த அந்த ரேடார் திரை ஊடாக கடலின் களநிலையை அவதானிக்கிறார். அவர் கண்கள், இரை தேடும் கழுகின் கண்கள் போல ஒருங்கிக்குவிகின்றன. பிறகு தன்னருகாக நின்ற தளபதிகளை உற்று நோக்குகிறார். படாரென ரேடாரை அவதானிக்கிறார்.

இப்ப கட்டளை இடுகிறார். 'உடனடியாக ஒவ்வொரு படகையும் ஒன்றன்பின் ஒன்றாக ஒரு நேர்கோட்டு வியூகத்துக்கு வருமாறு கட்டளையிடுங்கள். தனது கடல்படையின் சிறப்புத் தளபதியிடம் சொல்லி முடித்தார். யாருமே நினைத்துப் பார்க்க முடியாத ஒரு வியூகம், அது.'


'கரிகாலனின் ஆணையை அவரின் கடல்படைச் சிறப்புத்தளபதி உடனடியாக களத்தளபதியிடம் பிறப்பிக்கின்றார்.'

'படபடவெனப் படகுகள் ஒரு நேர்கோட்டுப்பாதைக்கு வருகின்றன. புதிய வியூகத்துக்கு மாறிய கரிகாலனின் கடல்படையின் திடீர் நகர்வினைக் கண்டு அரசகடற்படை அஞ்சுகிறது. ஏதோ பாரிய விபரீதம் தங்களுக்கு நிகழவிருப்பதாக எதிரிப்படை எண்ணியிருக்க வேண்டும். எதிரியின் கடற்படை திடீரெனப் பின்வாங்குகிறது. கரிகாலனின் கடல்படைக்கு பெருவழி கிடைக்கிறது. சிறுசண்டை ஏதுமின்றி அனைத்துப் படகுகளும் பாதுகாப்பாக எதிரியின் சுற்றி வளைப்பிலிருந்து வெளியேறுகின்றன. அதற்குப் பிறகு அவை உரிய இடத்திற்கு வந்து சேர்ந்தன என்பது வரலாறு'

மாணவர்கள் எல்லோரும் எழுந்து நின்று கை தட்டுகிறார்கள். தாங்கள்தான் அதைச் சாதித்து விட்டமாதிரியான ஓர் ஆக்ரோசம் அவர்களுக்குள் பிறந்திருக்க வேண்டும். பெரும்சந்தோசம் மாணவர்களிடம் கிளம்பித்தெரிந்தது. எழுந்து நின்று கைதட்டுகின்ற அந்த ஓசை நின்று ஓய நிறைய நேரம் எடுத்தது. அதிகாரநிலையிலுள்ள உத்தியோகத்தர்கள் அனைவரும் தங்கள் தலைகளைத் திருப்பிப் பின்னே பார்க்கின்றனர். அங்கே, மாணவர்களின் உற்சாக நிலை கண்டு வியப்படைகின்றனர்.

'தன் நிலையைவிட்டு இறங்கி வருதல் என்பது தன் கௌரவத்திற்கு பங்கம் என்றோ, தனக்குக் கீழ் உள்ளவர்களுக்கு மதிப்புத் தரக்கூடாது என்று கருதுவதோ முட்டாள்தனமானது. திறமையானவர்களை இனங்கண்டால் அதற்கான சந்தர்ப்பத்தை யாருமே வழங்க வேண்டும். வழங்குங்கள்' என்று திலீபனின் பேச்சு இருந்தது.

'இறுக்கமான தருணங்களில் மற்றவர்களுக்கு மதிப்புத் தந்து செயற்படுபவர்தான் உண்மையான தலைமைத்துவப் பண்பாளர் என்பதையும் நான் அறிவேன். திட்டமிட்ட பழிவாங் கல்கள் செய்பவர் ஒரு மனிதனே கிடையாது. இப்படியான செயலுள்ளவர்கள் ஒரு வகையான மனநோயாளியாகவே பார்க்கப்பட வேண்டும்' திலீபனின் முகத்தில் கடும் இறுக்கம் நெளிகிறது. மேடையிலிருந்து இறங்கி வருகிறான். அதிபரின் முகம் இருள்கிறது. மேடைக்கு வந்த மிதிலாவின் அறிவிப்பு எனும் வர்ணஜாலம் நீள்கிறது. நான்கு மாணவிகள் மேடைக்கு வருகின்றனர். தமிழ்மொழி வாழ்த்துப்பாட ஆயத்தமாயினர். விருந்தினர்கள் எல்லோரும் எழுந்து நிற்கின்றனர். அதிபரின் முகத்திலே வெட்கம் அப்பிக்கவிகிறது.



"என் வாசகனுக்குப் பிடித்தவிதமாக எல்லாம் எழுத முடியாது. நான் எழுதுவதை விரும்புகிறவனே எனது வாசகன்" எனச் சொல்வார். எழுதாமல் இருப்பதைப் பொருட்படுத்துவதில்லை. கேட்டால், "நான் எழுதியதை எல்லாம் முதலில் படிங்க" என்பார். இன்னும் கேட்டால், "உங்க அம்மாதான் உன்னைப் பெத்துப்போட்டா. அதுக்காக, இன்னும் பெத்துக் குடுன்னு கேட்டுட்டே இருப்பியா?" என்பார் கோபமாக!

**–ஜெயகாந்தன் பற்றி ஒரு நண்பர் –**



# சுமைதாங்கி

- குரு சதாசிவம்

சேலையை ஒதுக்கிச் சரிசெய்தவாறு அலுவலகப் பையைத் தூக்கிக்கொண்டு ஜீப் வண்டியிலிருந்து கீழே இறங்கினாள் ஜீவா. வாழ்க்கையில் முதல் முதலாகச் சந்திக்கின்ற இந்த நாள் மிகுதிக் காலத்தை எப்படி நகர்த்தப் போகிறதோ என்ற பயம் உள்ளுக்குள் வரத்தான் செய்தது. அலுவலகப் பையின் பாரம் வெகுவாகக் குறைந்து மனதிலே பாரம் ஏறியிருந்தது. முப்பத்தி ஐந்து வருட அரச சேவையை முடித்து இன்றுடன் ஓய்வு பெறுவது மனதில் புதுவிதமான உணர்வலைகளைப் பரப்பிக்கொண்டிருந்தது. அதைப் பாகுபடுத்தி உணரமுடியாவிட்டாலும் நிச்சயமாக அது மகிழ்ச்சி இல்லை என்பதுமட்டும் அவளுக்குப் புரிந்தது.

கச்சேரி அலுவலகக் கேட்போர் கூடத்தில் இன்று நடைபெற்ற பிரிவுபசார நிகழ்வில் உயரதிகாரிகள், ஊழியர்கள், படைத்துறை சார்ந்தவர்கள் பொதுமக்களெனப் பலர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கியிருந்தனர். அதிகாரிகளின் உரைகள் சற்று மிகைப்படுத்தப்பட்டதும்,சபை நடைமுறைப் பண்பு சார்ந்ததும் என்பது அவளுக்குத் தெரியும். ஆனால் சிற்றூழியர்களும்,பொது மக்களும்

''ஜீவா மெடம்''என்றபடி கண் கலங்கிய காட்சிகள், தான் ஏதோ சாதித்திருக்கிறோம் என்ற திருப்தியை அவளுக்குக் கொடுத்திருந்தது.ஜீப்பில் இருந்த பொருட்களைக் கொண்டுபோய் வைத்துவிட்டு வந்த சாரதி, ஜீவாவின் காலைத் தொட்டு வணங்கி எழுந்து விம்மி விம்மி அழத்தொடங்கினான்.

சாரதி நியமனம் கிடைத்து அவன் வேலைக்கு வந்ததிலிருந்து ஜீவாவின் சாரதியாகவே பணியாற்றிக்கொண்டிருக்கிறான்.வேலையே பறிபோகக்கூடிய எத்தனையோ சந்தர்ப்பங்களில் தன்னைப் பாதுகாத்துத் தனக்காக வாதாடிய நினைவுகள் அவனால் என்றுமே மறக்க முடியாதவை. அவனைத் தோளிலே தட்டி அமைதிப்படுத்தி அனுப்பிவிட்டு வீட்டுக்கு உள்ளே வந்தாள். வீடு அமைதியாயிருந்தது.

லெச்சுமி இரவு உணவு எல்லாம் தயாரித்து மேசையில் வைத்து மூடியிருந்தாள். கடந்த இரண்டு வருடமாக அவள் ஜீவாவின் வீட்டுக்கு வேலைக்காக வந்து போய்க் கொண்டிருக்கிறாள். ஒரு தாயின் இடத்திலிருந்து தன் விருப்பு வெறுப்புகளை அறிந்து அவள் வேலை செய்வது ஜீவாவுக்கு அவள்மேல் ஒரு பாசத்தையே ஏற்படுத்தியிருந்தது.

போட்டு வைத்திருந்த கோப்பியை கிண்ணத்தில் ஊற்றி எடுத்து வந்து ஒரு சோபாவிலே காலை நீட்டி உட்கார்ந்து கொண்டாள்..

அதில் சாய்ந்தபடி சுவரில் தொங்கும் பெற்றோரின் படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். கனடாவுக்குப் போகுமுன் அவளின் ஐ போனில் எடுத்த படத்தைப் பெரிதாக்கிப் பிறேமுக்குள் போட்டு மாட்டியிருப்பது அவர்கள் பக்கத்தில் இருப்பது போன்ற துணிச்சலைக் கொடுத்தது. தந்தையின் ஊக்கத்திலும், தாயின் பாசத்திலும் ஒரு தம்பியோடும், தங்கையோடும் வளர்ந்தவளுக்கு, அந்த நினைவுகளோடு வாழ்வதும் சுகமாகவே இருந்தது. அவர்கள் கடல்கள், கண்டங்கள் கடந்து வாழ்ந்தாலும் எல்லோரும் சந்தோஷமாக வாழ்கிறார்கள் என்பதில் ஜீவா சுகமான ஒரு சோகத்துக்குள் மூழ்கிப்போனாள்.

*********

எட்டாம் வகுப்பு மட்டுமே படித்த தந்தை காசிநாதர், அதைவிடக் குறைவான கல்வித் தரத்தில் தாய் தேவகி,

களிக்காட்டில் நாலு ஏக்கர் வயல், அலகரையில் இரண்டு ஏக்கர் தோட்டம். இதை நம்பி ஜீவாவுடன் இன்னும் இரண்டு பிள்ளைகள். இந்த நெருக்கடி வாழ்க்கையிலும் அவர்களுக்குச் சாதகமாய் கிடைத்தது முள்ளியவளை வசிப்பிடமும், பக்கத்தில் வித்தியானந்தக் கல்லூரியும். இந்த வசதிகள் எல்லாம் இருந்தும் தன்னுடைய கற்றல் முயற்சிகள் தோற்றுப்போனது பல சந்தர்ப்பங்களில் காசிநாதரை வருத்தியிருக்கிறது. எத்தனையோ அலுவலகங்களில் அதிகாரிகளால் தான் அலைக்கழிக்கப்பட்டதும், அவமானப்படுத்தப்பட்டதும் அவர் மனதில் இன்னும் ரணங்களாய்ப் பதிந்திருக்கிறது. இவற்றைச் சொல்லிச் சொல்லியே கஸ்டத்திலும் பிள்ளைகளைக் கல்வியில் உயர்த்தி வைத்தார்.

ஜீவா பல்கலைக் கழகத்தில் இறுதியாண்டில் இருந்தபோது, தம்பி சீலன் முதலாம் ஆண்டில் இணைந்து படித்துக்கொண்டிருந்தான். தள்ளாடிய பொருளாதாரம் அவளைப் பொறுப்புள்ள பெண்ணாக வடிவமைக்கத் தொடங்கி யிருந்தது. பல்கலைக் கழகத்திலிருந்து வெளியேறியவள் தகுதிக்கு ஏற்ற வேலை என்று காலத்தை வீணடிக்காமல் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றில் கிடைத்த வேலையை இறுக் கமாய்ப் பற்றிக்கொண்டு குடும்பத்தைக் கட்டமைக்கத் தொடங் கினாள். காசிநாதர் குடும்ப நிர்வாகத்தை இன்னும் தன் கைக்குள்ளேயே வைத்திருந்தார். ஆனால் ஜீவாவின் கருத்துக் கும் மதிப்பளிக்கும் மனநிலை ஒரு புதிய மாற்றமாயிருந்தது.

எதிர்பார்த்திருந்த தங்கை பிரகதியின் உயர்தரப் பரீட்சை முடிவுகள் திருப்தியாக அமையாதது ஜீவாவுக்குச் சற்று ஏமாற்றம்தான். இன்னுமொரு தடவை முயற்சி செய்யுமாறு எல்லோரும் வற்புறுத்தியும் பிரகதி மறுத்துவிட்டாள். ஜீவாவுக்குப் போனவாரம்தான் கச்சேரியில் வேலை கிடைத்திருந்தது. அரசாங்க உத்தியோகம் கிடைத்ததில் காசிநாதர் மிகுந்த மகிழ்ச்சியில் இருந்தார். தனது கசப்பான அனுபவங்களில் கற்ற பாடங்களை அவளுக்குப் பயிற்சிபோல் சொல்லிக் கொடுத்தார். முந்திய வேலையில் ஜீவாவுக்கு சமூகத்தோடு நெருங்கிப் பழகியதில் பெற்றுக்கொண்ட அனுபவங்கள் புதிய பணிக்கு உதவியாயிருந்தது. குறுகிய காலத்திலேயே பணி நிலைகளின் உயர்ச்சித் தலைக்கனம் வராமல் தன்னடக்கத்தைக் கற்றுக்கொடுத்தது.

இப்போது எல்லாத் தாய்மாருக்கும் வரக்கூடிய அக்கறையும், கவலையும் தேவகியையும் பற்றிக்கொள்ளத் தொடங்கிவிட்டது. ஜீவாவுக்கு வயது போய்க்கொண்டிருக்கிறது. முப்பது வயதானால் மாப்பிள்ளை தேடுவது இன்னமும் கஷ்டமாகிவிடும். ஏதோ இருப்பதைக் கொடுத்து அவளைக் கரை சேர்த்தால்தான். மற்றவர்களையும் காலாகாலத்தில் கரையேற்றலாமென்று மனம் கணக்குப்போட்டது.

''முயற்சிதான் எங்களுடையது. முடிவுகள் எங்கள் கைகளில் இல்லை'' என்ற யதார்த்தம் காசிநாதருக்கும், தேவகிக்கும் நடவடிக்கையில் இறங்கும்போது தெளிவாகப் புரிந்துவிட்டது. உயர்கல்வித் தரமும்,உயர் பதவிகளும் சாதாரண குடும்பப் பெண்களின் திருமண ஒழுங்கு படுத்தலில் பாதகமான பலன்களையே ஏற்படுத்தி விடுகிறது.இதைச் சரிப்படுத்த ''சீதனம்''என்கிற ஆயுதம் கருவியாக்கப்படுவது எமது சமூகத்தில் புரையோடிப் போயிருக்கிறது. தங்களுக்குக் கட்டுப்படியாகக்கூடிய சில வரன்களுக்கு மாப்பிள்ளை வீட்டார் சாதகத்தை வாங்கிப் பார்த்துவிட்டு ''பொருத்தமில்லை''என்று சாதாரணமாகச் சொல்லிவிட்டுப் போவது ஜீவாவுக்கே விரக்தி யாயிருந்தது.

''ஜீவாவுக்குச் செவ்வாய் தோஷம்''என்று பிழைப்பு வாதிகளால் அது ஒரு குற்றச்சாட்டுப்போலவே நிலைநிறுத் தப்பட்டுவிட்டது. செவ்வாய்க் கிரகத்துக்கு வாரத்துக்கு நாலு விமானப் பயணங்கள் இருந்தாலும் இந்த சமூக வக்கிரங்கள் மாறப்போவதில்லை. ஏனென்றால் வானிலை ஆய்வுகள் உச்ச நிலையில் இருக்கும்போதுதான் எம்மவர்கள் கிரக நிலையில் மக்களைக் கூறுபோடுவதிலும், அதை நம்பவைப்பதிலும் பெரு வெற்றி கண்டிருக்கின்றனர். ஐம்பது, அறுபது வருடங் களுக்கு முன்பு சாதகம் என்பது தனிமனித வாழ்க்கையில் இந்த அளவுக்குத் தாக்கம் செலுத்தியதில்லை என்று காசிநாதர் அடிக்கடி புலம்பிக்கொள்வார். ஜீவாவுக்கு வயதும் முப்பதைத் தாண்டியிருந்தது. அவளுக்கு பணிஉயர்வுகள் வரும்போது காசிநாதர் மகிழ்ந்த நாட்கள் கடந்து பயம்கொள்ளும் நிலையில் இருந்தார்.

சீலன் பட்டப்படிப்பை முடித்து வந்து ஆறு மாதம்கூட ஆகவில்லை. கனடாவிலிருந்து மாப்பிள்ளை கேட்டு வந்திருந் தார்கள். பாடசாலையில் முகிழ்விட்ட காதல், பெண் கனடா வுக்குப் போனபின்பும் தொலைபேசியில் தொடர்ந்து கொண்டி ருந்தது. சீலனின் படிப்பு முடிந்ததும் பெண் வீட்டார் நெருக்கத் தொடங்கிவிட்டார்கள். ஜீவாவுக்குக் கலியாணம் முடியும்வரை சீலன் பொறுத்திருக்கவேண்டுமென்று தேவகி ஒரே பிடியாக நின்றுகொண்டாள். தம்பிக்குத் திருமணம் நடந்தால் அக்காவின் திருமணம் சிக்கலாய்விடும் என்ற நியாயமான வாதம் அவளுடையது. காசிநாதரின் மௌனமும், சீலனின் கனடா பற்றிய கலர்க் கனவுகளும் முடிவை ஜீவாவின் கைகளுக்கு நகர்த்திவிட்டிருந்தது.

தேவகி மாதிரி உணர்வுபூர்வமாக முடிவெடுப்பதில் அவளுக்கு உடன்பாடில்லை. சீலன் ஒரு நல்ல நிலைக்குப் போனால்த்தான் பின்னால் நிற்கும் பிரகதிக்கும் நல்லது நடக்கும் என்று நம்பினாள். சீலனும் விரும்புகிறான் என்று தெரிந்துவிட்ட பிறகு ஒரு பொறுப்புள்ள அக்காவாய் அவனுக் குச் சாதகமாகவே அவள் முடிவெடுத்தாள். இரண்டு, மூன்று நாள் தேவகி அழுது மூக்கைச் சிந்தி ஓய்ந்துபோனாள். நடை முறைச் சம்பிரதாயங்கள் முடிந்து திருமணமும் முடிந்துவிட்டது. ஜீவாவின் பெற்றோரைவிட அயலவர்களும்,அறிந்தவர்களும் அவளுக்குத் திருமணம் கைகூடாதது பற்றிக் கவலைப்படத் தொடங்கிவிட்டனர். பொழுதுபோகாத நேரங்களில் ஜீவாவே அசைபோடுவதற்கு அவலாக்கப்பட்டாள்.

விடுப்புப் பிடுங்கல்களிலிருந்து விலகிக்கொள்வதற்காக நெருங்கிய உறவுகளின் குடும்ப நிகழ்வுகளைத் தவிர மற்றை யவற்றுக்குக் காசிநாதரை அனுப்பிவிட்டுத் தேவகி ஒதுங்கிக் கொள்ளத் தொடங்கிவிட்டாள். ஊரிலே யாருக்கும் திருமணம்

என்றால் சந்தோசப்படும் நிலை மாறி மனது தடுமாறத் தொடங்கிவிடுகிறது.
கூடப் படித்தவர்களின் குழந்தைகளை ஜீவா ஆசையோடு அள்ளி அணைக்கும்போது ஏதோ குற்ற உணர்வு மனதுக்குள் குறுகுறுக்கத் தொடங்கிவிடுகிறது. ஜீவாவுக்கு நல்லது நடக்க வேண்டுமென்று கோவில் கோவிலாய் போய் பிரார்த்தனைகள், நேர்த்திகள் செய்வதில் கிடைக்கும் நம்பிக்கை நாட்களைக் நகர்த்திக்கொண்டிருந்தது.

சீலன் கனடாவுக்குப் போய் இரண்டுவருடம் முடிந்து விட்டது. மனைவியின் உறவினர் என்று சொல்லி தமக்கைக்காக ஒரு சாதகத்தை அனுப்பியிருந்தான். வயது கூடிக்கொண்டு போவதால் ஆக நுட்பமாகப் பார்க்கவேண்டாமென்று அறிவுரையும் வழங்கியிருந்தான். சாஸ்த்திரி வீட்டை நோக்கி உடனேயே புறப்பட்டுவிட்டாள் தேவகி. சாதகத்தைக் கொடுத்துவிட்டு சாத்திரியின் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள். அவன் முகத்தை நிமிர்த்தியபோது முகம் கடுகடுப்பாய் மாறியிருந்தது.

''அம்மா, இந்த சாதகத்தைக் கொண்டுபோய் குப்பையில போட்டிட்டு அமைதியாய் இருங்கோ. அந்தப் பிள்ளைக்கு நல்ல வரன் வீட்ட தேடி வரும். வளருகிற பயிரை இடையால முறிக்காதையுங்கோ''கடைசி வசனம் அவளின் இதயத்தை ஈட்டியால் குத்துவது போலிருந்தது.

ஏமாற்றத்தில் மனம் குழம்பிவிட்டது. குறிப்பு என்பது ஒரு உத்தேசக் கணக்கு என்றுதான் தேவகி நம்பிக் கொண்டிருந்தாள். சாஸ்த்திரி தன் உறுக்கலான தொனியால் அது நூறு வீதம் உண்மை என்று அவளையே நம்பவைத்துவிட்டான்.

திரும்ப அந்த சாதகத்தைக் கையிலெடுத்தவன் வேறு ஒரு சாதகத்தைத் தேடி எடுத்துக் கோடுகள் கீறி கணக்குகள் எல்லாம் போட்டு ஒரு அரை மணித்தியாலம் ஆராய்ந்தான்.

''அம்மா, இப்ப நான் பிரகதியின்ர சாதகத்தோடதான் பாத்தனான். பொருத்தம். முக்கியமான பொருத்தமெல்லாம் பக்காவாய்ப் பொருந்தியிருக்கு. இப்பிடிச் சாதகங்கள் அமையிறது சரியான கஸ்டம். ஆறு வயது வித்தியாசம். அது கணக்கான வயதுதான். இனி உங்கட விருப்பம்."திருப்பிக் கொடுத்த சாதகத்தை வாங்கிக்கொண்டு வீட்டுக்கு வந்துவிட்டாள். தாயின் முகத்தைப் பார்த்ததும் போன காரியத்தின் முடிவு பிரகதிக்குத் தெரிந்துவிட்டது. ஐந்து வருட அனுபவத்தில் தாயின் மன நிலையைப் புரிந்துகொள்வது அவளுக்கு சிரமமாய் இருக்கவில்லை.

தாய் தாகமாய் வந்திருப்பாளென்று பிரகதி தண்ணீரைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டுத் திரும்பிப் போய்க் கொண்டிருந்தாள்.

முழுகிவிட்டுக் காய்வதற்காய் முடியைக் கலைத்து விட்டிருந்தாள். நெற்றியில் விழுந்த முடியை ஒரு கையால் கோதித் தூக்கித் தலைக்கு மேல் படியவிட்ட அழகை தேவகியும் ரசித்துக்கொண்டாள். மகிழ்ச்சியின் நடுவிலும் ஒரு பெருமூச்சு வந்து போனது.

''ஜீவா இந்த வயதில் இன்னும் வடிவாயிருந்தவள்'' என்ற ஆதங்கம் எதையெல்லாமோ சிந்திக்க வைத்தது. வெளியிலே மாமரத்துக்குக் கீழே கதைத்துக்கொண்டிருந்த பெற்றாரோடு ஜீவாவும் போய் இணைந்து கொண்டாள்.வீட்டு நிர்வாகத்தில் முக்கியமான விடையங்களில் முடிவெடுக்கும் அதிகாரம் அவளின் கைகளுக்கு மாறி நீண்ட நாள் ஆகிவிட்டது. கனடா சாதகம் பார்த்த விடயம் ஜீவாவுக்குச் சொல்லப்படவில்லை. தனக்கு வெளிநாட்டில் மாப்பிள்ளை பார்க்க வேண்டாமென்று அவள் ஏற்கனவே சொல்லிவிட்டாள். ஆனால் ஜீவாவின் வயதுக்கும் உத்தியோகத் தரத்திற்கும் ஊரில் சாதாரண உத்தியோகத்தில் மணமகன் தேடுவதுகூட சாத்தியமில்லை என்ற முடிவை விரும்பியோ,விரும்பாமலோ பெற்றோர் ஏற்றுக்கொள்ளவேண்டியிருந்தது. ஆனால் வெளிநாட்டு மாப்பிள்ளை என்ற ஒரு தகுதியே ஜீவாவின் அனைத்துத் தகுதிகளுக்கும் சமனாயிருக்கும் என்கிற சமூக சிந்தனையில் அவளின் பெற்றோருக்கும் ஓரளவு உடன்பாடிருந்தது.

காலையில் சீலனோடு தொலைபேசியில் பேசியதால் கனடா சம்பந்தம் பற்றி அவளுக்குத் தெரிந்திருந்தது. பிரகதி விடயமாக சீலனுக்கும், ஜீவாவுக்குமிடையே ஒரு பெரிய வாக்குவாதமே நடந்து முடிந்துவிட்டது. தமக்கை இருக்கக் கூடியதாக தான் திருமணம் செய்துகொண்ட குற்ற உணர்வு நாட்கள் செல்ல, செல்ல வளர்ந்துகொண்டேயிருந்தது. ஜீவா இன்னும் அப்படியே இருக்கப் பிரகதியை மணமேடையில் கற்பனையில் பார்க்கக்கூட அவன் விரும்பவில்லை. வருகிற சந்தர்ப்பங்களை நழுவ விட்டுவிட்டுப் பிறகு வருத்தப்படுவதைவிட அதைப் பயன்படுத்துமாறு ஜீவா கண்டிப்பாகச் சொல்லிவிட்டாள். அதை இப்போது பெற்றோரின் தலையிலே இறக்கி வைத்து தன்னுடைய இறுக்கமான முடிவையும் சொல்லிவிட்டாள்.

''பிரகதியும் கலியாண வயதைக் கடந்துகொண்டுதான் இருக்கிறாள். எனக்குத் திருமணம் சரிவரலாம், அல்லது நான் இப்படியே இருந்திட்டுப் போகலாம் அதுக்காக அவளின்ர சந்தோசமான எதிர்காலத்தைத் தண்டிக்க முடியாது. எல்லாருமாய் கதைச்சு அவளை சம்மதிக்க வைக்கிறதுதான் வழி. இதை விட்டிட்டுப் பிறகு புறோக்கரிட்டையும், சாஸ்த்திரி வீட்டையும் அலைஞ்சு கொண்டிருக்கேலாது.''ஜீவா சொன்னது கேட்பதற்கு நல்லாயிருந்தாலும் பெற்றவர்களாக அவர்களால் இதை ஜீரணிக்க முடியவில்லை. எத்தனை திருமண நிகழ்வுகளில் ஜீவாவை மற்றவர்களின் காட்சிப் பொருளாக்குவது என்று நினைக்கும்போது தேவகிக்கு மூளைக்குள் ஏதோ அழுத்துவது போலிருந்தது.

பிரகதி அழுது,கூத்தாடி அகிம்சைப் போராட்டம் நடத்தி மறுத்தாலும் ஐந்து நாளில், ஜீவாவின் அணைப்புக்குள்ளும் அறிவுரையிலும் அடங்கிப்போனாள். வேலையோடு பிரகதியின் கலியாண அலுவல்களிலும் ஓய்வின்றி ஓடித் திரிந்ததால் ஒரு வாரத்தில் இரண்டு வயது கூடிவிட்டதுபோல் ஜீவாவின் தோற்றம் மாறிப்போய்விட்டது.

''அக்கா,நான் இருக்கிறன் நீ ஆசைப்பட்ட வாழ்க் கையை நான் உனக்கு அமைச்சுத் தாறன்'' கனடாவுக்குப் புறப்படும்போது பிரகதி அழுதழுது சொல்லி விட்டுப் போனாள் ''ஆசைப்பட்ட வாழ்க்கையைத்தான் விரும்பி வாழ்ந்து கொண்டிருக்கிறேன்''என்று ஜீவாவின் மனது பேசியது அவளுக்குக்

கேட்டிருக்காது. பாவம், வெளிநாடுகளிலிருந்து விடுமுறையில் வந்து விடுப்புக் காட்டும் வேடிக்கை மனிதர்களை அவள் நம்பியதன் வெளிப்பாடு இது.

''என்னை நான் பாத்துக்கொள்ளுவன்நீ சந்தோசமாயிருந்தால் அதுதான் என் மகிழ்ச்சி''கலங்கிய கண்களைத் துடைத்தபடியே அனுப்பி வைத்தாள்.

ஜீவாவுக்கு இடையிடையே வந்து கொண்டிருந்த சம்பந்தப் பேச்சு வார்த்தைகள் நாற்பது வயது கடந்ததும் நின்று போனது. காசிநாதருக்கும், தேவகிக்கும் எல்லா நம்பிக்கைகளும் அற்றுப்போய்விட்டது. ஜீவாவின் முன் நெற்றி யிலிருந்து இரண்டு முடிகள் வெள்ளைக் கோடாய்காதுவரை போய்விட்டதைக் கண்ட தேவகி அதிர்ந்துபோனாள். அவளின் விசயத்தில் தாங்கள் ஓரவஞ்சகமாய் நடந்துவிட்டதாக மனச்சாட்சி உறுத்தியது. அண்மையில் வந்த பிரகதியின் குழந்தையின் படத்தை பிறேமுக்குள் வைத்து ஜீவா சுவரில் மாட்டி ரசித்த போது. தேவகியின் மனசு வலித்தது. முல்லைத்தீவு, திருகோண மலை, வவுனியா என்று விரிவடைந்து அவளின் தொழில் பரப்புகளும், பணி நிலைகளும் மாறிக்கொண்டிருந்தன. யாழ்ப் பாண மாவட்டக் கச்சேரியில் ஒரு திணைக்களத்தின் பொறுப்பு அதிகாரியாய் பொறுப்பேற்றபோது அங்கிருந்தே ஓய்வு பெற வேண்டும் என்ற எண்ணத்தோடேயே வந்திருந்தாள். ஜீவாவின் பதவிஉயர்வுகளும்,இடமாற்றங்களும் எல்லாத் தகுதிகளையும் தவிர்த்து, மற்றைய சம நிலை அதிகாரிகளால் பெண்ணியல் சார்ந்தும் விமர்சிக்கப்பட்டது. அவள் இந்தக் கொடுமைகளையும் கடந்தே வரவேண்டியிருந்தது. அவளின் பாவனைக்காக ஒரு ஜீப்பும்,சாரதியும்,வழங்கப்பட்டிருந்தது. நீண்ட இடைவெளிக்குப் பிறகு பெற்றோரோடு சேர்ந்து வாழும் சந்தர்ப்பம் இப்போது அவளுக்குக் கிடைத்திருந்தது. ஊரிலே தனிமையில் இருந்தவர் களைத் தன்னோடு சேர்த்துக்கொண்டாள். தேவகி காலாகாலத் தில் மகளுக்குச் செய்யவேண்டியதை செய்ய முடியாமற் போனதை அவள் விரும்பிய உணவுகளைச் செய்து குவித்து மறக்க முயன்றாள். மகள் வேலையால் ஜீப்பிலிருந்து இறங்கி வருவதும், போவதும் பெற்றவர்களுக்குப் பெருமையாயிருந்தது. முன்பிருந்த இடங்களில் போலவே மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் அவள் கையாண்ட அணுகுமுறை அவர்களின் வரவேற்பைப் பெற்றது.

ஊடகங்களில் அவளின் செய்திகளும்,பேட்டிகளும் முதன்மைப் படுத்தப்பட்டபோது மற்றைய அதிகாரிகளுக்குத் தர்ம சங்கடமாயிருந்தது. செய்தி நேரங்களில் காசிநாதரும், தேவகியும் தொலைக்காட்சிக்கு முன் இருப்பதை வழமை யாக்கிக் கொண்டனர்.

ஜீவாவுக்கு சாதாரண இருமல்,சளி என்றாலே கண்பட்டுவிட்டதென்று பரிகாரத்தில் தேவகி இறங்கிவிடுவாள். இந்த ஆரவாரங்களும் மகிழ்ச்சியும் அன்று சீலனின் தொலை பேசி அழைப்பினால் அமைதியாகிவிட்டது. பெற்றோரைக் கனடாவுக்கு எடுப்பதற்கான அனுமதி அடுத்தமாதம் சரிவந்துவிடு மென்றும் அதற்கான எற்பாடுகளைச் செய்யுமாறும் கண்டிப்பாகச் சொல்லியிருந்தான். இது ஜீவாவுக்கு மகழ்ச்சியைக் கொடுத் தாலும் காசிநாதரும், தேவகியும் குழம்பிப்போயிருந்தனர். இன்னும் ஐந்து வருடத்தில் தானும் ஓய்வு பெற்று வந்துவிடாலா மென்றும், சந்தர்ப்பத்தை இழக்கவேண்டாமென்று புத்திமதிகள் சொல்லி அவர்களை ஜீவா சம்மதிக்க வைத்துவிட்டாள். தாங்கள் ஆறு மாதத்தில் திரும்பி வந்துவிடுமோமென்று சொல்லியே போவதற்கு ஒத்துக்கொண்டனர்.

காசிநாதரும்,தேவகியும் கனடாவுக்குப் போய் ஒரு வருடம் முடிந்து போனது. பேசும்போதெல்லாம் ஜீவாவை அங்கே விரைவில் எடுப்பதைப்பற்றிப் பேசுவார்களேயொழிய அவர்கள் திரும்புவதற்கான நோக்கம் இருப்பதாகத் தெரிய வில்லை. வாழ்க்கை முழுவதும் கஸ்டங்களை அனுபவித்தவர்கள் கொஞ்சக்காலம் சந்தோசத்தை அனுபவிக்கட்டும் என்று அவளும் உள்ளூர திருப்திப்பட்டுக்கொண்டாள்.

இன்னும் இரண்டு வருடம் போனால் ஓய்வு எடுத்துக் கொண்டு மக்களுக்குப் பயனுள்ளதாய் ஏதாவது செய்யவேண்டு மென்ற எண்ணமே அவள் மனதிலே வலுப்பெற்றிருந்தது. கனடா போகும் எண்ணம் ஜீவாவுக்கு அறவே இருக்கவில்லை. அதைத்தான் சீலனுக்கும் பிரகதிக்கும் அவள் அடிக்கடி சொல்லிக்கொள்வாள். தகப்பன் சிறிது சுகவீனமாக இருப்பதால் ஓய்வுகிடைத்த கையோடு எல்லோரையும் போய் ஒருதடவை பார்த்துவிட்டு வரவேண்டுமென்ற எண்ணமே அவளுக்கு இருந்தது.

அன்று அவள் கடமைக்காக வெளியில் போய்க் கொண்டிருந்தபோதுதான் அந்த அசம்பாவிதம் நடந்து முடிந்து விட்டது. பின்னால் வந்த டிப்பர் வாகனம் ஜீப்பில் மோதியதால் ஜீப் மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. முன் இருக்கையில் இருந்த ஜீவா காலிலே பலத்த காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தாள். வலது காலில் முழங்காலுக்குக் கீழ் எலும்பு உடைந்துள்ளதாக எக்ஸ் றே காட்டியது. விபத்துச் செய்தியை ஊடகங்கள் பரபரப்பாக்கியதால் வைத்தியசாலையில் அதிகாரிகளும் பொதுமக்களும் கூடத் தொடங்கிவிட்டனர். முன் பின் தெரியாத தனக்காகக் கண்கலங்கிய உறவுகளைப் பார்த்து கலங்கிய ஜீவாவின் கண்ணீர் கடைக் கண்ணால் வடிந்தது. தன் சேவைக்குக் கிடைத்த அங்கீகாரமாகவே மக்களின் அன்பை அவள் ஏற்றுக்கொண்டாள்.

இரண்டு மாதங்களின் பின் பூரண குணமாகி வேலையில் இணைந்துகொண்டாலும் கொஞ்சம் தூரம் நடந்தால் அந்தக் கால் வீங்கி வலிக்கத் தொடங்கிவிடுகிறது. கனடாவுக்கு வரும்போது அங்கு நல்லமுறையில் வைத்தியம் பார்க்கலாம் என்று சீலன் தனக்குக் கூறுவதை நினைக்க அவளுக்குச் சிரிப்புத்தான் வந்தது. தன்னைச் சமாதானப்படுத்த தனது கஸ்டங்களை மறைக்கிறான் என்பது ஜீவாவுக்குத் தெரியும். அவனுடைய படிப்புக்கு இங்கேயே நல்ல வேலை செய்திருக்கலாம். அங்கே போய் சாரதியாய் வேலை செய்து கஸ்டப்படுகிறான் என்று தாய் சொல்லும்போது கவலை யாயிருக்கும்.

ஓய்வெடுத்து கடைசி நாள் வேலையும் முடிந்து வீட்டுக்கு வந்தாயிற்று. நாளைக்கு என்ன செய்வது என்று இனி ஒவ்வொரு நாளும்தான் முடிவெடுக்க வேண்டும். கோப்பி குடித்த கப்பைக் கொண்டுபோய் கழுவி வைத்துவிட்டு

கொஞ்ச நேரம் ஓய்வாகப் படுத்துக்கொண்டாள். நேரத்தைப் பார்த்தாள். இப்போது கனடாவில் காலை ஏழு மணியாய் இருக்கும். சீலனுக்குப் போன்பண்ணி ஓய்வெடுத்ததைப் பற்றி சொன்னால் சந்தோசப்படுவான் என்று தோன்றியது. ஜீவா தொலைபேசியில் தனது ஓய்வு நிலை பற்றி சொன்னபோதும் சீலன் பெரிதாக மகிழ்ச்சியை வெளிப்படுத்தவில்லை.

அவனுக்கு ஏதாவது கஸ்டமோ என்று அவளின் மனம் பதைபதைப்பாயிருந்தது. சீலனுக்கும், பிரகதிக்கும் தான் இன்னொரு தாய் என்ற உணர்வே அவளின் சொந்த வாழ்க்கையிலேயே அக்கறையில்லாமல் செய்துவிட்டது.

பெற்றோருக்கு எண்பது வயது கடந்த நிலையில் அவர்களைப் பராமரிப்பது, வேலைக்குப் போவது எல்லாம் சீலனுக்குச் சவாலாகவேயிருந்தது. தேவகி ஓரளவு ஆரோக்கியமாக இருந்தாலும் காசிநாதர் நல்லாக தளர்ந்து போயிருந்தார். மகன், மகள் என்று இரண்டு இடத்திலும் மாறி, மாறி சந்தோசமாகத்தான் இருந்தார்கள்.

இப்போது பிரகதியின் பேச்சிலிருந்து பெற்றோரைத் திரும்ப தன்னோடு வைத்திருப்பதை அவள் பெரிதாக விரும்பவில்லை என்று தெரிந்தது.

சிலவேளை அவளின் கணவருக்கு உடன்பாடில்லாமல் இருந்தால் அதை வெளிக்காட்டாமல் பேசுகிறாளோ என்றுதான் சீலனால் நினைக்க முடிந்தது.

சீலனின் மனைவி இப்போது அவர்களை நன்றாகக் கவனித்தாலும் அவளுக்கு சலிப்பு வருவதற்கிடையில் ஏதாவது மாற்று ஒழுங்கு செய்வதில் அவன் மூளையைக் குழப்பிக் கொண்டிருந்தான். முதியோர் இல்லத்தில் விடுவதுதான் தெரிந்த ஒரே வழியாயிருந்தது. ஜீவா இதற்கு ஒத்துக்கொள்ள மாட்டாள் என்ற பயம் வேறு அழுத்திக்கொண்டிருந்தது.

இந்தக் குழப்பத்தில் காலை ஜீவா அழைப்பு எடுத்தபோது அவனால் பேசமுடியாமல் போய்விட்டது. ஏதும் பிரச்சனையோ என்று யோசித்ததில் ஜீவாவுக்கு இரவு தூக்கமே சரியாக வரவில்லை. ''ஜீவா மச்சாள் வாறதேண்டால் சுற்றுலா விசாவிலதான் வரவேணும். அவவுக்கு உடனையே குடுப்பாங்கள். அவவும் ஏலாத ஆள். எல்லாரையும் எப்பிடி இஞ்ச வைச்சுச் சமாளிக்கப் போறியள்?'' மனைவியின் கேள்வியின் ஆதங்கம் சீலனுக்குப் புரிந்தது.

''அக்கா கொஞ்ச நாளைக்குப் பிரகதியோட இருக் கட்டும். பிறகு யோசிப்பம்''.

''என்ன கதைக்கிறியள்?அவ கடைசிவரை அங்க நிக்க சம்மதிக்கமாட்டா.'' 'ஏன்?''சீலனுக்குப் புரியவில்லை.

''என்னெண்டாலும் பிரகதியின்ர புருசன் ஜீவா மச்சாளுக்குப் பேசின மாப்பிள்ளை என்ன? ஜீவா மச்சாள் படிச்சவர் எவ்வளவோ சனத்தோட புளங்கினவா. அவவுக்கு ஒரு புரிதல் இருக்கும். ஆனால் பிரகதி, அக்காவின்ர வாழ்க்கையை தான் பறிச்சுப்போட்டன் என்று யோசிச்சால், ஒரு பொம்பிளைக்கு அதைவிடக் கொடுமை வேறை எதுவும் இருக்காது''

மனைவி சொன்னதும் அதிலுள்ள உள்ளார்ந்த அர்த்தம் தமக்கை இருக்கத்தான் திருமணம் செய்ததையும் சுட்டுவதுபோலிருந்தது.

காலை சீலன் தந்தைக்குக் குளிக்க வார்த்து கொண்டு வந்து விட்டபின் அவசர அவசரமாக வேலைக்குப் புறப்படத் தயாராகிக்கொண்டிருந்தான். போன் அடித்தது. ஜீவாதான் எடுத்திருந்தாள். போனை எடுத்தான் கை நடுங்கியது. எப்படிச் சொல்லுவது. ஒருபக்கம் தங்களை உருக்கிப் பிள்ளைகளை உயர்த்திய பெற்றோர். மறுபக்கம் தான் பிறந்த குடும்பத்துக்காக தன் வாழ்க்கையைத் தடம் மாற்றி வென்றுவிட்டதாய் நினைக்கும் ஒரு உடன் பிறப்பு. நடுவிலே வெளிநாட்டு வாழ்வுச் சிக்கலுக்குள் சிக்கி முக்குழித்துக்கொண்டிருக்கும் தங்களின் கோலம். பெற்றோரை முதியோர் இல்லத்தில் வைத்துப் பராமரிக்கும் திட்டத்தைச் சொன்னால் ஜீவா எப்படி எடுப்பாளோ என்ற பயம்?

''அக்கா, எப்பிடி இருக்கிறாய்?''எங்கே தொடங்குவது? எப்படிச் சொல்லி முடிப்பது என்ற தடுமாற்றத்தில் குரல் தழுதழுத்தது.''சீலன், என்னடா குரல் ஒருமாதிரி இருக்கு. ஏதும் வருத்தமோ? ஜீவா பதட்டமாகிவிட்டாள்.

''இல்லை அக்கா. அப்பாவுக்குக் கொஞ்சம் ஏலாமல் வந்திட்டுது. ஒவ்வொரு நாளும் குழிக்க வாக்கிறது உடுப்புகள் கழுவிறதெண்டு அவற்ற வேலை எல்லாம் செய்துதான் வேலைக்கு போகவேண்டி இருக்கு. அதால......'' தொடர முடியாமல் நாக்குத் தடுமாறியது ''முதியோர் இல்லம் ''என்று ஜீவாவின் காதுகளுக்குச் செய்தி சொல்ல யோசிக்கவே அந்தக் குளிர் நேரக் காலையிலும் நெற்றியிலே வியர்வை மொட்டுக்கட்டி உடைந்து கொண்டிருந்தது.

''சீலன் அவருக்கு ஒண்டும் ஆகாது. எங்களை நினைச்சு புகைக்காமல், குடிக்காமல் கடின உழைப்பில உரமேறின உடம்பு. அவர் இன்னும் கனகாலம் எங்களோட இருப்பார் நீ தைரியமாயிரு. இண்டைக்கே நான் விசா வேலை துவங்கப்போறன். எவ்வளவு கெதியாய் முடியுமோ அவ்வளவு விரைவாய் நான் உங்க நிப்பன். இவ்வளவு நாளும் அவை உங்களோட சந்தோசமாய் இருந்தவை. அதாலை நீங்களும் நல்ல மகிழ்ச்சியாய் இருந்தனீங்கள். ஒரு மகளாய் எனக்கும் அந்த ஆசையும் கடமையும் இருக்கு. அவையைக் கூட்டி வந்து நான் இங்க வைச்சுப் பாக்கப்போறன். எங்கட மாவுக்குக் கீழே ஒரு கட்டில போட்டுப் படுத்தாலே ஐஞ்சு வயது குறைஞ்ச மாதிரி உணருவினம். இதுக்கு சம்மதமெண்டால் நான் வாறன்.''

''என்னக்கா இது. இரண்டாம் தாயாயிருந்து நீ சொன்னதைத்தானே அக்கா நாங்கள் கேட்டு வளர்ந்தனாங்கள். இப்ப என்ன எங்களைப் பிரிச்சு வைச்சுக் கேள்வி கேக்கிறாய். உனக்கு என்ன விருப்பமோஅதுக்கு நாங்களும் கூட நிக்கிறம்.''

''முதியோர் இல்லம்''என்ற வார்த்தை தன் வாய் மூலம் அவள் காதுகளுக்குப் போயிருந்தால். மீதி வாழ்க்கை முழுக்க அவளுக்கு முன்னால் தான் ஒரு அருவருக்கத்தக்க பொருளாய் தாழ்ந்திருப்பேன் என்று எண்ணும்போது வந்த அழுகையை அடக்க முடியவில்லை. போனை வைத்துவிட்டு கையைத் தூக்கி வணங்கினான்.

கடவுள் கண்ணுக்கு முன்னால் காட்சிகொடுத்தார் ஜீவாவின் வடிவிலே.

# பசுமையைத்தேடி...

**- ரஞ்சிதா-**



"லிதன்யா டீச்சர்... என்ன தீவிரமா யோசிக்கிறீங்க... முகம் ஒரே வாட்டமா இருக்குது. டீச்சஸ்சோட ஏதும் ப்ரோப் லமா?'' அரவிந் ஆசிரியர் 'ஸ்டாப் ரூமி'ற்குள் நுழையும்போது தனிமையில் அமர்ந்து சிந்தனைக்கடலில் மூழ்கிப்போயிருந்த லிதன்யா ஆசிரியரிடம் வினவினார். மூன்றாம் பாடவேளைக்குத் தயாராகிக்கொண்டு கையில் தரம் பத்து புவியியல் புத்தகத்துடன் அமர்ந்திருந்த லிதன்யா ஆசிரியை அரவிந் ஆசிரியரின் ஓசைக்கு இசைந்து சமாளிப்புப் புன்னகையை உதிர்த்து ''ஒண்டுமில்லை சேர்'... இண்டைய பாடத்தை எப்பிடிப் படிப்பிக்கிறது எண்டுதான் யோசிச்சிகிட்டு இருந்தே...'' என்று கூறும் போதே அடுத்த பாடவேளைக்கான அறிவிப்பு மணி அதிர ஆரம்பித்தது.

வாழ்க்கையில் யோசிப்பதற்காக எதுவும் இல்லை. குறைகள் நிறைந்த வாழ்க்கையில் எல்லாவற்றையும் கடந்து போவதுதானே மானிடப் பண்பு. நமது பேச்சை மதிப்பவர்கள் யார் இருக்கிறார்கள் என்ற கோபம் லிதன்யாவின் மனதை உருட்டிக்கொண்டிருந்தது. எவ்வளவு முயற்சி செய்தும் தன் முயற்சிகள் அனைத்தும் வீணாகிவிட்டதே. அறிவற்றவர்களிடம் விவாதம் புரிவது செவிடன் காதில் ஊதிய சங்கு போலவே இருக்கும். அவர்களை நொந்து என்ன பயன்? கடமையைத்தானே செய்தார்கள் என்ற நியாயமும் ஒரு பக்கம் ஆறுதல் அளித்தாலும் மனம் ஒப்புதல் கொள்ள மறுத்தது. குழம்பிப்போன மனநிலையில் தீராத மனப்பாரத்தைச் சுமந்து கொண்டு பத்தாம் தரத்திற்குள் நுழைந்தாள் லிதன்யா. அப்பொழுது பக்கத்து வளவில் கட்டப்பட்டிருந்த மாடு ஒன்று அருகிலிருந்த நொச்சி மரத்தை ஆக்கிரமித்துக் கொண்டமையும் அதில் குடியிருக்க வந்த தூக்குணாங்குருவி செடியைச் சுற்றிச் சுற்றி பறக்கின்றமையும் இதனைப் பொருட்படுத்தாது வளவில் உள்ளவர்கள் தமது வேலைகளில் ஈடுபடுகின்றமையும் அவள் கண்களுக்குள் புகுந்தன.

''குட்மோர்னிங் டீச்சர்'' என மாணவர்கள் அனைவரும் எழுந்து தமது மரியாதையை லிதன்யாவிற்குத் தெரிவித்துக் கொண்டு அமர்ந்தனர். புவியியல் விருப்பத்திற்குரிய பாடமாக இருந்ததால் ஐந்து மாணவர்கள் மட்டுமே அவளது பாடத்திற்காக வகுப்பறையை அலங்கரித்துக்கொண்டிருந்தனர். மாணவர் களுக்குத் தானும் பதில் வணக்கத்தைத் தெரிவித்து விட்டு வகுப்பறையின் முன்னுள்ள மாமரத்தின் நிழலுக்கு கதிரைகளுடன் செல்ல உத்தரவிட்டாள்.

''டேய் ரமேஸ் டீச்சருக்கு ஒரு கதிரைய எடுத்துக்கிட்டு வாடா...நீதானே 'மொனிட்டர்''' சாம்பவி ஏவல் வார்த்தைகளைக் கொட்டினாள். ''ஏன் டீ சோம்பேறி நான் மொனிட்டரா இருந் தாலும் ஒடம்பு ஒல்லியா இருக்குறே... நீ யானை மாதிரிதானே இருக்க... நாலு கதிரைய தூக்கிட்டு வந்து போட்டா என்னவா...'' பதிலுக்கு ரமேஸ் கிண்டலாக சாம்பவியுடன் சண்டையிட்டான். இவர்களுடைய நகைச்சுவை கலந்த சண்டைகளை கூட பொருட்படுத்தாமல் வேறொரு சிந்தனையிலும் குற்றவுணர்விலும் மூழ்கிப் போயிருந்தாள் லிதன்யா.

''என்ன டீச்சர் உங்கட நிலவு முகம் இண்டைக்கி ஒளியிழந்து இருக்கு... நீங்க கட்டிகிட்டு வந்த ஊதாநிற சாரி உங்கட வாட்டத்தால தன்ட வர்ணத்தை இழந்துட்டு... நல்லாவே இல்ல டீச்சர்...'' நித்தியனின் குரல் மரநிழலின் அமைதியைக் கிழித்துக்கொண்டு பெரும் வீச்சுடன் லிதன்யாவை நோக்கி வந்தது. தமிழ் இலக்கியத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டதால் நித்தியன் எப்போதும் இலக்கியச் சுவையுடனும் வர்ணணை யுடனுமே பேசுவான். அவனது பேச்சில் மெய்சிலிர்க்கும் . அவள் இன்று மனப்பாரத்தைச் சுமந்த வண்ணம் கடமையைச் செய்யப் பாடப்புத்தகத்தைப் புரட்டி இன்றைய பாடத்திற்கான தலைப்புக்குள் சென்றாள்.

''பிள்ளையள் இண்டைக்கு நாங்க காடழிப்புப் பற்றியும் அதன்ட பாதக விளைவுகள் பற்றியும்தான் கதைக்கபோறம். ஆங்கிலத்துல 'டீபொரஸ்ட்ரேஷன்' எண்டு காடழிப்பு அழைக்கப்படுகிறது. அண்டைக்கி ஒங்களுக்கு சூழல் பற்றியும் அதுட முக்கியத்துவம் பற்றியும் சின்ன அறிமுகத்த படிப்பிச்சேன்தானே...? அதன்ட ஒரு பகுதியாகத்தான் காடழிப்பு என்ற ஒரு அலகு 'சிலபஸ்ல' சேர்க்கப்பட்டுருக்கு...''

''டீச்சர் போன கெழம வௌங்கப்படுத்துனத இண்டைக்கி சுருக்கமா சொல்லிட்டி தொடங்குங்க... இல்லாட்டி இப்ப சொல்லுறது ஒண்டும் வௌங்காது...'' சாம்பவி அடக்க மாக லிதன்யா ஆசிரியரிடம் கேட்டாள். லிதன்யாவும் கடந்த வார பாடத்தை சுருக்கமாக தெளிவுபடுத்த ஆரம்பித்தாள்.

''சூழலை பாதுகாக்குறதுக்காகவும் அத மாசுபடுத்தாம இருக்கிறதுக்காகவும் சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்துறதுக் காகவும் ஒவ்வொரு வருடமும் ஜூன் அஞ்சாம் தேதி உலக சூழல் தினம் கொண்டாடப்படுது. மனிதன் தன்ர தேவைகளுக்கு அதிகமாகச் சூழல் வளங்களைச் சுரண்டக்கூடாது. அப்பிடி சுரண்டினா புவிட அழகு செழிப்பு அழிஞ்சி போயிரும். இண்டைக்கி எல்லாரும் தங்கட சுயதேவைகளுக்காக பிளாஸ்டிக் பொருட்கள கழிவுகள கண்ட எடங்கள வீசுறாங்க மரங்கள வெட்டுறாங்க... புவிய வெப்பமாக்குறாங்க... இதுக்கு முக்கிய காரணம் நகராக்கம், அபிவிருத்தி வேலைகளுக்கு குடுக்குற 'இம்போர்ட்டன்ஸ்'தான்... சூழல் பாதுகாப்பில காடுகளை பேணுவது மிகவும் அவசியம்... கைவினை பொருட்களை செய்வதற்காகவும் வீடுகளை அமைப்பதற்காகவும் நான் முதலில சொன்ன மாதிரி 'ஏபர்னைஷேன்' என்ற நகராக்கச் செயல்களுக்காகவும் காடுகள் அழிக்கப்படுது பிள்ளையள்... அதுமட்டுமல்ல காடுகள அழிக்கும் போது சூரியக்கதிர்கள் நேரடியாக மண்மீது விழுந்து மண்ணின் ஈரப்பதன் குறைந்து மண்ணின் சத்துக்கள் வெளியேறி மழைகாலங்களில் மண்ணரிப்பு ஏற்படும்... காபனீ ரொட் அதிகரிச்சி சுவாசிக்கறதுக்கான ஒட்சிசன் கிடைக்காம போயிறும்... தாவரங்களும் விலங்குகளும் தங்கட இருப்பிடங்கள இழந்துறும்... இததான் அறிஞர்கள் இன இழப்பு எண்டு சொல்லுறாங்க...''

''எஸ் டீச்சர் இட் ஈஸ் எப்சலூட்லி கரேக்ட்...' அண்டைக்கி செல்வி டீச்சரும் சங்க இலக்கியத்தில இயற்கை பற்றி படிப்பிச்சாங்க... அவங்களு இததான் சொன்னாங்க. அதுமட்டுமில்ல மனிதன் எப்பிடி இயற்கையோட ஆத்மார்த்தமா வாழ்ந்தான் என்டதையு ஐவகை நிலங்களச் சொல்லி விளங்க படுத்துனாங்க...மரங்கள வெட்டுறதால ஒக்சிஜன் கிடைக்காது. வெக்கை கூடி தோல் நோய் வரும்...ஒரு மனிதன் வாழ்நாளில அஞ்சு மரங்களையாவது நடவேணும் என டீச்சர். இண்டைக்கி நாங்க இயற்கையான வாழ்வியலையே இழந்து வருகிறோம்...'' நித்தியன் தனக்கு தெரிந்த விடயங்களை அடுக்கடுக்காக கூறிமுடித்தான்.

''டீச்சர் வள்ளுவர்கூட 'மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்காடும் உடையது அரண் எண்டு சொல்லியிருக்காரு. அதாவது தெளிந்த நீரும் பரந்த நிலமும் உயர்ந்த மலையும் அடர்ந்த காடும் இயற்கை அரண்களாகும் என்பது இதன்ட பொருள்.'' சாம்பவியும் நித்தியனுக்கு போட்டியாக சூழல் பற்றி தனக்கு தெரிந்த விடயங்களை கூறினாள்.

இவர்களுக்கு சூழல் பற்றியும் அதன் பாதுகாப்பு பற்றியும் எவ்வளவு விடயங்கள் தெரிந்திருக்கின்றன என்பதை கண்டு மனம் மகிழ்ந்துக்கொண்டு அதனை உணராத மனித ஜடங்களையும் தனக்குள் திட்டித்தீர்த்துக்கொண்டு மீண்டும் கற்பித்தலில் ஈடுபட்டாள் லிதன்யா.

*2*

அன்று ஞாயிற்றுக்கிழமை. பாடசாலை விடுமுறை. உடல் உஸ்ணத்தை அரவணைக்க மறுத்து வெளியில் கிளைகளற்று மொட்டையாக நின்ற வேப்ப மரத்தின் அருகில் கதிரையை இட்டு நேற்று பாடசாலையில் நடந்த சம்பவங்களை மீட்டிபார்க்கத் தொடங்கினாள் லிதன்யா. பாடசாலையில் சூழல் பாதுகாப்பு வட்டம் என்னும் ஒரு அமைப்பு லிதன்யா ஆசிரியரின் தலைமையில் கடந்த நான்கு வருடங்களாக இயங்கிக் கொண்டு வருகின்றது. அதற்கான ஒன்றுகூடல் அதிபர் மற்றும் சக ஆசிரியர்களுடன் கூடியது. சூழல் நேயக்கருத்துக்களையும் அதன் பேணுகை பற்றியும் புனைகதைகளினூடாக வெளிப்படுத்துதல் பட்டிமன்றங்களை நடத்துதல் பாடசாலை சூழலை இயற்கை வளமாக மாற்றுதலினூ டாக முன்னெடுப்பது முதலிய விடயங்கள் பலதரப்பட்ட ஆசிரியர்களினூடாக முன்வைக்கப்பட்டது. லிதன்யாவும் தனது மனதில் தோன்றிய கருத்துக்களை முன்வைத்து மரநடுகையை மாணவர்கள் மத்தியில் கடைபிடிப்பதற்கான வழிவகைகளை தெளிவுறுத்தினாள் வலியுறுத்தினாள். ''என்ன டீச்சர் நீங்கபோயி இப்பிடியொரு யோசணையை முன்வைக்கிறீங்க...'' என்று அவளுடன் முரண்பாடுகளை ஏற்படுத்திக்கொண்டிருக்கும் ராம் ஆசிரியர் எள்ளலாக பட்டும் படாமல் கூறியது அவளுக்கு வெட்கமாகவும் கூச்சமாவும் இருந்தது. அவமானத்தில் பதில்

எதுவும் கூறாது சபையை விட்டு வெளியே சென்றதும் ராம் ஆசிரியரை சக ஆசிரியர்கள் திட்டியதும் சபை கலைந்து சென்றதும் லிதன்யாவிற்கு நினைவில் வந்தது. ராம் ஆசிரியர் தன்னுடன் எப்பொழுதும் பிரச்சினையிடுவதும் மாற்றுக் கருத்தை தெரிவிப்பதும் பழகிபோன ஒன்று. ஆனால் அன்று அவர் கூறியது ஏற்றுக்கொள்ளவேண்டியதும் வெட்கப்பட வேண்டியதும்தான் என்பதில் அவளுக்கு மாற்றுக் கருத்து இருக்கவில்லை.

லிதன்யா கடந்த ஏழு வருடங்களாக கெக்கிரவா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் புவியியல் ஆசிரியராக கடமையாற்றிக் கொண்டிருந்தாள். புவியியல் பாடத்தை சிறப்பு பாடமாகப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பயின்று பட்டம் பெற்று, அதனை வெறும் பாடமாகவும் சம்பளத்தை பெற்றுக் கொண்டு கடமைக்குக் கற்பிக்கும் ஆசிரியராகவும் இல்லாது ஆத்மார்த்தமான ஒரு புவியியல் நேய மனிதனாகவும் செயற் பட்டாள். இலங்கையின் பல பாகங்களில் சூழல் பாதுகாப்பு கருதி கருத்தரங்குகளை நடத்துதல் சுற்றுச் சூழல் விழிப்பு ணர்வை வலியுறுத்தி சஞ்சிகைகளுக்கு கட்டுரை எழுதல் என பல செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றாள். தன்னுடைய கண்முன்னால் இயற்கைக்கும் சூழலுக்கும் அநீதி இழைக்கப்படும் போது நீதி குரல் எழுப்புவாள். ஆனால் அன்று நடந்த சம்பவம் அவள் மனதை பெரிதும் பாதித்திருந்தது. அதற்கு எதிராக நீதி குரல் எழுப்பவும் முடியவில்லை. அவளது வீடு தம்புளைக்கிச் செல்லும் பிரதான வீதியின் ஓரத்தில் ஒலம்பேவ என்னும் இடத்தில் அமைந்திருந்தது. நிரந்தர உறுதியில்லாத பகுதியாக அது இருந்ததுடன் தங்களுக்கு விரும்பிய போக்கில் குடியிருப்புக்களை அமைத்துக்கொண்டு மக்கள் வாழ்ந்தனர். சனநெறிசல் மிகுதியான நேர்க்கோட்டு வரிசையில் உக்கிப்போன தகரங்களை மதில்களாக கொண்டு, கழிவு நீர் எங்கும் வடிந்தோடும் பகுதிகளாக அப்பிரதேசம் காட்சியளித்தன. இங்கு வாழும் பெரும்பாலானவர்களின் வீடுகள் அருகருகில் மட்டுமல்ல வெப்பத்தை அள்ளி வழங்கும் தகர கூரைகளாலும் வேயப்பட்டிருந்தது. லிதன்யாவின் வீடும் இதற்கு விதி விலக்கல்ல. வறுமையுடன் இரண்டறக் கலந்து வெப்பக்காற்றை தினம் தினம் சுவாசித்து இயற்கை காற்றை சுவைக்கமுடியாது வேதனையில் அவளது குடும்பமும் தவித்தது. சன நெருக்கடி மட்டுமன்றி மரங்களை வளர்த்து பசுமையை காணமுடியாத பிரதேசமாகவும் அவளது இருப்பிடம் காணப்பட்டது. ஆனாலும் தான் கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்த இரண்டு வேப்பமரங்களை மின்சார சபையினர் மின்கம்பத்திற்கும், மின்வடத்திற்கும் இடையூறு விளைவிக்கின்றது என அதன் கிளைகள் அனைத்தையும் வெட்டியபோது அவளால் சட்டத்தை மீறி எதுவும் செய்யமுடியவில்லை. ஏற்கனவே பக்கத்துவீட்டு மாலா அக்காவின் வீட்டு வளவுக்குள் வேப்பம் இலைகள் விழுந்து முற்றத்தை குப்பையாக்குகிறது என பாதி கிளைகளை லிதன்யாவின் அண்ணன் குகன் வெட்டியபோது அவள் அக்கினியாக மாறி வீட்டை எரித்தாள். மரத்தை வெட்டுவதல்ல அவளின் பிரச்சினை. பசுமையற்ற தனது சூழலில் பசுமையை பத்து வீதமாவது உருவாக்கும் முயற்சி தோல்வியடைந்துவிட்டதே





பெரிய வேதனை. இவளது பிரதேசத்தில் வாழும் மக்கள் வெப்பத்திற்கும் அதன் கொடுமைகளுக்கும் பழகிவிட்டனர். சூழலை சுத்தம் செய்வதாக நினைத்து நான்கு ஐந்து குடும் பத்தை சேர்ந்தவர்கள் தமது வளவுகளுக்குள் இருந்த மரங் களை வெட்டியும் உள்ளனர். அதனை லிதன்யா தட்டிக்கேட்டு சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்த செய்த முயற்சிகள் தோல்வியைத் தழுவியது மட்டுமன்றி அவள்மீது பகையையும் ஏற்படுத்தியது. இன்று மின்சார சபையும் தனக்கு சதிசெய்து விட்டது என்றும் தனக்குள் நொந்து கொண்டாள். பாடசாலைவிட்டு வந்தால் இளைப்பாறுவதற்கும் ஆய்வுமுயற்சிகள் செய்வதற்கும், குளிர்மை மஞ்சளை மேனியில் பூசவும் கவலைகளை மறக்கவும் ஒரே ஆதாரம் அந்த இரண்டு வேப்பமரங்களும்தான்.

கிளைகள் பரப்பி, நிழல் குடையைப் பிடித்து மலர் மஞ்சத்தை விரித்து நிறைமாத கர்ப்பிணி முகப்பொழிவுடன் அழகாக இருப்பது போல ஓங்கி வளர்ந்திருந்த அந்த இரண்டு வேப்பமரங்களும் இன்று தன்னுடைய இளமையை, தாய்மையை, பெண்மையை இழந்து மலடியாகி விதவை கோலம்பூண்டு நின்றது. செழிப்பைத் தேடும் லிதன்யாவின் மனதையும் அது சுட்டெறித்தது.

அன்றொரு நாள் வீரகேசரி பத்திரிகையின் முன் பகுதியில் பெரிய எழுத்தில் ஒரு செய்தி வந்திருந்தது. ‘‘இன்றிலிருந்து எக்காரணங்களைக்கொண்டும் மரங்களை வெட்டுவது முற்றாகத்தடை செய்யப்பட்டுள்ளதுடன் தகுந்த நியாயமான காரணங்கள் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் மிகவும் ஆழமான காரணங்களுக்கு மட்டுமே மரத்தின் கிளைகளைகூட வெட்டுவதற்கு அனுமதி வழங்கப்படும். தகவல். மத்திய சுற்றாடல் அதிகார சபை.’’ என்னும் பத்திரிகை செய்தியை அவதானித்த லிதன்யாவிற்கு ஓரளவு மனத்திருப்தி. அவளது பசுமைப்புரட்சி வெற்றி என்னும் ஏணியில் இரண்டாவது படியை கால் வைப்பதற்கு எத்தனித்துள்ளமை வாடிய பயிருக்கு கிடைத்த ஒரு துளி நீர்போல இருந்தது. சுதந்திரமாக மரங்களை வளர்க்கவும் பசுமையை நிலைநாட்டவும் முயற்சிக்கும் ஒரு ஆன்மா இன்று தன்னுடைய பிரதேசத்தில் பசுமையைத் தேடிக்கொண்டிருக்கிறது.





-கர்ணன் சின்னத்தம்பி

# சம்பரி அப்பா...

என்ன.. அந்த ஒழுங்கை வந்ததும் எல்லோரும் அவசர அவசரமாக ஓடுகிறார்களே.. கழிசான் போட்ட பொடியளும் கூட பொக்கற் நிறைய கல்லை பொறுக்கி வைத்துக் கொண்டு இப்படி ஓடுறாங்களே.. இரவென்ன பகலென்ன எப்போதும் இது வழமையாகிவிட்டது. ஊருக்குப் புதிதாக வருபவர்கள் மட்டுமே கல் எறி விழுந்ததாகச் சொல்கிறார்கள். ஏன் எங்கிருந்து அந்தக் கல்லு வந்து விழுகிறது.. எறியன் சாமி , ஏதோ குறைவைத்து விட்டார்கள் அதனால்தான் இப்படி நடக்கிறது என்று சில பெரியவர்களின் கருத்து....

....அந்த முச்சந்தி முடியும் முடக்கில தான் சம்பரி அப்பாவின் வீடு... சம்பரி அப்பா ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர். ஊர்ப்பள்ளியிலேயே இருந்த படியால் எல்லோரும் அவருக்கு மரியாதை..அந்தக் கிராமத்தில இருந்த சில கல்வீடுகளில். சம்பரி அப்பாவின் வீடும் ஒன்று.. அழகாய் மட்டை வரிந்து, நாலுவரி கிடுகும் கட்டி நல்ல அழகான வேலி.. சம்பரி அப்பா.. அந்த நாளையிலேயே காதலித்துக் கலியாணம் செய்து புரட்சி செய்த மனிசன்.. தனக்கே உரித்தான மிடுக்கும், நல்ல கட்டுடலும் கொண்டவர்

ஊரில எல்லாரும் பார்த்துச் சிரிக்கும் படியே மனைவியின் தோழில கை போட்டுக் கொண்டு போவார்... யார் என்ன சொன்னாலும் காதில வாங்க மாட்டார்... எல்லோரும் அவரைத் திமிர் பிடிச்சவர் என்று போகவிட்டே சொல் வார்கள். அது அவரின் காதில் கேட்டும் கேட்காமலேயே கடந்து போகும்.. அந்த நாளையிலேயே ஆங்கிலப் பள்ளியில் படித்ததால் அந்த ஊருக்கே ஏதாவது படிவம் நிரப்பிறது... கடிதம் எழுதிறது எல்லாமே சம்பரி அப்பாதான்... கொஞ்சம் திமிர் என்றாலும் உதவி என்று கேட்டால் செய்வார்... சம்பரி அப்பாவுக்கு ஒரு மகன் இருந்ததாகவும் அவன் எப்போதோ வெளிநாடு சென்றுவிட்டான் என்றும் கேள்வி... சம்பரி அப்பா முழுமையிலும் தன் கையையே நம்பி வாழ்பவர்... அவருக்கு மனைவிதான் நட்பு.. உறவு எல்லாமே.. அந்த மனிசியும் சம்பரி அப்பாவின் விருப்பறிந்து காலத்திற்கேற்ற மாதிரி.. பொடிமீனும் கீரைப்புட்டும், மண்ணாமீன் வாங்கி வந்து நல்லா அரைச்சுக் குழம்பு வைச்சு முளைக் கீரையில ஒரு கடையலும் செய்து கொடுத்தால்... சம்பரி அப்பாவும் வீட்டில இடுக்கிறவர், வாடகையாக கொடுக்கும் ஒரு போத்தல் கள்ளை அடிச்சிட்டு நல்லாச் சாப்பிடுவார். கிழவியும் பக்கத்தில இருந்து பார்த்து இரசிக்கும்.. அந்த ஒழுங்கையில வாற வாசம் சொல்லும் சம்பரி அப்பாவின் வீட்டில் என்ன சமையல் என்று.. அப்படி தின்று அனுபவிச்ச மனிசன்....

...மனிசி செத்த பிறகு தனக்குள்ள ஏதேதோ பேசிக் கொண்டே நடக்கிறார்..'' என்ன சம்பரி அப்பா..'' என்று யார் எது கேட்டாலும் எதுவும் பேசுவதில்லை, தனக்குள் பேசுவதை மட்டும் நிறுத்துவதில்லை... சனம் எழும்ப முன்னமே போய்க் குளத்தில குளிச்சிட்டு.. நாலு முழத்தைத் தோய்ச்சு

ஒரு பக்கத்தை அலரிச் செடியில கட்டிவிட்டு காயும் வரை மறுகரையை கையில பிடித்துக் கொண்டு நிற்பார்.. சனம் உலாவத் தொடங்க முன்னம் வீட்டுக்குள் போய்விடுவார்... சம்பரி அப்பாவின் இந்த மாற்றம்

ஊர் மக்களை ஆச்சரியப் படுத்தியது... சம்பரி அப்பாவிற்கு லூசாமே என்று அவர் காது படவே கதைத்தார்கள்.. அவர் கண்டும் காணாமல் நடந்தாலும் கழிசான் பொடியள் அவரைத் துரத்துவதும் , கல்லால் எறிவதுமாக தொடர..

சம்பரி அப்பாவும் கொஞ்சம் பயந்து... அந்தப் பெரிய வளவின் வேலிகள் இப்ப வீட்டுக் கதவுகளோடு வந்து விட்டது.. தன்னந்தனியனாகவே படுக்கப் பயந்தார்... பொடியளின் சேட்டைகள் அதிகரித்தன.. சம்பரி அப்பா வீட்டில் எதையும் வைக்காமல் ஒரு பை எடுத்து அதனுள் தன்னிடம் இருந்து எல்லாவற்றையும் எடுத்து வைத்துக் கொண்டு போகும் இடமெல்லாம் அணிந்து கொண்டு திரிவார்.. ஊர்ச்சனம் எல்லாம்.'' மகன் அனுப்பிற காசைக் கொண்டு திரியிறார்'' என்றே கதைத்தார்கள். ஆனால் சம்பரி அப்பாவுக்கு மட்டுமே தெரியும் அந்தப் பையுள் என்ன இருக்கிறதென்று...

சம்பரி அப்பா இப்போது நன்றாகவே பயந்து விட்டார். பள்ளிப் பொடியள் அவர் வீட்டுக்கு கல் எறிவதும், அவருக்கு கல் எறிவதும், துரத்துவதுமாய் தொடர.. சம்பரி அப்பா வீட்டை விட்டு வெளியேறவே பயந்து ஒதுங்கிக் கொண்டார்... நாளடைவில் வெளியில் போகாமல் என்ன செய்ய முடியும் தன்னைத் தற்காத்துக்கொள்ள அவரே மனநலம் பாதிக்கப்பட்டவர் போல நடிக்கத் தொடங்கினார். போவோர் வருவோரையெல்லாம் துரத்த தொடங்கினார், அவரே முந்திக் கொண்டு சிறிய கற்களால் எறியத் தொடங் கினார்... வீட்டுக்குள் இருந்து கொண்டே அந்த ஒழுங்கையால் போவோர் வருவோர் எல்லோருக்கும் கல் எறியத் தொடங்கினார்... இப்போது சம்பரி அப்பாவைப் பார்த்து சனம் பயப்படுகிறது.. சம்பரி சர்வ சாதாரணமாக நடந்து திரியத் தொடங்கினார்..

...சில நாட்களாக கல் எறி எதுவும் இல்லை, சம்பரி அப்பாவையும் தெருவில் காணவில்லை, அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள், என்ன நடந்திருக்கும் என்று எட்டிப் பார்த்ததில் சம்பரி அப்பா.. மௌனமாக கிடந்தார்..

ஊரே கூடிவிட்டது, சம்பரி அப்பா அனாதையாக கிடந்தார். அவர் தோளில் இருந்த பை கழன்று ஓரமாக கிடந்தது, கூடியவர்கள் சம்பரி அப்பாவைப் பார்ப்பதை விடுத்து அந்தப் பையினுள் என்ன இருக்கிறது என்று ஆராய்வதிலேயே குறியாக நின்றார்கள்...

சிலர் ''என்ன மாதிரி இருந்த மனிசன் கடைசியில இப்படியா..'' என்று பேசிக் கொண்டார்கள்..

சம்பரி அப்பா மனைவி இறந்து தனிமரமாக நின்ற போது அவருக்கு ஆதரவாக இல்லாமல், அவருக்கு எத்தனை தொந்தரவு கொடுத்தார்கள்.. தன்னைப் பாதுகாக்க சம்பரி அப்பா எடுத்துக் கொண்ட வேசமே..

இப்படித்தான் மனிதர்கள் இருக்கும் போது எதுவும் செய்ய மாட்டார்கள், இறந்த பின் நீலிக்கண்ணீர் வடிப்பார்கள்.. இதுதான் உலகம்..

சம்பரி அப்பாவின் வீடு பாழடைந்து போய்க்கிடக்கிறது.. வேலியில் நின்ற பூவரசு மரம் கதியால்களை விறகுக்கு எடுத்துச் செல்கிறார்கள். ஆனாலும் இப்போதும் அங்கு சம்பரி அப்பாவின் ஆவி உலாவுவதாகவும், அதுவே எறியன் சாமி என்ற பெயரில் கல் எறிவதாகவும் சனம் நம்புகிறார்கள். இப்போதும் அந்த ஒழுங்கையால் செல்லும் போதும் கல் எறி விழுமோ என்ற அச்சத்தில் வேகமாகவே செல்கிறார்கள்.


## கடுகு குறுங்கதை

# ஓர் அப்பா

“நாய் பார்க்கிற வேலையை நாய் பார்க்காம கழுதை பார்த்தா..இப்படித்தான் ”
அப்பா சத்தம் போட்டுக்கொண்டு வீட்டுக்கு வந்தார். வீட்டுக்குள் இருந்து மகள் என்ன
ஏதோவென்று வெளியே வந்தாள். “என்னப்பா.. என்ன நடந்தது...? ” படபடப்புடன் அப்பாவிடம்
கேட்டாள். “இல்லை.. மகள்.. இவ அருந்ததி மாமியின்ர பேத்தி இருக்காளே..
அவள் புதுசா வேண்டின மோட்ட சைக்கிளில... நல்ல வேகமாய் ஓடி வந்தாள்..
நான் மறிச்சு மகள் கொஞ்சம் மெதுவாய் ஓடு என்றன்..
அதுக்கு அவள்.. இத போய் உங்கட மகளிட்டயும் சொல்லுங்கோ என்றாள்.
அது தான் நான்... ” அப்பாவின் வார்த்தைகள்.....
மகள்... பேச முடியாது.. தலையை.... மகளை ஓரக்கண்ணால் பார்த்தபடி
அப்பா அந்த இடத்தை விட்டு நகர்ந்தார்.

**திருமலை சுந்தா**

*11*



–சூசை எட்வேட்–

# கொடுத்தார்க்கு குறைவில்லை

அன்னம்மாவும் கணவன் சூசைப்பிள்ளையும் வழக்கத்தைவிட வேளைக்கே எழும்பிவிட்டார்கள்! இருவருக்கும் சமையலறையில் அதிக வேலை காத்திருந்தது : அன்னம்மா மொட்டைக்கத்தியால் ஆறேழு தேங்காய்களை உடைத்துக் கொண்டிருந்தாள். நல்ல பழத்தேங்காய் அவை. சூசைப்பிள்ளையார் சும்மா இருக்கமாட்டார், நல்லாக பசளையிட்டு நீர் வார்த்து பிள்ளைபோல் வளர்த்த தென்னம்பிள்ளைகளிலிருந்து பெற்ற நல்ல பால் தேங்காய்கள் தான் அவை!....... உடைக்கும் போது வெளியேறும் இளநீரையெல்லாம் ஒரு கோப்பையில் இறைத்து நிரப்பி வைத்தாள்... சூசைப்பிள்ளையார் திருகு வலையை எடுத்துக்கொண்டு வந்து ஒவ்வொரு பாதியாக துருவத் தொடங்கினார். தேங்காய் துருவும் வேலையை தன் கணவன் செய்வதையே அன்னம்மாள் விரும்புவாள். வேறு யார் துருவக்கேட்டாலும் அனுமதிக்கமாட்டாள். 'அவர் துருவுனா பூ நல்ல மென்மையாயிருக்கும்: கைவைச்சிப் புளிய ஆசையாயிருக்கும் : நல்லாப்பால் வரும்! இது நாங்க திருவுனா வலை வலையா கொட்டும்' என்பாள்.

தேங்காய் பூவானதும் ஒரு அண்டாச்சட்டியில் அவ்வளவையும் போட்டு, இளநீரையும் விட்டாள் மனைவி. கணவன் பால் புளிய ஆயத்தமாகினான். ''கொஞ்சம் பொறுங்கோ, இதக்குடிச்சிற்று வேலையத் துவங்குங்க'' என்று சொல்லிக் கொண்டே தேனீர்க் கோப்பையை நீட்டினாள். வாங்கிப்பருகிவிட்டு அவர் வேலையைத் தொடங்கினார். இரெண்டு கரங்களாலும் பூவைக் கசக்கி பால்புளியும் லாவகத்தை தன்னை மறந்து பார்த்து இரசித்தாள் அன்னம்மா. 'எனக்கு எல்லா விதத்திலும் நல்ல விதமாய் உதவும் கணவன் வாய்த்திருக்கிறாரே ஆருக்குக் கிடைக்கும்!' என்று நினைத்தாளோ என்னமோ அவளையறியாமல் இதழ்கள் பூவாய் விரிந்தது!

இதற்கிடையில் பச்சரிசியை அரித்து கழுவி வைத்துக் கொண்டாள். பயறு பிளம்ஸ் பேரீச்சம்பழத்தையும் துப்பரவு செய்துகொண்டாள். நல்ல கறுத்த சக்கரையை எடுத்து தடிப்பாக கரைத்து வைத்துக்கொண்டாள். ஏலக்காய் கறுவாப் பட்டையையும் சேர்த்தாள்... தன்னால் செய்யக்கூடிய வேலை முடிந்ததும் இனி அவள்பாடு என்று அடுக்கனையை விட்டு வெளியேறினார் சூசைப்பிள்ளையார். கூடத்துக்கு வந்து தொலைக்காட்சியை தட்டிவிட்டார். அன்றைய செய்திகளை கேட்டறிந்தார். பத்திரிகைச் செய்தியையும் வாசித்தார் அது முடிய சட்டைய போட்டுக் கொண்டு நாலு எட்டு நடந்து பிரதான வீதிக்குப்போய் பேப்பர் கடையை அடைந்தார். ஒரு பத்திரிகையை வாங்கினார். ஒருகூறு வெற்றிலையையும் வாங்கி வாயில் போட்டு மென்று கொண்டே வீடு வந்தார். சாய் கதிரையில் சாய்ந்து கொண்டே படிக்கத் தொடங்கினார். இடைக்கிடை நல்ல புதினங்கள் சந்தித்தால் அடுக்களைக்குப் போய் அன்பு மனைவிக்கு வாசித்துக் காட்டுவார். இருவரும் சேர்ந்து இரசித்து சுவைப்பார்கள்!

சக்கரைப் பொங்கல் தயாராகி விட்டது! ஐந்தாறு கோப்பைகளில் போட்டு நிரப்பி பெரிய தட்டொன்றில் எல்லாவற்றையும் வைத்து, கணவனைக் கூப்பிட்டாள் அன்னம்மாள்: ''என்னால தனிய இதையெல்லாம் கொண்டுபோக ஏலாது! நீங்களும் வாங்க துணைக்கு'' என்றாள்... இருவரும் சேர்ந்து பொங்கல் தட்டை ஏந்தி தெருப் படலையைத் திறந்து ஒழுங்கை வீதியால் நடை பயின்றார்கள்... முதல் வந்தது சுவைதா வீடுதான். ''சுபைதா சுபைதா'' என்று குரலெழுப்பிக் கொண்டே பொங்கல் தட்டோடு உள்ளிட்டார்கள் இருவரும். சுபைதாவும் கணவன் முகைதீனும்

அகமும் முகமும் மலர இவர்களை வரவேற்றார்கள்! ''வாங்கக்கா அண்ணாச்சி, என்ன காலத்தாலையோடயே தட்டுகள் கோப்பை களோட இந்தப்பக்கம் வந்துற்றீங்க! என்ன விசேசம்?'' ''அது வந்து இண்டைக்கு எங்கட மூத்தமகள்ற பேத்டே எல்லே, அதுதான் இண்டைக்கு சக்கரப்பொங்கல் கிண்டி எடுத்துக் கொண்டு வாறம்!'' ''அடடே இண்டைக்கு ஆவணி இருபத்திநாலு எல்லா தேதி. நீங்க வருசா வருசம் இப்பிடிச்செய்து எல்லா ஊட்டுக்கும் கொடுக்கிற எலுவா! உங்கட நல்ல மனதுக்கு அல்லா நல்லாக்கி வைப்பான்!

''நாங்க அறிஞ்ச காலம் துவக்கம் அவுங்க நல்லாத் தானே இருக்கிறாக. அவங்கட குணத்துக்கு அல்லா இன்னும் கொடுப்பான் என்றார் முகைதீனும்..... சுவைதா சொன்னாள்: ''காலமைக்கு சாப்பாட்டுக்கு என்ன செய்யுறது எண்டு யோசிச்சிக் கொண்டிருந்த நாம. இப்ப பிள்ளை குட்டிகள் நல்லா சாப்பிடுவாங்க!'' ''ஏன் நீங்களும் தாற நீங்கதானே நோன்புப்பெருநாள் அது இது எண்டு.'' ''அது எப்பவோ ஒருக்கா, இது நீங்க அடிக்கடி அதஇத கொண்டு வந்து தருவீங்க! உங்களப்போல வருமா?''

இருவரும் தட்டுகளோடு அடுத்த வீட்டுப்படலையை அடைந்தனர். ''இந்திராணி இந்திராணி'' என குரல் கொடுத்தாள் அன்னம்மா. கதவு திறக்கப்பட்டது. ''ஆரு, அட அன்னம்மாக் காவா! என்ன தம்பதி சமேதரராக காலங்காத்தால வந்து நிக்குறீங்க தட்டுகளையும் ஏந்திகொண்டு! என்ன அப்பிடி?'' ''அப்ப நாங்க ஒண்டுமில்லாம உங்கட வீட்ட வரக்கூடாதாக்கும்?'' ''இல்லையம்மா, நீங்க சும்மாவும் வந்து நல்ல ஊர்ப்புதினங் களையும் கதைச்சி சிரிச்சிப்போட்டுத்தானே போற நீங்க. எப்ப வந்தாலும் வெறும் கையோட வரமாட்டீங்க! இப்பவும் ஏதோ கொண்டுதான் வந்திருக்குறீங்க போல கிடக்கு!''

''நீ சரியான ஆள்தான், நல்லாய் கணிப்பெடுத்துத்தான் வைச்சிருக்கிறாய் ஒவ்வொருவரையும்!........ இண்டைக்கு எங்கட மூத்தமகள்ற பிறந்தநாள் எல்லே, அதுதான் கொஞ்சம் பொங்கல் செய்து அயலுக்கெல்லாம் குடுத்துக்கொண்டு வாறம்.'' ''சரி சரி வெளியில நிண்டு கதைக்காம உள்ள வாங்க தேத்தண்ணியாவது குடிச்சுப்போட்டு போங்க.'' ''ஐயோ இன்னும் எத்தின வீட்ட போகவேணும்! வேற அலுவல்களும் கிடக்குது மெனக்கிட ஏலாது!'' ''நீங்க உள்ள வந்து இருக்கா விட்டால் நீங்க தாறத நானும் வாங்கமாட்டன் ஓ!''..... சூசைப் பிள்ளையார் பின்தொடர அன்னம்மாள் அவர்கள் வீட்டுள் உள்ளிட்டாள். பொங்கல் கோப்பை ஒன்றை அவர்களிடம் கொடுத்தனர். திறந்து பார்த்த இந்திராணியின் அகமும் முகமும் மலர்ந்தது! ''நாங்க தைப்பொங்கல் பெருநாளுக்குத்தான் பொங்கல் செய்வம் அயலுக்கும் குடுப்பம். நீங்க சின்னச்சின்ன விசேசங்களுக்கெல்லாம் பொங்கல் செய்து குடுத்து எல்லாரை யும் சந்தோசப்படுத்தி வாறீங்க! உங்களிட்டத்தான் பொங்கல் புக்கைய இவ்வளவு ருசியாச்செய்யுற நுட்பத்த அறிஞ்சி கொள்ளவேண்டி இருக்கு! என்றவள் கணவனைக் கூப்பிட்டு சொன்னாள்: ''இந்தாப்பா, எங்கட முருங்க இந்தமுற நல்லா காய்ச் சிருக்கெல்லே, கெதியா ஆஞ்சி அவங்களுக்குக் குடுங்கோ'' ''நீ சொல்ல முதலே நான் முருங்கக் காய்கள ஆஞ்சி போட்டன். இந்தாரும் குடும்.'' என்றார் கணவன் இந்திரன்.

அங்கிருந்து விலகி கொஞ்சம் தள்ளி எதிர்வீட்டுப் படலையைத் திறந்து கொண்டே ''அன்னமேரி அன்னமேரி என்று கூப்பிட்டுக் கொண்டே உள்ளிட்டனர். அன்னமேரி இவர் களுக்கு நெருங்கிய உறவினர்தான். குடும்ப உறுப்பினர்கள் கூடத்தான். அதை உணர்ந்துதான் போலும் இவர்கள் பெரிய கோப்பை பொங்கலை இவர்களுக்கு வழங்கினர். அவர்கள் இல்லிடத்தில் குழந்தை குட்டிகள் கூட என்று தெரியுமாதலால், மகள் வந்தபோது கொடுத்துச்சென்ற வெளிநாட்டு டொபி கன்டோஸ் யூஸ் வகையறாக்களையும் கொடுத்தனர். பொங்கல் புக்கையையும் பார்த்ததும் சிறார்களின் களிநடனத்தைப் பார்க்க வேண்டுமே! இன்னும் கொடுக்க வேண்டும் போலிருந்தது சூசைப்பிள்ளை தம்பதிகளுக்கு!..... உறவினரல்லாவா பலதும் பத்தும் சுவாரஸ்சியமாய்க் கதைத்துக் கொண்டிருந்தனர். அங்கிருந்து விடைபெறும் போது அன்னமேரி சொன்னாள் : ''நீங்க இதுமாதிரி சின்னச்சின்ன உதவிகள் செய்து வாறீங்கதான் இல்லையெண்டு சொல்லல்ல, ஆனா இப்ப இருக்கிற கொரோனா பிரச்சினையால இவருக்கு தொழில் நடக்குதில்ல பெரிய கஷ்டமாயிருக்கு! அதுதான் உங்கட மகள்ற போன் நம்பர ஒருக்காத்தாங்க அவட்ட உதவி கேட்டு பார்ப்பம்!''

''சரி பார்ப்பம்.'' என்று சொல்லிக்கொண்டே அகன் றார்கள். போகும்போது அன்னம்மா கணவன் காதோடு மொழிந்து கொண்டே வந்தாள் இப்படி : ''நாங்கள் எவ்வளவு தான் உதவி செய்து வந்தாலும் இவங்களுக்குத் திருப்திப்படாது. வெளிநாட்டுக்காரரிட்ட கூட வறுகினாத்தான் மனம் குளிரும்! அங்க வெளிநாட்டில எங்கட பிள்ளைகள் எவ்வளவு கஷ்டப்பட்டு உழைச்சி சீவிக்குதுகள், வீட்டு வாடக கரண்டுக்கு தண்ணிக்கு வருமானவரி அது இது எண்டு எத்தின இலட்சம் முடியும் தெரியுமா! ஒரு பிரசவம் பார்த்து முடியவே எத்தின இலட்சம் வேணும் எண்டு தங்கட குடும்பச் செலவுகள் போக மாதாமாதம் சீவியப்பாட்டுக்கு அனுப்பி வருதுகள். அதுக்குள்ள நாங்களும் சின்னச்சின்ன உதவிகள செய்துதான் வாறம்! அது போதாதா மெண்டு தொகையா வாங்கத் திரியுதுகள்!...... போன் நம்பர தரட்டாம்! நான் கடைசி மட்டும் குடுக்கமாட்டன் ஓ! எங்கட பிள்ளைகளுக்கு உபத்திரவம் குடுக்க விடமாட்டன் ஓ!''

அடுத்தடுத்த வீடுகள் தூரத்து உறவினர்தான். அவர்க ளுக்கும் வாழையிலையில போட்டிருந்த பொங்கல் புக்கைய அன்பளிப்புச் செய்து மீண்டனர். அவர்களில் ஒருத்தி சொன்னாள்: இங்க எத்தினையோ வெளிநாட்டுக்காரர் இருக்கிறாங்கதான், ஆனா அவங்க தங்கட பவுச எடுத்துக்காட்டிக் கொண்டுதான் இருப்பாங்க, உங்களப்போல சின்னதா எண்டாலும் ஒரு உதவியும் செய்யுற மனப்பான்மையில்ல!''

அங்கிருந்து மீளும்போது தட்டு காலியாகிவிட்டது. வீடு நோக்கி விரைந்தனர் இருவரும். ''அதுசரி முன்னுக்கு இருக்கிற குணசேனமாத்தையாவுக்கு இந்த முற குடுக்க இல்லையோ? அவங்கள்தானே முன்னுக்கு இருக்கிற ஆக்கள். அவங்களுக்குத்தானே முதல் குடுத்திருக்க வேணும் புக்கை இருக்கோ?'' என்று கேட்டார் சூசைப்பிள்ளையார். ''நான் அவங்களுக்கும் எங்களுக்கும் புறம்பா எடுத்து வைச்சிற்றுத்தான்

அங்கால இங்கால வெளிக்கிட்டனான்..... இப்ப அவங்களிட்ட போவம் வாங்கோ,'' என்றாள் அன்னம்மாள்.

இவர்கள் தங்கள் வளவுக்குள்ளால் நடந்து முன்னோக்கி நகர்ந்தனர். ''குணசேனமாத்தயா சந்திரிகா அம்மே'' என்று இருவரும் மாறி மாறி குரலெடுத்து அழைத்தனர். பலமுறை இப்படி அழைக்க வேண்டியதாயிற்று.அவர்கள் வீடு கடை எல்லாம் முன்னுக்கு பிரதானவீதியைப் பார்த்தால் போலவே இருக்கிறது. பின்னால் அடிவளவில் நின்று கூப்பிட்டதால் செவிக்கெட்ட காலதாமதமாகிவிட்டது.... சந்திரிகா அம்மேதான் முதலில் வந்தார். பின்னால் குணசேனாவும் வந்து கொண்டிருந்தார். இவர்கள் பொங்கலை உவந்தளித்தனர். ஒருபையையும் நீட்டினர். அதனுள் நல்ல பழுத்த மாம்பழங்களும் இருந்தன. அவர்கள் அகம் மலர்ந்தது முகத்தில் தெரிந்தது! சிரித்துக் கொண்டே சந்திரிகா சொன்னா: ''இங்க எங்கட ஆளுங்க இரண்டு மூணு சனங்கள்தான் இருக்கிறதீங். ஒருவரும் திரும்பியும் பார்க்கிற இல்லே! உங்கட தமிழ் முஸ்லீமூகளும் வெறுப்பாத்தான் பார்க்கிறதீங்! நீங்க மட்டுந்தாங் ஆதர காட்டுறீங்! புத்த பகவான் ஒங்களுக்கு எல்லாம் தாறதி!''

''அட நீங்க என்ன, இதெல்லாம் பெரிய உதவியா? நீங்க செய்த உதவிய வாழ்க்கையில மறக்க முடியுமா நாங்க?... இந்த இனகலவரத்தில திருகோணமலையில இருக்கிற கடை கண்ணிகள எல்லாம் ஆமிக்காரர் எரிச்சி அளிச்சிக்கொண்டு வந்தாங்கள்! தமிழ் குடியெல்லாம் ஓடுபட்டுத் திரிஞ்சுது! நாங்களும் செய்வதறியாது பயந்துபோய் நிண்டம்! நீங்கதான் எங்கட வீட்ட வந்து, ''நாங்க இரிக்கங், நீங்க பயங் வேணாங்! நாங் அவங் சொல்லி இருக்கிறதி, எங்கயுங் போக வேணாங்'' எண்டு சொன்னது மாத்திரமில்ல அடிக்கடி எங்கட வீட்ட வந்து தென்பூட்டீனீங்க! அதையெல்லாம் மறப்பமா நாங்க?!'' அவர்கள் பெரிதாக சிரித்து தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்!

அங்கிருந்து அகலும் போது சூசைப்பிள்ளையார் ஒரு சினிமாப்பாடலை பாடிக்கொண்டே வந்தார் : ''பழகும் வகையில் பழகி வந்தால் பகைவன் கூட நண்பனே....''

பகல் பன்னிரெண்டையும் தாண்டிய பின்னர்தான் டென்மார்க்கில் இருக்கும் மகளுக்கு பிறந்தநாள் வாழ்த்துச் சொல்ல தொலைபேசியை எடுத்தனர். அப்போதுதான் அவர்கள் தூக்கம் கலைந்திருப்பர்! ''மகள் நேசம்மா, பிறந்தநாள் வாழ்த்துப்புள்ள! இன்னும் மற்றவங்களுக்கு உதவியா வாழ கடவுள் அருள் செய்வார்!'' ''அப்பிடி நானென்ன பெருசா உதவி செய்து போட்டன் அப்பா?'' ''நீ செய்துவாறது பெரிய உதவியில்லாம வேறென்ன! நிம்மதியா நாங்க வாழ சகல வசதிகளோடயும் நல்ல வீட்ட கட்டி தந்தாய்: சீவியப்பாட்டுக்கும் மாதா மாதம் அனுப்பிக்கொண்டே வாறாய்: எங்கட இனசனங்களில கஸ்டப்பட்டதுகளுக்கும் உதவியிருக்கிறாய்! எல்லா வசதியானவங்களும் வெளிநாட்டுக்காரரும் இப்பிடியா இருக்கிறாங்க! எல்லாம் மனம்போலதான் வாழ்வு!'' ''உங்கட மனம் போல எண்டு சொல்லுங்கப்பா! அதாலதான் நாங்க எல்லாம் நல்லா இருக்கிறம்!''

அடுத்தநாள் பகல் பத்து மணியிருக்கும் இவர்கள் உறவுப்பெண் அயலில் இருப்பவள், மனோகரி என்று பேர்



கையிலொரு பையோடு ''அன்ரி அன்ரி'' என்று கூப்பிட்டுக் கொண்டு வந்தாள். ''அன்ரி இண்டைக்கு என்ன சாமானுகள் வாங்கப்போறீங்க சொல்லுங்க'' என்று கேட்டு நின்றாள். அன்னம்மாவுக்கு வயதானதால் இப்போதெல்லாம் சந்தை கடைத்தெருவுக்கு திரிய கொஞ்சம் சிரமப்படுகிறாள். கணவனிடம் சொல்லி வேண்டலாம்தான், ஆனால் இவளுக்கு திருப்தி வராது! பார்த்து தெரிஞ்சி விலையைக் குறைத்து வாங்கமாட்டார்! ஆகையால், இதையெல்லாம் தெரிந்த இவள், தான் சந்தைக்கு கடை தெருவுக்கு வெளிக்கிடும் போது, இவர்க ளுக்கும் வேண்டிக் கொடுத்து உதவி வந்தாள்...... அன்னம்மா சாமான் பட்டியலையும் காசையும் நீட்டினாள். அவள் வேண்டிக் கொண்டு புறப்பட எத்தனிக்கையில், ''என்ன உன்ர முகம் வாடியிருக்கு சோர்ந்து போய் நிற்கிறாய்! ஏன் என்ன பிரச்சினை?'' ''அது அன்ரி, இவர உங்களுக்குத் தெரியுந்தானே, வேல முடிஞ்ச உடனே பாருக்குப்போய் குடிச்சிப்போட்டு மிச்சக்காசத்தான் வீட்ட கொண்டுவந்து தாறவர்.

இப்பப்ப நல்லாக் குடிக்கிறார் : கொஞ்சக்காசுதான் தாறார். இப்ப சாமான் வேண்ட கையில இருநூறு ரூபாதான் இருக்கன்ரி! நாலு பிள்ளைகளுக்கும் சாப்பிட இது காணுமா?'' அன்னம்மா அறைக்குள் உள்ளிட்டு ஒரு தாளை எடுத்து வந்து அவளுக்கு நீட்டினாள். சந்திரனைக் கண்ட அல்லியாக அவள் முகம் மலர்ந்தது! சோர்வு எங்கே போனதோ தெரியவில்லை!... இப்படி இடைக்கிடை நடக்கும்.

இன்னொரு நாள் பக்கத்து வீட்டு முகைதீன் ''அண்ணாச்சி அண்ணாச்சி'' என்று கூப்பிட்டுக் கொண்டு வந்தார். சூசைப்பிள்ளையார் வெளியே எட்டிப்பார்த்தார். முகைதீன் தலையைச் சொறிந்து கொண்டு நிண்டார். ''அண்ணாச்சி, மூண்டு நாலுமாதமா கரண்டு பில்ல கட்டாம விட்டுற்றன்! அது இப்ப எண்ணாயிரத்துக்கும் மேல வந்துற்றுது! கரண்ட வெட்டப்போறன் எண்டு நிக்குறாங்கள்! என்னட்ட மூவாயிரம் ரூபாதான் இருக்கு. இன்னும் ஒரு ஐயாயிரம் தந்தீங்க எண்டா பெரிய உதவியா இருக்கும்!..... சிக்கனமா பாவியுங்கடா எண்டு சொன்னா வீட்டில கேட்டாத்தானே! நெடுக ரீவிய போன லைற்ற அதை இத போட்டுக்கொண்டே இருப்பாங்க ஊட்டில!''.... அவர் உள்ளே போய் கேட்ட தொகையைக் கொடுத்தார். இவர் அவர் தோள் தடவி அங்கிருந்துமீண்டார்.

இப்படியாக இருக்கையில் ஒருநாள் அன்னம்மாள் படுக்கையை விட்டு எழுந்திருக்கவில்லை! ''என்னப்பா செய்யுது!'' என்று விசாரித்துப் பார்த்ததில், ''உடம்பெல்லாம் அடிச்சி முறிச்ச மாதிரி வருத்தமாயிருக்கு! எழும்பியிருக்க ஏலேல்ல! எழும்பி நிண்டா தலையச்சுத்தி விழுத்துமாப் போல கிடக்கு! அதுதான் பேசாம படுத்துக்கிடந்துற்றன்!''.... கணவனார் கொஞ்சம் அதிர்ந்துதான் போனார்! என்றாலும் விரைந்து செயல்பட்டு வைத்தியமனை கொண்டேகினார். அவர்கள் 'பொடி செக்கிங்' செய்து சொன்னார்கள் : ''இவவுக்கு பிரஸர் கொலஸ்ரோல் எல்லாம் ஆரம்பிச்சுக் கொண்டு வருகுது! மருந்த தொடர்ந்து எடுத்து வாங்க சுகம் வரும், பயப்படத் தேவையில்ல. நல்லா ஓய்வெடுக்க வேணும்.'' என்று சொல்லி உணவுக்கட்டுப்பாட்டையும் சொன்னார்கள்.

அதன் பிறகு அன்னம்மா சமையல் பக்கம் எட்டியும் பார்ப்பதில்லை. கணவனார்தான் தனக்குத் தெரிந்த சிறுசிறு உதவிகளை செய்து வந்தார். என்றாலும் இரண்டு நாளாக கடைச்சாப்பாடுதான்! வருத்தக்காரிக்கு ஒத்துவருமா மனவருத்தம் தான்!..... இப்படியிருக்கையில் தெருப்படலை திறக்கும் சத்தம் கேட்டது. ''அக்காச்சி அக்காச்சி'' என்று கூப்பிட்டுக்கொண்டே சுபைதா உள்ளிட்டாள். அன்னம்மாவின் அனுங்கும் குரல் மட்டும்தான் கேட்டுக் கொண்டிருந்தது. ''என்னக்கா, இப்பிடி வருத்தமா படுத்திருக்குறீங்களே! எங்களுக்குத் தெரியாம போச்சுதே! எப்ப துவக்கம் வருத்தம்? சொல்லியிருந்தா வந்து பார்த்திருப்பமே! ஆசுபத்திரியில காட்டினீங்களா மருந்தெடுத் தீங்களா'' என்று பலவாறாக பிரலாபித்தாள் சுபைதா! சூசைப்பிள்ளை இவள் பிரலாபங்களுக்கெல்லாம் சுருக்கமாக பதிலிறுத்தார் : ''ஆசுபத்திரியில காட்டினம் : மருந்தெடுத்தம்: இரெண்டு நாளா கடைச்சாப்பாடுதான்!'' ''அய்யோ அல்லாவே! வருத்தக்காரிக்கு கடைச்சாப்பாடு சரி வருமா? என்ன வேல பார்த்தீங்க! எங்கிட்ட சொல்லியிருக்கக் கூடாதா?'' என்று சொன்னவள் நேரே சமையல் கூடத்துக்குப்போய் சமைக்கும் வேலையை ஆரம்பித்தாள்!... சமையலறைக்குள் போனில் கதைக்கும் சத்தமும் கேட்டது : ''என்னங்க, அன்னம்மாக்காவுக்கு சரியான வருத்தம், நான்தான் சமைச்சிக் குடுக்கப்போறன்! நீங்க மகளிட்ட சொல்லி எங்கட சமையல் சாப்பாட்டப் பாருங்க!''

அடுத்த நாள் கொஞ்சம் தள்ளி இருப்பவள், சாருலதா என்று பெயர். சின்ன மகனையும் கூட்டிக்கொண்டு இங்கே வந்தாள். ''இவருக்கு இண்டைக்கு பத்தாவது பேத்டே! கொண்டாடிச் செய்ய எங்களிட்ட வசதியாயிருக்கு? சும்மா இவருக்காக வீட்டோட சின்னனா ஏதோ செய்தம்.'' என்று சொல்லிக்கொண்டே மகன் மூலமா சின்னதா ஒரு டப்பாவை கொடுத்தனர். சூசைப்பிள்ளையார் தான் முன்னால் நின்று வாங்கினார்... ''எங்க அன்ரியக்காணம்?'' என்று அறைக்குள் உள்ளிட்டவள் திடுக்கிட்டாள்!'' ''என்ன அன்ரி இப்பிடி பாடுகேடா கிடக்குறீங்களே! எங்களுக்குத் தெரியாமப் போச்சுதே!'' என்று பரிதாபக்குரல் எழுப்பியவள், அக்கறையாக அவவிடம் சுகநலன் விசாரித்தாள்..... அங்கே அடுக்கியிருக்கும் மருந்து வகையறாக்களை அவதானித்து, ஒரு தைலக்குப்பியை எடுத்து கை கால் உடம்பெல்லாம் பூசி தேய்த்துவிட்டாள்.....

''முத்தமெல்லாம் குப்பையா கிடக்கு'' என்று சொல்லிக்கொண்டே முற்றம் பெருக்கினாள்.

அவள் போனபின் இன்னொருத்தி வந்தாள். ''அன்ரி என்ன சாமானுகள் இண்டைக்கு வாங்கப்போறீங்க?'' என்று கேட்டுக்கொண்டே உள்ளிட்டாள். அன்ரியின் பரிதாப நிலையைப் பார்த்து அவள் விழிகள் மேல் ஏறியது! நிலைமையை கேட்டறிந்து இரங்கி தன் அனுதாபத்தை தெரிவித்துக் கொண்டாள்!.... சற்று விலகி, ''அங்கிள், மூண்டு நாலு நாளைக்கு தேவையான சாமானுகள வாங்கித்தந்துற்று போறன் சொல்லுங்கோ. உங்களுக்கு அவவை யும் வீட்டு வாசலையும் பார்க்கவேணு நேரமிருக்காது தானே!'' அவர் எழுதி பட்டிய லையும் காசையும் கொடுத்தனுப்பினார்.

இப்படியே அயலில் உள்ளவர்கள் அன்னம்மாளை அடிக்கடி வந்து பார்த்து ஆறுதல் வார்த்தைகள் கூறி, இயலு மான உதவிகள் செய்து நன்றிக்கடன் தீர்த்து வந்தனர்! அன்னம்மாளும் ஓரளவு தேறி வந்து கொண்டிருந்தாள்!.... அப்போதுதான் அன்னமேரி வந்தாள். அன்னம்மாவுக்கு அன்னமேரி ஒன்றுவிட்ட சகோதரிதான். ''நான் இப்பதானே கேள்விப்பட்டன் உங்களுக்கு சுகமில்லையாமெண்டு!'' என்று கேட்டுக்கொண்டு வந்தவள், இருந்து கொண்டு கதையளக்கத் துவங்கினாள். எல்லாமே தன்வீட்டு கஷ்டங்களின் புலம்பல் கள்தான். ''அண்டைக்கு மகள்ற போன் நம்பர கேட்டன் தராம விட்டுற்றீங்க! என்று சொல்லி முகத்தை தொங்கப்போட்டவள், கவிழ்ந்த தலையோடு ஏதோவெல்லாம் முணுமுணுத்து பேசிக் கொண்டிருந்தாள் : ''சின்னனா அதையிதை தந்து ஆபத்தந்திரத் துக்கு உதவினாக்காணுமா?........ உங்கட பிள்ளைகள் எல்லாம் வெளிநாடு! எங்கட பிள்ளைகள்ள ஒண்டத்தன்னும் வெளியில எடுத்தாங்களா? என்ன சொந்தமப்பா இவங்கள்!'' என்று புலம்பிக்கொண்டே எழும்பிப் போய்விட்டாள்.

''நெருங்கின சொந்தக்காரருக்குத்தான் எரிச்சல் பொறாமை கூட இருக்கும்! எவ்வளவு குடுத்தாலும் அண்டாது, குறைதான் கேட்க வேண்டியிருக்கும்! கிள்ளித்தன்னும் கொடுப் பார்க்கு ஆண்டவன் அள்ளித்தான் குடுப்பான்!'' என்று அன்னம்மாளும் புறுபுறுத்தாள்!



"எங்களுக்குள் இருப்பது முரண்பாடு இல்லை வேறுபாடு. முரண்பாடு என்பது தண்ணீரும் எண்ணெய்யும் மாதிரி... சேராது. வேறுபாடு தண்ணீரும் பாலும் போல... சேர்ந்துவிடும்" என்று கலைஞர் தன்னைப்பற்றிச் சொன்னதை, ரசித்து ரசித்துக் குறிப்பிடுவார் ஜெயகாந்தன்!

"நாளை சந்திப்போம்..." என்பது மாதிரியான வாக்குறு-திகள் கொடுத்தால், கூடவே "இன்ஷா அல்லா" என்று சொல்லிதான் முடிப்பார்!

ஒரு கூட்டம் முடிந்து வெளியே வந்தபோது "இன்றைக்கு நீங்கள் விஸ்வரூபம் காட்டவில்லையே, ஏன்?" என்றார் ஒரு வாசகர். உடனே "விஸ்வரூபம் என்பது காட்டுவது அல்ல காண்பது" என்றார் ஜெயகாந்தன்.

**நா. கதிர்வேலன்**

# பெண்ணாகவே...!

**-கவின்மகள்**

சில்லென்ற தென்றலைக் கூட சுடுஅனலாய் உணர்ந்தாள் செல்வி. இருள் கவிழ்ந்து கொண்டிருக்கும் அந்தமாலைப் பொழுது அவளது துன்பத்தீக்கு மேலும் எண்ணை வார்த்து விட்டிருந்தது. வாழ்வில் அடுக்கடுக்காய் ஏற்பட்ட துன்பச் சவுக்கடிகளால் மனம் சாவொன்றையே நாடி நின்றது. அவள் வாழ்ந்த வாழ்வில் யாசித்ததுதான் என்ன? அவள் ஆத்மார்த்தமாய் வேண்டிய அன்பு அவளுக்கு கிடைக்கவில்லை. ‘‘வாழ்வின் பாத்திரங்கள் எல்லாம் பொய் முகங்கள்’’ என்ற வரிகள் அவளது மனதில் வைரமாய் பதிக்கப்பட்டு விட்டிருந்தன. ஏமாற்றங்களும் விரக்தியும் நிறைந்த தனது வாழ்க்கையை நொந்து சலித்தவளாக தனது வீட்டு முற்றத்தை நோக்கி மெதுவாக நடக்கின்றாள்.

வேப்ப மரச் சருகுகள் முற்றத்தினை மூடிவிட்டிருந்தன. பாலைவனத்தில் ஒருதுளி நீருக்காக ஏங்கும் ஓர் அர்ப்ப ஜீவனாக, இன்னும் நம்பிக்கைக்கீற்றுக்கள் கண்களில் தெரிய எதிர்பார்ப்புக்களுடன் இங்கும் அங்கும் நடந்து திரிகின்றாள் செல்வி. ஐம்பது வயதைத் தாண்டும் முன்னரே நரையுண்ட தலையும், துன்பக் கீறல்கள் விழுந்த முகமும் கொண்டவளாக அவள் மாற்றமுற காரணமானவர்கள் வேறு யாருமல்ல. அவளது கணவன் குமாரும், அவள் பெற்றெடுத்த பிள்ளைகள் நால்வரும் தான்.

திடீரென்று இனந்தெரியாதொரு வலி..... தனது இடது மார்பைப் பிடித்தபடி சரிகின்றாள். நான்கு பிள்ளைகளின் தாயான செல்விக்கு இந்நிலையில் கூட அருகில் யாரும் இல்லை. வளர்த்த ஜிம்மிநாய் மட்டும் என்னசெய்வதென்று தெரியாமல் முனங்கிக்கொண்டு அவளது கால்களை நக்கியது. அவளது உயிர்த்துடிப்பு கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கொண்டிருக்கையில் அவளது கணவன் குமாரும், கடைசிமகன் சிவாவும் வந்து சேர்ந்தனர். அவளது நிலைகண்ட மகன், ஓடிவந்து அவளை உலுப்பினான். கணவனும், மகனுமாகச் சேர்ந்து அவளை உள்ளே தூக்கிச் சென்றனர்.

‘‘அம்மா.....அம்மா...’’ மகன் சிவாவின் குரல் தொலைவில் கேட்பதாகவே செல்விக்குப்பட்டது. கண்களைத் திறந்து பார்க்கவும், கதைக்கவும் சக்தியற்றவளாக சோர்ந்து போய் விட்டாள் செல்வி. கணவன் குமார் தனது இயலுமையின் இறுதி வெளிப்பாடாக ஒரு கப்பில் நீர் கொண்டுவந்து அவளது முகமெல்லாம் தெளித்து, திறந்து கிடந்த வாயினை மேலும் விரித்து மீதித் தண்ணீரை ஊற்றினான். எந்தப்பலனும் இல்லை. செல்வியின் உயிர் அவளது உடலைவிட்டு பிரிந்து விட்டது.



இதோ உறவினர்கள், அயலவர்கள், அவளது கடைசி மகன் சிவா, கணவன் குமார்.....! அட! வாழும் காலத்தில் ஒன்றுகூடாத சொந்தங்கள் அவளது இறப்பின் பின் திரண்டு வந்திருக்கின்றார்களே....! செல்வி வாழ்ந்த அவளது உடல் இதோ கட்டிலில் அசையாது கிடக்கின்றது. அவளது உயிரற்ற உடல் வளர்த்தப் பட்டிருக்கும் கட்டிலின் மேலே கட்டப் பட்டிருக்கும் வெள்ளைத்துணியின் மேல் அமர்ந்துகொண்டு வேடிக்கை பார்ப்பது மட்டுமே அவளால் தற்போது இயலுமான காரியமாகி விட்டது.

அவள் பெற்றெடுத்த நான்கு பிள்ளைகளில் மூன்று பேர் வெளிநாட்டில் உள்ளனர். சிவா மாத்திரமே இங்கிருக்கிறான். அவனும் வருகின்ற மாதம் வெளிநாடுபோவதாக உத்தேசம். வெளிநாட்டிலுள்ள மூவரும் அவளது இறப்புக்கு கையடக்கத் தொலைபேசியில் அனுதாபம் தெரிவித்திருந்தனர். நாட்டு நிலைமை சீரான பின்னரும்கூட அவர்கள் வாழும் நாட்டில் அவர்களுக்குள்ள வேலைப்பழு காரணமாக வரமுடியாதாம். அவர்கள் வந்துதான் என்ன செய்துவிடப் போகின்றார்கள்...?

பத்து மாதம் சுமந்து பெற்று வளர்த்த தாயை அந்தரத்தில் தவிக்க விட்டு, வெளிநாட்டு மோகத்தில் மயங்கி வாழும் அவர்கள், அவள் உயிருடன்இருக்கும்போது பார்க்க வந்திருக்கலாம். அப்படி வந்திருந்தாலாவது செல்வியின் மனம் ஆறியிருக்கும். ஆயிரம், இரண்டாயிரம் என்று மாதாமாதம் காசு அனுப்பினால் மட்டும் போதும் என்பது அவர்களின் எண்ணம். பெற்றெடுத்து அன்பையும் ஆதரவையும் அள்ளி வழங்கி, தனக்கென்று வாழாது, தனது பிள்ளைகளுக்காகவே வாழ்ந்த தாய்க்கு, காசு கொடுத்துக் கணக்குத்தீர்க்க எண்ணுவது எவ்வளவு பிழை என்பதனை இவர்கள் எப்போதும் உணர மாட்டார்கள்.

வெளிநாட்டிலுள்ள தனது மூன்று பிள்ளைகள் பற்றி எண்ணிய அவளுக்கு அருகிலிருந்தும் அவளை ஒரு வேண்டா வெறுப்பான பொருளாக எண்ணும் கடைசி மகன் சிவாவை பற்றிய எண்ணம் வரவே அவளுக்கு சிரிப்புத்தான் வந்தது. எவ்வளவுதான் அருகிலிருந்தாலும் அவளுக்கு வருத்தமென்றால் எட்டிப் பார்ப்பதற்குக்கூட சாட்டுக்கூறும் ஜென்மமாக அவன். தனது இருபதாவது வயதில் காதலித்துக் கலியாணம் செய்து கொண்ட சிவா, மனைவி சொல்லே மந்திரவார்த்தை என்று மாறிப்போயிருந்தான். மனைவி சொல்லை மந்திரவாக்காக் கருதி பெற்ற தாயை எட்டிப்பார்க்கவே சங்கடப்படுவான்.

செல்வி தனது பிள்ளைகள் நால்வரையும் வளர்க்க பட்டபாடு கடவுள் ஒருவருக்கே வெளிச்சம். குடிகாரக் கணவன் தான் குடித்துக்கொண்டும், கூத்தாடிக்கொண்டும் திரிவதற்கே அவனது உழைப்புச் சரியாகிவிடும். இந்நிலையில் பிள்ளைகளின் சாப்பாடு, படிப்பு இதற்கெல்லாம் யாரிடம் கேட்பது..? எங்கே போவது..? காலையில் அப்பம் சுட்டு விற்பதும், மாலையில் அயலண்டையில் மாவிடித்துக்கொடுப்பதும்....இதுவே செல்வியின் பிழைப்பு.

செல்வி மாடாய் உழைத்து ஓடாய்த் தேய்ந்தாலும், குமாருக்கு அதைப்பற்றி சிறிதளவு கவலையும் இல்லை. அலுத்துக் களைத்து வரும் செல்வி இரவு வேளைகளில் குமாரின் இம்சைகளை தாங்கி தன்னையும் தன் ஆரோக்கி யத்தையும்இழந்துவரலானாள். ஒருநாள் மாலையில் மாவிடிக்கச் சென்ற செல்வி இரவு ஏழு மணிக்கே வீடுவந்து சேர்ந்தாள். அங்கு அவளது கணவன் குமார் குடித்துவிட்டு வீட்டுச்சாமான் களையும் உடைத்து நொறுக்கி வைத்திருந்தான். அவளைக் கண்டவுடன்,

''எடியேய்... எங்கடி தொலைஞ்சனி...? எவன் உன்ற கள்ளப் புருசன்...? எவனோட...?'' என்று தொடங்கி தகாத வார்த்தைகளால் அவளை தூஷித்ததுடன், அவளையும் அடித்து உதைத்தான். மூத்தவன்இதைக்கண்டு தன் தகப்பனையே அடிக்கத் துணிந்து விட்டான். குடும்பமே யுத்தகளமாக மாறிவிட்டது.

எல்லாவற்றையும் சமாளித்து, கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என்ற பழமொழிக்கிணங்க மௌனியாக வாழப்பழகிவிட்டிருந்தாள் செல்வி. எல்லாமே தனது பிள்ளை களின் நல்வாழ்வு ஒன்றுக்காகத்தான்...!

குடும்பம், பிள்ளைகளின் நலனுக்காக உழைத்து



உழைத்தே அவளது நல்வாழ்வைத் தொலைத்து விட்டிருந்தாள் செல்வி. பெண் என்பவள் எத்தனை பொறுப்புக்கள் உடைய வளாகின்றாள்...! விடியற் காலை முதல்இரவு பத்து பதினொரு மணிவரை ஓய்வின்றி உழைத்து, கணவனுக்குச் சேவை செய்யும் சேவகியாய், பிள்ளைகளை ஒன்றன் பின் ஒன்றாக அவஸ்தைகள் வலிகளைத் தாங்கி பெற்றெடுத்து, அவர்கள் நல்லபடி வளர உரமாகி, கணவனது உறவுகளின் பேச்சுக்களுக்கு முகஞ்சுழியாது பணிந்து நடந்து, காலம் முழுதும் தியாகியாக வாழும் நிலைமை பெண்களுக்கான வரமா..? பெண்ணென்ற காரணத்தால் இயந்திரமாய் வாழவேண்டிய நிர்ப்பந்தமா..? இயந்திரங்கள் பழுதானால் அதனை திருத்தி புதுப்பித்துப் பயன்படுத்துவர். ஆனால்.... செல்வியின் நிலை..? என்னதான் நோய் வந்தாலும் அவளுக்கு ஒரு நாள் ஓய்வு உண்டா...? ''அல்லும் பகலும் எமக்காக உழைக்கிறாளே...! அவளுக்காக நாம் என்ன செய்தோம்...?'' என்ற எண்ணம் அவளது கணவனுக்கு ஒருநாளாவது வந்திருக்கின்றதா..? பெருமூச்சு விட்டபடி, அவளது ஏக்கங்கள் மட்டும் விரைகின்றது.

இனி என்ன..? எல்லாம் ஒரு நொடியில் முடிந்துவிட்டது. ஆட்டம் நின்றுவிட்டது. அவள் ''என் நிலைமை எந்தப் பெண் ணுக்கும் வரக்கூடாது'' என்று கடவுளை வேண்டியவளாய் நடப்பதெல்லாவற்றையும் ஒரு சாட்சியாய்இருந்து பார்த்தபடி இருக்கின்றாள்.

''பொம்மலாட்டம் என்றேஇரு பொல்லா உடலை
அடர்ந்த சந்தைக்கூட்டம் என்றேஇரு சுற்றத்தை
வாழ்வை குடங்கவிழ் நீரின் ஓட்டமென்றேஇரு
மனமே உனக்குபதேசம் இதே''

என்ற பாடல் வரிகளை நினைத்துக் கொள்கிறாள் செல்வி. யார் எப்படி இருந்தால் என்ன? எனது கடமைகளை சரியாகச் செய்வதில் தானே சந்தோசம்.இது தான் செல்வி வாழ்ந்த வாழ்வு.

பெட்டியெல்லாம் வந்தாயிற்று. எரிப்பதா..? புதைப்பதா..? என்ற சலசலப்பு செல்வியின் மகன், கணவன், மற்றும் உறவினர் மத்தியில் ஏற்பட்டிருந்தது. கடைசியில் மகன் சிவா

''அம்மாவின் விருப்பம் எரிப்பதுதான்'' எனக் கூறிய பின், எரிப்பதென்று முடிவெடுக்கப்பட்டது. அவளது உடலைக் கழுவி, அலங்கரித்தனர். திருமணத்தின்போது கட்டிய கூரைச் சேலை, நெற்றியில் குங்குமம், நகைகள், ...அடடா...! செல்விக்கு தன்னுடைய உடலாஇது என்று நம்பமுடியாத பிரமிப்பு.

ஐயரின் மந்திரவொலி, தொடர்ந்து சுண்ணம் இடித்துப் பாடல் பாட சம்பிரதாயங்கள் எல்லாம் நிறைவு பெற்றன. மரண அறிவித்தல் நோட்டீஸ் எல்லோருக்கும் வழங்கப்பட்டது. மரண ஊர்வலம் மெல்ல நகர ஆரம்பித்தது. உறவினர், அயலவர் எல்லோரும் நகர செல்வி அவளது உடலின் பிரிவைத் தாங்கமாட்டாது குமுறி அழுதாள். அவளது உடலுள் உயிர் இருக்கும்போதே அவளுடைய அழுகைக்கு செவிசாய்க் காதவர்கள், இப்போது செவிசாய்ப்பார்களா...? அவளது அழுகை யாருக்குத்தான் கேட்கும்....?

இனி நடப்பதற்கு என்னஇருக்கிறது...? செல்வியின் உடல் அக்கினியுடன் சங்கமமாகி முப்பது நாட்கள் ஓடிப் போயின.இறை ஜோதியுள் அவளது உயிர் கலக்கும் என எதிர்பார்த்துக் காத்திருந்து சோர்ந்து போய்விட்டாள் செல்வி. இறப்பின் பின்னரும் தெய்வம் கூட தன்னை நேசிக்கவில்லை என்று எண்ணி வெந்துளம் நொந்தாள்.

மூன்று, எட்டு முப்பத்தொன்று என்று அம்மாவுக்கு விருப்பமான உணவுகளை படைக்க வேண்டுமென்று பெரும் பாடுபட்டு அவளது கடைசிமகன் மருமகள் இருவரும் உணவு சமைத்துப் படைத்து அவற்றை உறவினரோடும் அயலவரோடும் உண்டு மகிழ்ந்தனர். எப்படியோ எல்லோரும் நன்றாய் இருக்கட்டும் என அவள் மனம் வாழ்த்தியது. அது தவிர இனி அவளால் என்ன செய்ய முடியும்...?

செல்வி அவளுக்கு இறைவனால் இனி விடுக்கப் பட்டுள்ள கட்டளையை எதிர்பார்த்துக் காத்திருந்தாள்.... நீண்ட பொழுதுகள் அங்கும்இங்கும் அலைந்தாள்.

பேரொளி வருமென காத்துக் காத்து இருந்த செல்வியை ஓர்இருட்டு அறையுள் திடீரெனஇழுத்துச்சென்று அடைத்த உணர்வு. ''யார்...? நான் எங்கே இருக்கின்றேன்...?'' ஒரு நொடியில் அவளுக்கு எல்லாம் விளங்கி விட்டது. ஒரு பெண்ணின் வயிற்றில் மீண்டும் கருவுக்குள் உயிராகி விட்டது செல்வியின் ஆன்மா. அதுவே இறைவன் அவளுக்கு விதித்த விதியென நினைத்துக் கொண்டாள்.

செல்வியின் ஆன்மாவை தன் வயிற்றில் தாங்கியுள்ள தாயானவள் தனது வயிற்றினுள் ஐந்து மாதங்கள் சுமந்து கொண்டிருந்த வேளை தனது வயிற்றினுள் இருப்பது ஆணா? பெண்ணா? என ஸ்கானிங் செய்ததில் ஓர் உண்மை தெரிய வந்தது.

''மீண்டும் நான் ஒரு பெண்குழந்தையா... ?'' உறைந்து போனது செல்வியின் ஆன்மா. ''மீண்டும் நான் பெண்ணாகவா? இந்த சீர் கெட்ட சமூகத்திலா..? வேண்டாம்...! இறைவா...!'' உள்ளே அழுதது செல்வியின் ஆன்மா.

யாரோ அவளை வருடுவதாய் உணர்ந்து திடுக்கிட்டாள் செல்வி. அது வேறுயாருமில்லை. அவளது ஆன்மாவை வயிற்றினுள் சுமக்கும் தாயும், தந்தையும் தான்.

# கடுகு குறுங்கதை



## வெறுமை

ஒரு துறவியிடம் அவரது சீடன்...
“குருவே என் மனதில் எதுவுமே இல்லை
யென்றால் நானென்ன செய்வது? ”
என்றான். குரு முகத்தில் புன்னகையுடன்,
“அதைத் தூக்கி எறிந்து விடு” என்றார்.
மீண்டும் அவன்
“என்னிடம் தான் எதுவும் இல்லையே..?
எப்படி தூக்கி எறிவது” என்றான்.
குரு மீண்டும், அதே புன்னகையுடன்..
“சரி.. சரி...அப்படியானால் நீயே அதை
வைத்துக் கொள்” என்றார்.
சீடனின் புரிந்து கொள்ளாத முகம்...
“நாம் இல்லாத ஒன்றை இருப்பதாகவும்,
இருப்பதை இல்லாததாகவும் கருதிக்
கொண்டு வாழ்கின்றோம்.” என்றார் குரு.
இப்போது சீடன் முகத்திலும்
புன்னகை பூத்தது.

**திருமலை சுந்தா**



**புதுமைப்பித்தன் தன்னை விமர்சித்தவர்களுக்கு அளித்த பதில்**

“வேதாந்திகள் கைக்குள் சிக்காத கடவுள் மாதிரித்தான் நான் பிறப்பித்துவிட்டவைகளும். அவை உங்கள் அளவுகோல்களுக்குள் அடைபடாதிருந்தால் நானும் பொறுப்பாளியல்ல, நான் பிறப்பித்து விளையாடவிட்ட ஜீவராசிகளும் பொறுப்பாளிகளல்ல உங்கள் அளவுகோல்களைத்தான் என் கதைகளின் அருகில் வைத்து அளந்து பார்த்துக் கொள்கிறீர்கள் என்று உங்களுக்குச் சொல்லிவிட விரும்புகிறேன்.”



# சுயநலம்

**- உரும்பிராய் எம்.ரி.செல்வராஜா**

**கொ**ஞ்ச நேரத்திற்குள் வீடே அல்லோல கல்லோலப் பட்டுவிட்டது. வேலை முடிந்து களைப்புடன் வந்த காஞ்சனா மலசலகூடத்திற்கு முன்னால் இருந்த ஈரமான நிலத்தைக் கண்டவுடன் தனது ஒரே மகள் கல்பிதா மீது எரிந்து விழுந்தாள். ஏழு வயதான கல்பிதாவுக்கு தாயின் திடீர் கோபத்தைக் கண்டவுடன் கண்கள் இரண்டும் கலங்கிவிட்டன. தனக்கு அதுபற்றி எதுவுமே தெரியாது என்று கூறிவிட்டு பலமாக அழத்தொடங்கிவிட்டாள். அவளுக்கு அதனைப்பற்றி எதுவும் தெரியாது விட்டால் அந்த வீட்டில் அவர்களுடன் வசிக்கும் காஞ்சனாவினுடைய மாமா, மாமிக்குக் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும் என்று தன் மனதிற்குள் எண்ணினாள் காஞ்சனா. ஆனால் அவர்களிடம் அதுபற்றி அப்போது எதுவும் கேட்க விரும்பவில்லை. தனது கணவன் குமார் வேலை முடிந்து வீட்டிற்கு வரும்வரை அதனைப்பற்றி அவர்களிடம் எதுவுமே பேசுவதில்லை என்று முடிவு செய்துவிட்டு தனது அறையினுள் சென்றுவிட்டாள்.

இப்படியாக மருமகள் வேலை முடிந்து வந்ததும் அந்த ஈரமான நிலத்தைப் பார்த்துவிட்டுத் தமது பேத்தி கல்பிதாவுடன் பேசியவை எல்லாவற்றையும் தமது அறையினுள் இருந்துகொண்டே குமாரின் தந்தையும் தாயும் கேட்டுக்கொண்டுதான் இருந்தார்கள். ஆனால் வெளியே வந்து அதுபற்றி மருமகள் காஞ்சனாவுடன் பேசுவதற்கான துணிவு அவர்களுக்கு அப்போது வரவில்லை. அண்மைக்காலமாக அவர்களுக்கு மருமகள் காஞ்சனாவோடு சாதாரண விடயங்களைப் பேசுவதற்குக் கூடச் சற்றுத் தயக்கமாகவே இருந்துவருகிறது.

காஞ்சனாவின் அம்மாவும் அப்பாவும் காஞ்சனா திருமணமாவதற்கு முன்னரே இறந்துபோய்விட்டனர். காஞ்சனா கல்பிதாவை வயிற்றில் சுமந்துகொண்டு இருந்தபோதுதான் குமாரின் தந்தையும் தாயும் இங்கு வந்தார்கள். தாயில்லாத பெண், தலைப்பிள்ளை பிறக்கும்போது அருகில் இருந்தால் உதவியாக இருக்கும் என்று குமாரும், காஞ்சனாவும்தான் அவர்களை இங்கே வரவழைத்தனர். ஆரம்பத்தில் கணவனின் பெற்றோரை, தன்னைப் பெற்ற தாய் தந்தையைப் போலவும், குமாரின் பெற்றோரும் காஞ்சனாவை தமது சொந்த மகள்போலவும் ஒருவருக்கொருவர் அன்பாகவும், ஒத்தாசையாகவும் இருந்துவந்தார்கள். ஆனால் அண்மைக்காலமாக காஞ்சனாவின் போக்கிலே எதிர்பாராத மாற்றங்கள் காணப்பட்டன. சிறுசிறு விடயங்களுக்கெல்லாம் அவர்கள்மீது எரிந்து விழுந்தாள். அதனால் எப்போதும் அவர்கள் காஞ்சனாவோடு தொடர்பான விடயங்களுக்கெல்லாம் ஓர் அடி சற்றுத் தள்ளியே நின்றனர்.

மூன்று அறைகள் கொண்ட வீட்டின் மேல்மாடியில் இவர்க ளுடைய படுக்கை அறைகளும் அருகருகேதான் அமைந்தி ருந்தன. வேலையால் வந்த காஞ்சனா அங்கிருந்த ஈர நிலத்தைக் கண்டுவிட்டு தனது மகளுடன் கதைத்தபின்னர் அறையைவிட்டு வெளியே வரவேயில்லை. உள்ளே கல்பிதா இடைக்கிடையே செல்லமாக அழுவது பக்கத்து அறையினுள் இருந்த குமாரின் அப்பா அம்மாவிற்குக் கேட்டபோதும் அவர்களும் வெளியே வரவேயில்லை.

அன்று குமாருக்கு அவன் வேலை பார்க்கும் காரியாலயத்திலே ஒரு சிறு பதவி உயர்வு கிடைத்தது. இது எதிர்பார்த்த பதவி உயர்வுதான் என்றாலும் அதனை சந்தோசமாகக் கொண்டாடுவதற்காக கடைக்குச் சென்று ஒரு விஸ்கிப் போத்தலும் வாங்கிக்கொண்டு நண்பர்களுடன் கதைத்துவிட்டு வீட்டிற்கு வரும்போது இரவு எட்டு மணிக்குமேல் ஆகிவிட்டது. குமார் வீட்டிற்குள் வரும்போதே மகளின் பெயரை முதலிலும் பின்னர் மனைவியின் பெயரையும் சற்று உரத்துக் கூப்பிட்டபடியே வந்தான். ஆனால் வீடு ஒரே அமைதியாக இருந்தது. நேரே குசினிக்குள் சென்று மனைவி என்ன சமைத்து வைத்திருக்கிறாள் என்று பார்த்தவன் அங்கே எதுவித சாப்பாடுகளையும் சமைக்காததைக் கண்டு சிறிது ஏமாற்றம் அடைந்தாலும் வெளியில் காட்டிக்கொள்ளவில்லை.

இப்படி இடையிடையே வீட்டில் சமைக்காது விடுவதும், வெளியிலிருந்து சாப்பாடு எடுத்துச் சாப்பிடுவதும் ஒன்றும் புதிதல்ல. அப்படியான வேளைகளில் காஞ்சனா கணவனுக்குத் தொலைபேசி அழைப்புச்செய்து என்ன என்ன வாங்கி வரவேண்டும் என்று முன்னரே சொல்லிவிடுவாள். ஆனால் அன்று அப்படிச் செய்யவில்லை. தந்தையின் வரவைக் கண்டவுடன் கல்பிதா உடனே கீழே இறங்கி ஓடிவந்துவிட்டாள். 'அம்மாவிற்குத் தலையிடி அதனால்தான் ஒன்றும் சமைக்கவில்லை' என்று கல்பிதா கூறியதும் உடனே இருவரும் உணவு வாங்கிவருவதற்காக வெளியே சென்று விட்டார்கள்.

அரை மணி நேரம் கழிந்திருக்கும் தந்தையும், மகளுமாக இலங்கை, இந்திய, ஆங்கிலேய உணவு வகைக ளுடன் வீட்டிற்குள் நுழைந்தார்கள். கல்பிதா வீட்டிற்குள் வரும்போதே தனக்கென வாங்கிய கோழிக்கால் ஒன்றைக் கையில் பிடித்துக் கடித்தபடியேதான் வந்தாள்.

அப்போது கூட யாரையும் கீழே காணவில்லை. வந்ததும் வராததுமாக எல்லோரையும் கீழே இறங்கி வந்து சாப்பிடுமாறு கூறிவிட்டுத் தான் வாங்கி வந்த விஸ்கிப் போத்தலைத் திறந்து ஒரு மிடறு அருந்தினான். சிறிது நேரத்தில் காஞ்சனா கலைந்த கேசத்துடனும், கலங்கிய கண்களுடனும் கீழே இறங்கிவந்தாள். கணவன் என்ன வாங்கி வந்திருக்கிறார் என்று பார்த்துவிட்டு எதுவுமே பேசாது சாப்பாட்டு மேசையின் ஒரு கரையில் அமர்ந்துகொண்டு கணவனையே பார்த்துக்கொண்டிருந்தாள். மேசையின் மறு கரையில் மதுப்போத்தலுடனும், அன்று காலை வந்திருந்த கடிதங்களை உடைத்து வாசித்தபடியேயும் இருந்த குமார் காஞ்சனாவை நிமிர்ந்துகூடப் பார்க்கவில்லை. கடிதங்களைப் பார்த்தபடியே 'எனக்கு இன்றைக்கு ஒரு நல்ல செய்தி, எனது காரியாலயத்திலே எனக்குப் பதவி உயர்வு கிடைத்தது. அதனால்தான் இதனை வாங்கினேன்' என்றான்.

காஞ்சனா எதுவுமே பேசாது எழுந்து குசினிக்குள் சென்றுவிட்டாள். குமார் அதுவரை தனது அப்பா, அம்மா கீழே இறங்கி வராததைக்கண்டு மீண்டும் தனது மகளிடம் 'கல்பிதா குஞ்சு, பாட்டா, பாட்டியை கீழே வரச் சொல்லுங்கோ' என்றான்.

கல்பிதா ஒரு கையில் தான் கடித்துக்கொண்டிருந்த கோழிக்காலுடன் எழுந்து சென்று உரத்த குரலில் 'பாட்டா, பாட்டி டின்னர் ரெடி கீழே வாங்கோ' என்று தனக்குத் தெரிந்த தமிழில் கூறிவிட்டுத் திரும்பவும் வந்து தான் முன்னர் இருந்த இடத்தில் அமர்ந்துகொண்டாள்.

நேரம் ஓடிக்கொண்டிருந்தது ஆனால் யாருமே கீழே இறங்கி வரவில்லை. குமார் திடீரென எழுந்து மேலே சென்றான். காஞ்சனா கீழே இருந்தபடியே மேலே என்ன நடக்கிறது, என்ன பேசுகிறார்கள் என்று தனது காதுகளைக் கூர்மையாக வைத்துக்கொண்டிருந்தாள். படியேறிச் சென்ற குமார் தாய் தந்தையர் இருந்த அறைக்குள் போகும் சத்தம் கேட்டது. ஏதோ அவர்கள் கதைப்பது கேட்டது ஆனால் தெளிவில்லை. சிறிது நேரத்தின் பின்னர் குமார் மட்டும் இறங்கி வந்தான். 'அம்மாவிற்கு ஒரே தலைவலியாம் நாளைக் காலையில் டாக்டரிடம் அழைத்துச் செல்லவேண்டும்' என்றான்.

காஞ்சனா எதுவுமே பேசாமல் சிறிதுநேரம் இருந்து விட்டு 'உங்களுக்கு வேலையிடத்தில் ஒரு நல்ல செய்தி கிடைத்தது ஆனால் எனக்கு வீட்டிலே ஒரு கூடாத செய்தி கிடைத்தது' என்று கூறியபடி குசினிக்குள் இருந்து வந்தாள் காஞ்சனா.

'வீட்டிலே உமக்கு என்ன கூடாத செய்தி கிடைத்தது?' என்றான் சிறிது உதாரமாக.

'அதுகளிலே உங்களுக்கு அக்கறை இருந்தால்தானே. நான் எத்தனை நாட்களுக்கென்று இவைகளைச் சமாளிக்கிறது?' என்றாள் இலேசாக அழுதபடி. அப்போதுதான் குமாருக்குச் சிறிது சந்தேகம் வரத்தொடங்கியது. மெதுவாக நிமிர்ந்து மனைவியைப் பார்த்தான். வீட்டில் தனக்குத்தெரியாமல் ஏதே நடந்திருக்கிறது. அதனால்தான் மனைவி சமைக்கவில்லை என்றும், தந்தையார் தமக்குப் பசியில்லை, தலையிடி என்று கூறியது உண்மையல்ல என்றும் குமாருக்குப் பட்டது.

'வீட்டிலே என்ன நடந்தது? என்று எனக்குக் கூறினால்தானே எனக்கும் தெரியும்'. என்றான் குமார்.

'இந்த வீடு திருத்தி இன்னும் ஒரு வருடம் கூட ஆகவில்லை. மேலே போய்ப்பாருங்கள். பாத்ரூமுக்குள் போக முடியாதபடி அதற்கு முன்னால் ஒரே ஈரமாக இருக்கிறது. என்ன நடந்ததென்று அதனை ஈரமாக்கியவர்களைத்தான் கேட்க வேணும்' என்று குமாரின் தாய் தந்தையரைப் பட்டும் படாமலும் குற்றம் சாட்டினாள்.

இவற்றைக் கேட்டதும் எதுவும் பேசாமல் இருந்த கல்பிதா கடித்துக்கொண்டிருந்த கோழிக்காலை வைத்துவிட்டு தாயையும், தந்தையையும் மாறிப் பார்த்தாள். 'அது ஒன்று

மில்லை அம்மா. சிறிதளவு ஈரம்தான் இருந்தது, அதை விட்டுவிடுங்கள் அம்மா' என்றாள் ஆங்கிலத்தில்.

'நீ பேசாமல் இரு. நானும் அப்பாவும் கதைக்கும்போது குறுக்கே பேசவேண்டாம் என்று உனக்கு எத்தனை நாள் கூறியிருக்கிறேன்' என்று சற்று உரக்கக் கத்திப் பேசினாள் காஞ்சனா.

'ஏன் கத்துகிறாய்? நான் பக்கத்திலேதானே இருக்கிறேன்'

'அப்படி என்றால் இனிமேல் என்னைக் கத்திப் பேசும்படி வைக்கவேண்டாம்'

'நான் வேலையால் வந்தவுடன் கேட்டேன் ஆனால் இதுவரை யாரும் பதில் கூறவில்லை. அறையைப் பூட்டிப்போட்டு இருந்தால் செய்த குற்றம் போய்விடுமா?'

'சிறிய ஈரம் என்றால் நாளைக்குப் போய்விடும் அதற்காக ஏன் அதை ஒரு பிரச்சனையாக்குகிறீர்?

'இப்போ இந்த வீட்டில் நான்தான் பிரச்சனைகளைக் கிளப்புகிறேன் என்றால் நீங்கள் எல்லோரும் இங்கே இருங்கோ நான் வேறு எங்காவது போய் இருக்கிறேன்' என்றாள் காஞ்சனா.

'யார் உம்மை அப்படிக் கூறியது? மனதிலே ஒன்றை வைத்துக்கொண்டு மறைமுகமாகக் குத்துக்கதை போட்டுக் கதைப்பதுதான் எனக்குப் பிடிக்கிறதில்லை. எனது அப்பா அம்மாதான் அப்படிச் செய்தார் என்பதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது? எத்தனையோ விதமாக அதிலே ஈரம் பிடித்திருக் கலாம்' என்றான் குமார் சற்றுக் கோபமாக.

'உள்ளுக்கே விஸ்கி போனவுடன் கோபம் வந்துட்டுது. அம்மா, அப்பாவை நான் ஒரு குறையும் சொல்லக்கூடாது. அவை என்ன செய்தாலும் நான் வாயை இறுக மூடிக்கொண்டு இருக்கவேணும். இந்த வீட்டுக்கு யார் வீட்டுக்காரி?'

'ஒரு சின்ன விசயத்திற்கு இப்படிக் கதைக்கிறீர்? ஊரிலை இருந்தபோது வீட்டிலே ஈரம் படாமல் இருந்திருப்பீரே? அப்படித்தான் அவர்கள் ஏதாவது செய்திருந்தாலும் அதைப் பெரிதாக எடுக்கக்கூடாது. வயதுபோன காலத்திலே அம்மா, அப்பாவை எங்கே போறது? நாங்கள்தானே அவர்களுக்கு ஆதரவாக இருக்கவேணும். கதைப்பதைக் கொஞ்சம் யோசித்துக் கதையும்'

'இதிலை யோசிக்கிறதிலை ஒன்றுமில்லை. இலண்ட னுக்கு வந்த பிறகும் நெடுகலும் ஊர்க்கதைதான். இலண்டனிலை எல்லாரும் தங்கடை பிள்ளையளோடையே இருக்கினம்? கலியாணம் செய்து கொடுத்தபிறகும் பிள்ளையோடை ஒட்டிக் கொண்டிருக்க வேணும் எண்டால் என்ன செய்யிறது? எனக்கு இன்றைக்கு ஒரு முடிவு வேணும். இனிமேலும் என்னாலே பொறுக்க முடியாது' என்று விடாப்பிடியாக இருந்தாள் காஞ்சனா.

காஞ்சனா கதைத்து முடிப்பதற்கு முன்னரே அவளது கன்னத்தில் பளார்! என்று ஓர் அடி விழுந்தது. யாரும் எதிர் பார்க்கவில்லை. கல்பிதா திடுக்குற்றவளாக நிமிர்ந்து தாயைப் பார்த்தாள். காஞ்சனாவும் இதனை எதிர்பார்க்கவில்லை. எங்கேயோ பார்க்கத் திரும்பியவள் அடி விழுந்ததும் குமாரின் பக்கம் திரும்பினாள். அவனருகில் அவனது தந்தையார் திகைத்தவர்போல் நின்றுகொண்டிருந்தார். குமாருக்கு கைகளும், கால்களும் ஒரேவேளையில் பதறிக்கொண்டிருந்தன.



கீழே மகனுக்கும் மருமகளுக்கும் ஏதோ வாக்குவாதம் நடைபெறுவதை உணர்ந்த குமாரின் தாயார்தான் அவனது தந்தையாரை அந்த ஈரம் எப்படி வந்தது, அதனை இல்லாமல் செய்வதற்கு என்ன செய்தார்கள் என்ற விபரங்களைக் கூறிவிட்டு, பசிக்கின்ற வயிற்றிற்கு மகன் வாங்கிவந்த உணவில் ஒரு பகுதியை எடுத்துவருமாறும் கூறிக் கீழே அனுப்பிவைத்தார். அதே வேளையில்தான் மகனுக்கும் மருமகளுக்கும் வாய்ச்சண்டை முற்ற, எதிர்பாராதவிதமாக குமார் காஞ்சனாவின் கன்னத்தில் அறைந்தும் விட்டான்.

திருமணம் செய்த நாள் முதலாக குமார் காஞ்சனாவிற்கு ஒருபோதும் கைநீட்டியதில்லை. இன்றுகூட அவன் அதனைச் செய்வான் என்று எதிர்பார்க்கவில்லை. அதற்கு அவன் அருந்திய மதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். அது எப்படியோ நடந்துவிட்டது. அதனால்தான் குமாரின் தந்தையார் பேயறைந்தவர்போல் ஆகிவிட்டிருந்தார். காஞ்சனா சிறிதுநேரம் அசையாது நின்றுகொண்டிருந்தாள். அழுகை ஒருபுறம் ஆத்திரம் ஒருபுறமாக வந்தது. எதுவுமே பேசாது விறுவிறு என்று படியேறித் தனது படுக்கையறையுள் புகுந்து கதவை உட்புறமாகப் பூட்டுவது கேட்டது

குமாருக்கு இன்னமும் கோபம் ஆறவில்லை. ஆனால் அதேவேளையில் சிறிது பயமாகவும் இருந்து. திடீரென்று குமாரும் மேலே சென்று காஞ்சனா படுத்திருந்த அறைக் கதவைத் திறக்குமாறு கதவிலே பலமாகத் தட்டினான். ஆனால் காஞ்சனாவோ கதவைத் திறக்கவில்லை. ஆனால் உள்ளே இருந்துகொண்டே 'என்னோடு இனிமேல் பேசவேண்டாம். அம்மா அப்பா அருகிலே இருக்கிறார்கள் என்ற துணிவில்தானே எனக்குக் கைநீட்டி அடித்தீர்?' என்றாள்.

'மறுபடியும் அம்மா, அப்பாவின் பெயரைக் கூற வேண்டாம் . இது எனது வீடு இங்கே யார் வேணுமென்றாலும் இருக்கலாம்' என்று கூறிவிட்டு அவள் கூறிய ஈரமான இடத்தைத் தேடினான்.

அதனைக் கண்டு பிடிப்பதே கடினமாக இருந்தது. அவ்வளவு சிறிதாக இருந்தது. இதற்குத்தானா இவ்வளவு பிரச்சனைகளும்? என்று தனக்குத்தானே ஒரு கேள்வியையும் கேட்டுக்கொண்டான்.

கடந்த சில வாரங்களாக குமாரின் அம்மாவிற்கு சிறுநீர் கழிப்பதே கடினமாக இருந்துவருகிறது. கழிவறைக்குச் செல்ல முன்னரே அவரால் அதனைக் கட்டுப்படுத்த முடியாமல் இருக்கும். டாக்டரிடம் காட்டியபோது வயதானவேளைகளில் உடலில் ஏற்படும் மாற்றங்களினால்தான் இப்படி வருகின்றது என்று அதற்கு மருந்துகள் கொடுத்தபோது தாயாருக்கு அதற்கான வசதிகளைச் செய்துகொடுக்குமாறும் அவர்களது குடும்ப வைத்தியர் அறிவுரை கூறினார்.

ஆனால் காஞ்சனாவோ அவர்களை தமது வீட்டில் வைத்திருக்க வேண்டாம் என்றும், வயோதிபர் இல்லத்திலே கொண்டுபோய் விடும்படியும் குமாரை வற்புறுத்திக்கொண்டே யிருந்தாள். ஆனால் குமார் அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. தனது தாயாரும் தந்தையாரும் அவர்களது கடைசிக்காலம்வரை தன்னுடன் தமது வீட்டிலேதான் இருக்கவேண்டும் என்று மனைவியிடம் கூறிவைத்திருந்தான். அதுமட்டுமல்ல நெடுநாட் களாகக் கீழே ஒரு கழிவறை கட்டவேண்டும் என்று கூறிக்கொண்டிருந்த காஞ்சனா இதனைக்கேட்டதும் அந்தக் கதையையே பேசுவதில்லை.

குமாரின் அப்பாவும், அம்மாவும் முதல் முதலாக வந்திறங்கியபோது விமான நிலையத்திலே அவர்களைக் கட்டித் தழுவியபடி நின்று எடுத்த புகைப்படம் ஒன்றைப் பெரிதாக்கி முன் அறையிலே தொங்கவிட்டிருந்தார்கள். ஆனால் அண்மைக் காலத்திலே வீட்டைத் திருத்தியபின் அந்தப் படம் அங்கே இருப்பது அழகில்லை என்று அகற்றி விட்டாள் காஞ்சனா. இப்படியாகச் சிறு சிறு விடயத்தில் கூட தனது வெறுப்பைக் காட்டுவதற்கு அவள் தயங்குவதில்லை.

தாயும் தந்தையும் தனியே வீட்டில் இருக்கும் வேளைகளில் கீழேயுள்ள வரவேற்பு அறையில்தான் இருப்பார் கள். திடீரென்று கழிவறைக்குச் செல்லவேண்டும் என்றால் படியேறி மேலே செல்லவேண்டும். அப்படிக் குமாரின் தாயாரால் இப்போதெல்லாம் விரைவாகப் படியேறிச் செல்ல முடியாது. அதற்காகத்தான் அவர்களுக்கு மேலே உள்ள கழிவறைக்குப் பக்கத்து அறையைக் கொடுத்திருந்தார்கள். ஆனால் அன்று கீழே இருந்து படியேறி மேலேயுள்ள கழிவறைக்குச் செல்ல முயன்றபோதுதான் அப்படி நடந்து நிலம் ஈரமாகிவிட்டது.

அன்று காஞ்சனா வேலையால் வந்தவுடன் கழிவறைக்கு முன்னால் இருந்த ஈரமான நிலத்தைக் கண்டவுடன் அது தனது மாமியாரால்தான் ஏற்பட்டிருக்கும் என்பது தெளிவாகியது. ஆனால் அவர்களை உடனே அழைத்துக் கேட்கும் துணிவு காஞ்சனாவிற்கு இன்னமும் வரவில்லை. அதனால்தான் தனது மகளுடன் எரிந்து விழுந்தாள். வேண்டுமென்றுதான் அன்று எதுவும் சமைக்காதும் விட்டிருந்தாள். இப்படியாக 'அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்' என்பது அவளுக்குத் தெரியாததல்ல.

இவையெல்லாம் நடந்தபின்னர் வீட்டிலே ஒரே அமைதி நிலவியது. காஞ்சனா அறையினுள், கல்பிதா சாப்பாட்டு மேசையில், தந்தையும் தாயும் தமது அறையினுள், குமார் வீடு முழுவதும் நடந்து திரிந்தான். தனது மனைவிக்குக் கைநீட்டி அடித்தது குமாருக்கே மன நிம்மதியைக் கலைத்துவிட்டிருந்தது. தனது சந்தோசத்தைக் கொண்டாட அருந்திய மது எல்லோருடைய சந்தோசத்தையும் குலைத்துவிட்டாதே என்றும் எண்ணினான்.

அன்று இரவு அந்த வீட்டிலே யாருமே நித்திரை கொள்ளவில்லை. இரவு எப்படியோ கழிந்தது. காலையில்தான் குமாருக்கும், தாய் தந்தைக்கும் தூக்கம் கண்களை வந்து சூழ்ந்தது. கண்ணயர்ந்த சில நிமிடத்திற்குள் மீண்டும் காஞ்சனா வின் சத்தம் கேட்டு எல்லோரும் எழுந்தனர். கல்பிதாவைப் பாடசாலைக்குச் செல்ல அவசர அவசரமாக ஆயத்தம் செய்து கொண்டிருந்தாள்.

அதேவேளையில் அன்றிரவு நடந்த நிகழ்வைப் பற்றியே திரும்பத்திரும்ப ஏதோவெல்லாம் பட்டும் படாமலும் பேசிக்கொண்டும் இருந்தாள். ஆனால் குமார் எதுவுமே பேசவில்லை. காஞ்சனா தான் காலையில் வேலைக்குச் செல்லும்போது மகள் கல்பிதாவையும் அழைத்துக்கொண்டு சென்று அவளது பாடசாலையில் விட்டுவிட்டுத்தான் செல்வாள். தினமும் வெளியில் போகும்போது எல்லோருக்கும் 'போய் வருகிறோம்' என்று சொல்லிவிட்டுச் செல்லும் காஞ்சனாவும், கல்பிதாவும் அன்று யாரிடமும் எதுவும் கூறாது வெளியே சென்றுவிட்டனர்.

சிறிது நேரத்தில் குமாரும் புறப்பட்டு வேலைக்குச் செல்வதாகக் கூறிவிட்டுச் சென்றுவிட்டான். மறுபடியும் வீட்டில் தாயாரும், தந்தையாரும் தனியே விடப்பட்டார்கள். குமாரின் தந்தை அரசாங்க உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றவர். தாயார் தாயகத்தில் பாடசாலை ஒன்றில் உப அதிபராக இருந்து ஓய்வு பெற்றவர்.

ஆனால் இலண்டனுக்கு வந்தநாள் தொடக்கம் தமக்குள்ள சுதந்திரம் பறிபோய்விட்டதைப் போலவே இருவரும் உணர்ந்தனர்.

ஆரம்பத்தில் அன்பாக இருந்த மருமகள் காஞ்சனா காலம் செல்லச்செல்ல தனது சுயநலத்திலேயே கவனமாக இருந்தாள். மாமா மாமி என்ற மரியாதைகூடச் சில வேளைகளில்

செய்வதில்லை. வேண்டுமென்றே புறக்கணிப்பதாக குமாரின் தாய் தந்தையருக்குப் பட்டது.

மகனும் மருமகளும், பேரப்பிள்ளையும் வீட்டைவிட்டுச் சென்றபின்னர் அவர்களுக்கு வீட்டிலே இருக்கவே பிடிக்க வில்லை. தந்தையார் சில மணி நேரமாக இருந்த இடத்திலேயே இருந்தபடி மிகவும் ஆழமாக யோசித்துக்கொண்டிருந்தார். திடீரென்று ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவராய் எழுந்தார். தனக்குத் தெரிந்த ஒரு நண்பரை அழைத்து தாயகத்திற்குச் செல்வதற்கு இரண்டு விமானச் சீட்டுக்கள் எவ்வளவு விரைவில் தர முடியுமோ அவ்வளவு விரைவில் எடுத்துத் தருமாறு அவரிடம் கூறினார்.

'நாம் இனிமேலும் இங்கே இருப்பதில் யாருக்கும் இலாபமில்லை. எமக்கும் சந்தோசமில்லை, அவர்களுக்கும் சந்தோசமில்லை. காஞ்சனா தாம் தனியாக இருக்கவேண்டும் என்று நினைப்பதில் தவறில்லை. அதற்கு ஒரே வழி நாம் இங்கிருந்து எமக்கு விருப்பமான இடத்திற்குப் பேவதுதான்' என்றார். தாயார் எதுவுமே பேசவில்லை.

மீண்டும் அவரே பேசினார். 'நாங்கள் இருந்த வீடு இப்போதும் நல்ல நிலையில்தான் இருக்கிறது. அவற்றைப் பார்ப்பதற்குக்கூட ஆட்களில்லை. எல்லோரும் நாட்டை விட்டு விட்டு பிள்ளைகளுடன் இருக்கப் போகிறோம் என்று கூறிவிட்டு வருகிறார்கள். ஆனால் இங்கே வந்தபின்னர்தான் உண்மையான நிலமை எல்லோருக்கும் விளங்குகிறது. எத்தனைபேர் உண்மையிலே சந்தோசமாக இருக்கிறார்கள்? அரைவாசிக்கு மேற்பட்டோர் தாம் சந்தோசமாக இருப்பதாக நடிக்கிறார்கள்.

தாயகத்திற்கு விடுமுறையில் செல்லும்போது அங்குள் ளவர்களுக்கு தாம் ஏதோ சொர்க்கத்தில் வாழ்வதுபோல் உடைகளும், நகைகளும் அணிந்து காட்டுவதில் சிறு இன்பம் காண்கிறார்கள். மேல் நாட்டுப் பணத்தை தாய் நாட்டில் தாராளமாய் செலவு செய்து மகிழ்கிறார்கள். இவையெல்லாம் போலிக் கொளரவங்கள். எல்லோருக்கும் மேல்நாட்டு மோகம் வலுத்துவிட்டது. ஆணிவேராக இருந்த பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இந்த அற்ப ஆசைகளினால் தாம் பிறந்து வளர்ந்த மண்ணையும், வீட்டையும், மக்களையும் விட்டுவிட்டு மேல் நாடுகளில் போலி வாழ்க்கை வாழ்கிறார்கள். எம்மையும் சேர்த்துத்தான் கூறுகிறேன். எனக்கு அப்படியான வாழ்க்கையை வாழ இனிமேலும் மனம் விரும்பவில்லை. நாங்கள் போய் எமது வீட்டிலே, எமது மண்ணிலே, எமது மக்களோடு வாழ்வதுதான் நல்லதெனப் படுகிறது' என்றார்.

'ஒரு நாளும் கை நீட்டித் தன் மனைவிக்கு அடிக்காத குமார் அந்த நிலமைக்கும் வந்துவிட்டான். இதற்கு நாங்கள்தான் காரணம். பிள்ளையைப் பெற்றோம், வளர்த்தோம், அவனுக் கென்றொரு வாழ்க்கையை அமைத்துக் கொடுத்தோம். இனிமேலும் அவர்களின் தொடர்ச்சியான சந்தோசத்திற்கு நாங்கள் ஒருபோதும் தடையாக இருக்கக் கூடாது. வாழ்விலே இறுதிவரை துணையாக இருப்பது கணவனுக்கு மனைவியும், மனைவிக்குக் கணவனும்தான். பிள்ளைகள் எல்லாம் இடையிலே சிலகாலம்தான்' என்று கணவனின் எண்ணத்திற்கு இசைந்தவராக குமாரின் தாயாரும் கூறினார்.

தமது முடிவை அன்று மகனும் மருமகளும் வீட்டிற்கு வந்ததும் கூறுவதென முடிவு செய்தனர். இது அவர்களுக்கு அதிர்ச்சியைக் கொடுக்கலாம் ஆனால் காலப்போக்கில் அவை யெல்லாம் சாதாரணமாகிவிடும் என்றே இருவரும் எண்ணி னார்கள். இந்த முடிவுக்கு வந்தபின்னர் இருவர் முகங்களிலும் ஒருவித ஒளி படர்வதைப்போல் இருந்தது. இருவரும் பல நிமிட நேரம்வரை எதுவுமே பேசாது இருந்தனர்.

திடீரென்று தொலைபேசி மணி ஒலித்தது. மறுமுனை யிலிருந்து அவரது நண்பன் அடுத்த வாரமே இரண்டு விமானச் சீட்டுக்களைத் தரலாம் என்று கூறினார். உடனே மனைவியிடம் அதனைக் கூறினார். குமாரின் தந்தையின் உடலிலே புதிய இரத்தம் ஓடுவதைப்போல் இருந்தது. சுதந்திரப்பறவையாக வானவெளியில் பறப்பதைப்போல் இருந்தது. குமாரும், மருமகளும் வேலை முடிந்து வீட்டிற்கு வரும்வரை பொறுத்தி ருக்காது தமது முடிவை உடனேயே கூறுவதற்காக அவனது காரியாலய தொலைபேசி எண்களைத் தேடி எடுத்துத் தனது நடுங்கும் விரல்களால் அழுத்தத் தொடங்கினார்.

## கல்கி

*கல்கி அவர்கள் 1899-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9-ம் தேதி பழைய சென்னை மாகாணத்தில் ஒன்றிணைந்த தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள மயிலாடுதுறை அருகே அமைந்த பட்டமங்களம் எனும் ஊரில் ஒரு பிராமணக் குடும்பத்தில் பிறந்தார். ஆரம்பப்பள்ளிப் படிப்பைத் தனது கிராமத்தில் முடித்த பிறகு அவர் திருச்சியில் உள்ள தேசிய உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தார். 1921-ல் மகாத்மா காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தைத் துவங்கியபோது, அவரது கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு கல்கி தனது பள்ளிப்படிப்பைப் பாதியில் துறந்து இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார். 1922-ல் சுதந்திரப் போராட்டத்தில் பங்கு பெற்றதற்காக ஓராண்டு சிறைத் தண்டனை அனுபவித்தார். 1923-ல் அவர் நவசக்தி என்னும் பத்திரிக்கையின் துணை ஆசிரியராகப் பணியாற்றினார். அவருடைய முதல் புத்தகம் ஏட்டிக்குப் போட்டி 1927-ல் வெளியானது. கல்கியின் படைப்புகள் நாட்டுடைமை ஆகிவிட்டமையால், அவருடைய பல படைப்புகள் இணையத்தில் பல தளங்களில் கிடைக்கின்றன.*





# எழுத்தின் அனுபவங்கள்.....

## நந்தினிசேவியர்



எல்லா ஆரம்ப எழுத்தாளர்கள் போல் நானும் தமிழக எழுத்தாளர்களின் நூல்களில் ஆழ்ந்திருந்தேன். எனது மூத்த சகோதரன் வாங்கி வைத்திருந்த இரண்டு நூல்கள் என்பார்வைக்குக் கிட்டின.

1. எஸ்.பொ. வின் "தீ."
2. செ.கணேசலிங்கனின் "ஒரே இனம்"

அந்தக் காலத்தில் தீயைப் புரிந்து கொள்ளும் பக்குவம் எனக்கு இருக்கவில்லை. ஆனால் ஒரே இனம் என்னை கவர்ந்துவிட்டது.

நான் வாசித்தறியாத ஒரு புது உலகையும் மாந்தரையும் அந்த நூல் எனக்கு அறியத்தந்தது.

அதில் "விளம்பரம் காவிகள்" என்று ஒரு கதை. சிறுவர்கள் வியாபாரத்திற்கு பயன்படுத்தப்படும் துன்பியல் நிகழ்வும், அவர்களது நேசம் விட்டுக்கொடுப்பு என்பவற்றை அழகாக சொல்லிய கதை.

நான் இடது சாரிய நிலைப்பாட்டை எடுப்பதற்கு என்னைத் தூண்டிய கதை. பின்னரே நீர்வை, ரகுநாதன், டானியல், ஜீவாவை வாசிக்கத் தொடங்கினேன்.

செ.யோகநாதன் இவர்களை வாசிக்கும்படி என்னை ஆற்றுப்படுத்தினார். முற்போக்கு இலக்கியப் பரிச்சயம் எனக்குக் கிட்டியது. நீர்வையின் மேடும்பள்ளமும், டானியல் கதைகள். ஜீவாவின் தண்ணீரும் கண்ணீரும், யோகநாதன் கதைகள் என்பனவற்றையும். செ.க வின் நல்லவன் தொகுப்பையும் தேடி வாசித்தேன். தீ யை விபரம் தெரிந்த காலத்தில் இரண்டாம் தடவை வாசித்தேன். அதன் பக்கம் என் கவனம் திரும்பவில்லை. உண்மை.!

"விளம்பரங்காவிகள்" சிறுவர்களும், அந்த விளிம்பு நிலை கதா மாந்தர்களும் இன்றுவரைஎன் மனதோடு நிறைந் துள்ளார்கள். விலகமுடியவில்லை. இலக்கிய மேதமை நிறைந்தவர்களுக்கு அந்தக்கதை சாதாரணமான கதையாக அப்போதும், இப்போதும் தெரியக்கூடும். ஒரு முற்போக்கு எழுத்தாளனான எனது உருவாக்கத்தில் அந்தக்கதை வகித்த பாத்திரத்தை நான் சொல்லித்தானாக வேண்டும்.

**மல்லிகைக் கதை.**

எனது கதைகளைப் பிரசுரிக்க நான் அலைந்தவன் அல்ல. மல்லிகையில் ஒரே ஒரு கதையை "அயல்கிராமத்தைச் சேர்ந்தவர்கள் " எழுதினேன். அது ஒரு சவாலான தருணம். அந்தக் கதையை நான் கொக்குவில் தொழில் நுட்பக்கல்லூ ரியின் தமிழ்ப்பாட ஆசிரியரின் பாடத்திற்கு கேட்கப்பட்ட ஒரு கேள்விக்காக எழுதினேன். கதை பிடித்துக்கொண்டதால் அவரது வெவ்வேறு வகுப்புகளில் அக் கதை பரவலாக வாசித்துக் காட்டப்பட்டது. ஈழநாடு நாவல் போட்டியில் பரிசு பெற்றதால் நான் எழுத்தாளனாக தொழில் நுட்பக் கல்லூரியில் அறியப்பட்டிருந்தேன். யாழ்வாசி (சிற்பி) யின் தமிழகத் திலிருந்து வெளிவந்து கொண்டிருந்த நா.பார்த்தசாரியின் "தீபம்" இலங்கைக் கடிதம் மூலமும் என் பெயர் அறியப் பட்டிருந்தது. நான் எழுதிய அக்கதையை எந்தப் பத்திரிகைக்கும் நான் அனுப்பவில்லை.

மல்லிகை ஆண்டுமலரின் விமர்சனக் கூட்டமொன்றில் நான் வைத்த குற்றச்சாட்டுக்கு விடப்பட்ட சவாலுக்காக கைவசம் இருந்த அந்தக் கதையை மல்லிகைக்கு அனுப்பினேன். 1972. நவ. பேரா. கைலாசபதி அவர்களின் அட்டைப் படத்துடன் வெளிவந்த மல்லிகையில் அக்கதை பிரசுரமாகியது. இத்தகவல் ஏலவே என்னால் தெரிவிக்கப் பட்டுள்ளது.. நான் பின்னரும் மல்லிகைக்கு எழுதவில்லை. அதற்கு அரசியல் கருத்துவேறுபாடு காரணமாக இருந்தது. அந்த ஆண்டு வெளிவந்த மல்லிகை சிறுகதைகளில் தேறக் கூடிய கதையாக இ.முருகையனால் அடையாளம் காணப்பட்ட கதை அது.

செங்கை ஆழியான் தொகுத்த "சுதந்திரன் கதைகள்" தொகுப்பில் நான் விடுபட்டதுபோல் அவர் தொகுத்த " மல்லிகைச் சிறுகதைகள் தொகுப்புகளிலும் நான் விடுபட்டி ருந்தேன். எனது மேற்படி கதையை இந்தியா விலிருந்து வெளிவந்து கொண்டிருந்த காலாண்டு சஞ்சிகையில் மீள் பிரசுரம் செய்ய எடுக்கப்பட்ட முயற்சியும் கைகூடவில்லை. எனது அக்கறையின்மையும் இதற்கு ஒரு காரணம் என சிலர் குறிப்பிட்டுள்ளதை நான் என் காதால் கேட்டுள்ளேன். நான் அப்போதும், இப்போதும் அப்படிப்பட்டவன்தான்.

என்ன செய்வது மாறமுடியவில்லை. என்மீது அபாண்டப் பழி போடுபவர்களுக்கும்

இது தெரியும் எனது அனுபவத் தொடரில் இதனை மீள்பதிவு செய்கிறேன்.

(இன்னும் வரும்...)

# எம்மவரை வாசிப்போம் வாருங்கள்




ஆசிரியர் :
த. ஆனந்தமயில்
ஆண்டு : 2008
வெளியீடு: வர்ணா
வகை: சிறுகதை
பக்கம்: 65
விலை : 200ரூபா




ஆசிரியர் : மலரன்னை
ஆண்டு : 2020
வெளியீடு: ஜீவநதி
வகை: சிறுகதை
பக்கம் : 120
விலை : 350 ரூபா





ஆசிரியர் :தேவகாந்தன்
ஆண்டு : 2020
வெளியீடு: ஜீவநதி
வகை: சிறுகதை
பக்கம்: 124
விலை : 400ரூபா




ஆசிரியர் :க. சட்டநாதன்
ஆண்டு : 2006
வெளியீடு: பொன்னி
வகை: சிறுகதை
பக்கம்: 128
விலை : 250 ரூபா




ஆசிரியர் : குந்தவை
ஆண்டு : 2016
வெளியீடு: செல்லையா ஐயர்
வகை: சிறுகதை
பக்கம்:68
விலை : 200 ரூபா




ஆசிரியர் :
ச. முருகானந்தன்
ஆண்டு : 2004
வெளியீடு: கலைஒளி
வகை: சிறுகதை
பக்கம்: 108
விலை : 300ரூபா

வாசிப்பதனால் மனிதன் பூரணத்துவம் அடைகிறான்